# பல்பண்பாட்டுத் தகைமைகளை ஊக்குவித்தல்



பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்

கற்பித்தல் மதியுரைகள்

4

# பல்பண்பாட்டுத் தகைமைகளை ஊக்குவித்தல்

செலிகா அக்டஸ்

ஹுஸ்னியா கோக்டஸ், றொல்ப் கொல்லொப்,
பசில் ஷாடர், வில்ற்ருட் வைடிங்கர் ஆகியோரின்
ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டது

பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்

**கற்பித்தல் மதியுரைகள்** **4**

| | |
|---|---|
| | தொடர்: "பாரம்பரியமொழி கற்பித்தற் கருவிகள்" (HSU: in Switzerland HSK: தாய்மொழியும் பண்பாடும் அறிவுறுத்தல்): கற்பித்தல் மதியுரைகள் 4<br>சூரிச் ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டுக் கல்வித் திட்டங்கள் நடுவகத்தால் வெளியிடப்பட்டது.<br>PH ZH IPE – INTERNATIONAL PROJECTS IN EDUCATION ZURICH UNIVERSITY OF TEACHER EDUCATION |
| திட்ட முதல்வர் / பதிப்பு: | பசில் ஷாடர் |
| நூலாசிரியர்: | செலிகா அக்டஸ் மற்றும் பின்வருவோரின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டது. றொல்ப் கொல்லொப், பசில் ஷாடர், வில்ற்ருட் வைடிங்கர் |
| HSU பதிப்புத் துணை: | ஹுஃஸ்னியா கோக்டஸ், சூரிச் |
| தேர்வு – கற்பித்தல் முறையைத் தேர்வுசெய்து பார்த்தவர்கள்: | நெக்சத் மாலொகு, சூரிச் (HSK அல்பானியன்)<br>ஹுஃஸ்னியா கோக்டஸ், சூரிச் (HSK துருக்கி)<br>ட்ரகனா டிமித்திரியேவிச் (HSK சேர்பியன்)<br>எலிசா ஏஷிமன்-பெரெரா மற்றும் ராக்கேல் ரோஸா (HSK போர்த்துகீஸ்)<br>ஹசிர் மெமெத்தி, வியன்னா ரிபத் ஹாமத்தி, டுசில்டோர்ப் |
| விளக்கப் படங்கள், ஒட்டுமொத்த வடிவமைப்புக் கருத்து மற்றும் நிறைவேற்றுகை: | பார்பரா முல்லெர், ஏர்லென்பாஹ் |
| மொழிபெயர்ப்பு: | தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து<br>Tamil Education Service Switzerland<br>பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ், Prof. Dr.<br>முனைவர் கந்தையா ஸ்ரீகணேசன், Dr. |
| | "பாரம்பரிய மொழிக் கற்பித்தற் கருவிகள்" நூல் தொடர் சுவிஸ் கலை பண்பாட்டுப் சமஷ்டி பணியகத்தின் (BAK) துணையுடன் உருவாக்கப்பட்டது.<br>Schweizerische Eidgenossenschaft Confédération suisse Confederazione Svizzera Confederaziun svizra<br>Eidgenössisches Departement des Innern EDI **Bundesamt für Kultur BAK** |
| | இக் கருத்திட்டம் ஐரோப்பிய ஆணைக்குழுவின் துணையுடன் பகுதி நிதியுதவி பெற்றது. இவ்வெளியீட்டின் பொருளடக்கத்திற்கு நூலாசிரியர்களே பொறுப்புடையவர்கள்; இதிலுள்ள தகவல்களின் தொடர் பயன்பாட்டுக்கு ஆணைக்குழு பொறுப்பேற்காது.<br>AMuSE<br>Lifelong Learning Programme |

# பொருளடக்கம்


நூல் தொடரின் முன்னுரை "பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்" 7

அறிமுகம்

1 பா.மொ.க வில் பல்பண்பாட்டுத் திறனை ஊக்குவித்தல்: காரணங்களும் தனிச்சிறப்பும் 8

2 இந்நூலின் இலக்குகளும் கட்டமைப்பும் 8

3 பா.மொ.க கல்வியில் திறன் திசைமுகப்படுத்தல் 9

4 "வாழும் உலகு" என்னும் எண்ணக்கரு ஓர் இன்றியமையாத அடிப்படையாக. 9

1 அலகு 1: பண்பாடும் அடையாளமும் – ஒரேமாதிரியானவை எனினும் வேறுபட்டவை (செலிகா அக்டஸ்)

1.1 இதுதான் நான் 14

1.2 உட்பக்கப் பார்வை – வெளிப்பக்கப் பார்வை 15

1.3 நானும் மற்றவர்களும் 19

1.4 என்னைப் பறக்க விடுங்கள் 20

1.5 உள்ளடக்கப்பட்டதும் வெளியேற்றப்பட்டதும் 22

1.6 தன் அடையாள மூலக்கூறு 23

1.7 ஒற்றுமையே பலம் 24

2 அலகு 2: புலம்பெயர் கதைகள் – எங்கள் வகுப்பறைக்குள் உள்ள உலகம் (செலிகா அக்டஸ்)

2.1 காற்றோடு போனது 30

2.2 எனது வகுப்பறைக்குள் புலம்பெயர் கதைகள் 31

2.3 எனது புலம்பெயர் வரலாறு எனது தனிப்பட்ட திறமைகள் 32

2.4 எனது தாயக நிலங்கள் – தன்வரலாற்று கதை சொல்லுதல் 33

2.5 நேற்று – இன்று – நாளை 34

2.6 நான் வரலாறு எழுதுகிறேன். 36

2.7 திட்ட நாள்களுக்கான மூன்று ஆலோசனைகள். 37

## 3 அலகு 3: எங்கள் மொழிகள் – நாங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசுகிறோம்! (பசில் ஷாடர்)


| | | |
|---|---|---|
| **3.1** | மொழி வெளிக்கோடுகள் | 42 |
| **3.2** | இருமொழி அல்லது பன்மொழி எழுத்துக் கருத்திட்டங்கள் | 43 |
| **3.3** | மொழி – தன்வரலாற்றுக் கருப்பொருள்கள் | 44 |
| **3.4** | பல்வேறு மொழிகளில் இலத்திரனியல் ஊடகத்தினைப் பயன்படுத்துதல் | 45 |
| **3.5** | எங்கள் மொழியிலும் பிற மொழிகளிலும் பேச்சு மொழிகள் | 46 |
| **3.6** | பல்பண்பாட்டுக் கேள்விகளுக்கான தொடர்பு | 47 |
| **3.7** | மொழிப் பயன்பாடு: வேறுபட்டது, சூழ்நிலை சார்ந்தது. | 48 |


## 4 அலகு 4: பல்பண்பாட்டுத் தொடர்பாடல் – ஒவ்வொருவருடனும் இணங்கிப் போதல் (செலிகா அக்டஸ்)


| | | |
|---|---|---|
| **4.1** | இங்கு ஏதோ சரியாக இல்லை. | 52 |
| **4.2** | மொழியினால் வழியைக் காட்டுக | 54 |
| **4.3** | கூர்மையாக செவிமடுத்தல் | 55 |
| **4.4** | சந்திக்கச் செல்லல் | 57 |
| **4.5** | இக்கட்டான சூழ்நிலைகளை நான் எவ்வாறு கையாளுகிறேன்? | 59 |
| **4.6** | பண்புக்கூறுகள் | 61 |
| **4.7** | தொடர்பாடலை எது தடுக்கின்றது? | 63 |


## 5 அலகு 5: மோதல்கள் – தீர்வுகளை ஒன்றாக நாடுதல் (வில்ற்ரூட் வைடிங்கர்)


| | | |
|---|---|---|
| **5.1** | எல்லாம் சரிதானே! உண்மையாகவா? | 68 |
| **5.2** | இதற்கு என் மறுப்பு | 69 |
| **5.3** | கூடாத செயல்களுக்கு நல்ல காரணங்கள்? | 70 |
| **5.4** | அப்படித்தான் நாங்கள் அதைச் செய்கிறோம்! | 70 |

| | | |
|---|---|---|
| **5.5** | பொறுமையாக இருத்தல் – அல்லது புத்திசாலி விட்டு நீங்குகிறார். | 71 |
| **5.6** | எனது முரண்பாட்டு வெப்பமானி | 72 |
| **5.7** | சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள் – ஒவ்வொரு சிக்கலுக்கும் | 73 |

## 6 அலகு 6: சனநாயகமும் சிறுவர் உரிமைகளும் – நாங்களும் தலையிடுவோம் (றொல்ப் கொல்லொப்)

| | | |
|---|---|---|
| **6.1** | ஒரு பூங்கொத்து | 78 |
| **6.2** | எல்லோரும் வேறுபட்டவர்கள – எல்லோரும் ஒரே மாதிரி | 79 |
| **6.3** | நான் ஒரு மந்திரவாதியானால். | 80 |
| **6.4** | பலூன் பறப்பு | 81 |
| **6.5** | வகுப்பறையில் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள் | 83 |
| **6.6** | மனித உரிமைப் பதாகை | 84 |
| **6.7** | சிறுபான்மையினர் | 85 |
| | பகுதித் திறன்களுக்கு இணங்கக் கற்பித்தல் மதியுரைகள் பற்றிய கண்ணோட்டம் | 87 |
| | **நூல் விபரப் பட்டியல்.** | 88 |

## விளக்கங்கள் மற்றும் சுருக்கங்கள்

| | |
|---|---|
| முதல்மொழி: | தாய்மொழியாகவும் அல்லது குடும்ப மொழியாகவும் அமைவது: ஒரு குழந்தை வீட்டில் கற்றுப் பேசுவது முதல் மொழி. சில பிள்ளைகளுக்கு இரண்டு முதல் மொழிகள் உள்ளன. |
| பள்ளிமொழி: | குடிபுகு நாட்டுப் பள்ளிகளில் பேசப்படும் மொழி. அத்துடன் உள்ளூர் பேச்சுமொழி சூழல் மொழியாகக் கொள்ளப்படும். |
| சுருக்கங்கள்: | மா = மாணவர்<br>ஆ = ஆசிரியர்<br>பா.மொ.க = பாரம்பரிய மொழி கற்பித்தல்<br>எ.கா. = எடுத்துக்காட்டு |

விளக்கம்:
கற்பித்தல் முன்மொழிவுகள் தொடர்பான ஒழுங்கு வடிவம். வகுப்பு, நேரத் தேவைகள் ஆகியவற்றைக் குறிக்கும் படங்கள்:

| | |
|---|---|
|  | த.வே. = தனி வேலை |
|  | கூ.வே. = கூட்டாளியுடன் வேலை செய்தல் |
|  | சி.கு. = சிறு குழு |
|  | மு.வ. = முழு வகுப்பும் |
| 1ம் - 9ம் தரம் | ... தொடக்கம் ... வரை என்பதற்குப் பொருந்தும். (எ.கா. : 3ம் - 6ம் வகுப்பு). இந்நிலை தனிப்பட்ட மாணவர்களின் தேவைகளுக்கேற்ப மாற்றமடையலாம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். |
| 10 - 20 மணித்துளிகள் | ஏறத்தாழ தேவைப்படும் நேரம், எ.கா. : 20 மணித்துளிகள் (மதிப்பிடப்பட்டநேரம், பயிற்சியாளரால் வகுப்பின் நிலை மற்றும் தேவைகளுக்கேற்ப முடிவுசெய்யப்பட வேண்டும்). |

# நூல் தொடரின் முன்னுரை "பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்"

ஒரு பிள்ளையை அடையாளப்படுத்தவும், அப்பிள்ளையின் மொழித்திறனை வளர்க்கவும் ஜெர்மனியிலும் ஒஸ்ரியாவிலும் "Herkunfts- sprachlicher Unterricht (HSU)" எனவும் சுவிற்சர்லாந்தில் "Unterricht in Heimatlicher sprache und Kultur (HSK)" எனவும் வழங்கும் பாரம்பரியமொழிக் கற்பித்தல் (பா.மொ.க HLT) அல்லது தாய்மொழி கற்பித்தல் துணைசெய்கிறது. இது பன்மொழித்துவத்தை ஊக்குவிப்பதுடன் மதிப்புள்ள தன்னிலை மற்றும் சமூகநிலை வளமாகவும் பணி செய்கிறது. இவ்வுண்மை பற்றிய விழிப்புணர்வு ஆய்வு மற்றும் கட்டமைப்பு வழிகாட்டல்களான ஐரோப்பியப் பேரவையின் R(82)18 மற்றும் R(98)6 பரிந்துரைகளினால் உருவானது. எனினும், இத்தகைய கற்பித்தல் வழமையான பாடத்திட்ட வகுப்பறைக் கற்பித்தலைவிட பெரும்பாலும் மிக இடர்ப்பாட்டு நிலைகளிலேயே நடைபெறுகிறது. இதற்குப் பல காரணிகள் பொறுப்பாயுள்ளன:

- பல இடங்களில் பாரம்பரியமொழிக் கல்வி நிறுவன நிலையிலும் நிதி நிலையிலும் காப்பற்ற வலுவிலேயே உள்ளது. எடுத்துக்காட்டாக சுவிற்சர்லாந்தில், பாரம்பரியமொழி ஆசிரியர்களுக்கு அவர்கள் தாய் நாட்டினால் அல்லது பெற்றோர்களினாலேயே நிதி வழங்கப்படுகிறது.

- பாரம்பரியமொழி வகுப்புகள் பெரும்பாலும் வழமையான வகுப்பறைக் கற்பித்தலுடன் மிகக் குறைவான முறையிலேயே தொடர்புபடுத்தப் பட்டுள்ளன. வழமையான பாடத்திட்ட ஆசிரிய அணியுடனான தொடர்பும் கூட்டுறவும் பெரும்பாலும் மிகக் குறைந்த முறையிலேயே மேம்படுத்தப் பட்டுள்ளன.

- பாரம்பரியமொழி வகுப்புகள் கிழமையில் இரண்டு மணி நேரம் மட்டும் அமைவதால், ஆக்கநிலையான, இடையீடற்ற கற்றல் கடினம் ஆகின்றது.

- பாரம்பரியமொழி வகுப்புகள் பெரும்பாலும் விருப்பக்கல்வியாக அமைந்தமையால், மாணவர்களின் பங்களிப்புச் சிறிதாகக் காணப்படுகிறது.

- பாரம்பரியமொழி வகுப்புகள் பல்வகுப்புக்களை இணைத்து கற்பிக்கும் முறையை கொண்டுள்ளமையால், 1-9ம் வகுப்பு வரையுள்ள மாணவர் ஒரு வகுப்பிலே சேருகின்றனர். இது பெரும் உள்வாரி வேறுபாட்டினைக் கையாள்வதையும் கற்பித்தல் திறனையும் ஆசிரியரிடமிருந்து வேண்டிநிற்கின்றது.

- பாரம்பரியமொழி வகுப்பறைகளில் பலவகைப்பட்ட மாணவர் குழுமம் இருப்பது போல மாணவர்களின் மொழித் தகைமையும் வேறுபட்டதாயுள்ளது. சிலர் வீட்டில் தம் தாய்மொழியின் எழுத்துமொழிவழக்கிலும் பேச்சுமொழி வழக்கிலும் நல்ல செயற்றிறன் பெற்றிருக்கும் அதே வேளை, மற்றவர்கள் பேச்சுமொழியில் மட்டுமே பேசுபவராயுள்ளனர். புதிய நாட்டில் ஏற்கனவே பல ஆண்டுகளாக வாழ்ந்துவரும் பாரம்பரியமொழி பேசுபவர்களாகிய இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர்க்கு, அங்கு பேசப்படும் மொழி (எ.கா. ஜெர்மன்) மேலாதிக்க மொழியாக அமைய அவர்கள் முதல் மொழியாற்றல் பேச்சுமொழியாக வரையறுக்கப்படுவதுடன், அதுவும் குடும்பச் சிக்கல்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட சொற்கோவையுடன், வாய்வழியாக மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது.

- பாரம்பரியமொழி ஆசிரியர்கள் தம் தாய் நாடுகளில் பொதுவாக நல்ல அடிப்படைக் கல்வியைப் பெற்றிருப்பார்கள். ஆனால் குடிபெயர்ந்த நாடுகளில் பல்வகுப்புச் சூழ்நிலையில் கற்பித்தலின் உண்மை நிலைகளுக்கும் அதன் நுட்பங்களுக்கும் அவர்கள் முன்னேற்பாடாயில்லை. தொடர்கல்வி விருத்தி வாய்ப்புகள் வாழும் நாடுகளில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

"பாரம்பரியமொழி கற்பித்தற் கருவிகள்" தொடர் தாய்மொழிக் கல்வி வகுப்பு ஆசிரியர்களுக்கு அவர்களுடைய இன்றியமையாத வேண்டப்படுகிற பணிக்குத் துணை செய்கிறது. இதனூடாக இத்தகைய உகந்த தரமுள்ள கற்றலுக்கு பங்களிக்க எண்ணுகிறது. மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய குடிபெயர் நாடுகளின் (அடிப்படைகளும்... என்னும் தொகுதியை ஒப்பிடுக) தற்போதைய ஆசிரியப்பணி மற்றும் கற்பித்தல் பற்றிய பின்னணிகள் மற்றும் கோட்பாடுகளின் மீளாய்வு, வகுப்பறைக்கான உருப்படியான நடைமுறை மதியுரைகளையும் மாதிரிகளையும் கொண்ட பணிநூல்கள் "கற்பித்தல் மதியுரைகள்" நூலின் துணையுடன் இந்நோக்கினை மேலும் முன்னெடுக்கின்றன.
மொழியியல் தகைமையை முன்னெடுப்பதையே இவை வலியுறுத்துகின்றன. கற்பித்தல் மதியுரைகள் வேண்டுமென்றே, வழமையான பாடத்திட்டம் அதன் கற்பித்தல் கருவிகள் ஊடாக வந்த மாணவர்கள் நன்கு அறிந்த கற்பித்தற்கலைக் கோட்பாடுகள் நடைமுறைகளை நோக்கிச் செல்கின்றன. இத்தகைய நன்கறிகை, பாரம்பரியமொழிக் கல்விக்கும் வழமையான பாடத்திட்டக் கற்பித்தலுக்குமிடையே ஒரு நெருக்கத்தினை கொண்டுவந்து அவை இரண்டுக்குமிடையே முடிந்தளவு பெரியதோர் இணைப்பினை உறுதிப்படுத்துகின்றது.
பாரம்பரிய மொழிக் கல்வித் திட்டங்களின் ஆசிரியர்கள் என்ற முறையில் அவர்கள் தங்களை வழமையான பாடத்திட்டத்தில் தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள கற்பித்தல் அணுகுமுறைகளுடனும் குறிப்பிட்ட நடைமுறைகளுடனும் நன்கு இணைத்துக்கொள்ள, அவர்கள் மேலும் பயற்சியினைப் பெறுகின்றனர். இது இருமொழி, இருபண்பாட்டு அடிப்படையில் வளர்ந்துவரும் மாணவர்களின் கல்விச் செயன்முறையில் இணையான மதிப்புள்ள பங்காளிகளாக தம்மை உயர்த்துவதைப் வலுப்படுத்தும் என நம்பப்படுகின்றது.

# அறிமுகம்

## 1. பா.மொ.க வில் பல்பண்பாட்டுத் திறனை ஊக்குவித்தல்: காரணங்களும் அதன் பொருளும்

புலம்பெயர் நாடுகளிலும் (அதேபோல் வேறு பல இடங்களிலும்) உள்ள சிறுவர்களும் இளம்பருவத்தினரும் பண்பாட்டு அடிப்படையிலும், மொழியியல் அடிப்படையிலும் பெரிதும் வேறுபட்ட வேற்றியல்புள்ள சூழல்களில் வளர்கிறார்கள். இப் பல்வேறுவகைப்பட்ட தன்மை நாளாந்த பாடசாலை வாழ்வுச் சூழலிலும் வெளிப்படுகிறது. இத்தகைய சூழலில் எந்த ஒரு வகுப்பறையும் பன்மொழிகளையும் பல்பண்பாடுகளையும் கொண்டமையாமல் விடப்படவில்லை. அந்த இடங்களில் புலம்பெயர் பின்னணியுடன் கூடிய பிள்ளைகளின் விகிதாசாரம் மொத்த மாணவர் தொகையின் 30, 40, 50 சதவிகிதம் அல்லது அதைவிட அதிகரிக்கவில்லை. பாரம்பரிய மொழிக்கல்வி வகுப்புகள் பாடசாலையின் நிறுவனச் சூழலில் ஒரு விதிவிலக்காக இருக்கின்றன. பிரதேச பேச்சுமொழிகள் மற்றும் ஒரு பகுதி தேசியம் சார்ந்த வேறுபாடுகள் இருந்தாலும் (எடுத்துக்காட்டாக வெவ்வேறு அராபிய நாடுகளிலிருந்து அராபியமொழி பேசுவோர்) ஓர் அராபிய, துருக்கிய அல்லது அல்பானிய பா.மொ.க பற்றி நாம் பேசமுடியும்.

பாடசாலையின் முதன்மைப்பணி என்பது பிள்ளைகளையும், இளம்பருவத்தினரையும் சமூகவாழ்வுக்கு தயார் பண்ணுதல் ஆகும். அதாவது எங்களைப் பொறுத்த வரையில் பல்பண்பாட்டு, பன்மொழிச் சூழலில் மாணவர் வாழ்வதற்கான தயார்ப்படுத்தலை ஏற்படுத்துவது ஆகும். இந்த சவால்கள், வழக்கமான வகுப்புகளுக்கும் பா.மொ.க வுக்கும் தொடர்புடையது, இதனால் வழமையான வகுப்புக்களுக்கு இணங்க உள்ளடக்கத்தையும் கருப்பொருள்களையும் குடியிருக்கும் நாட்டுக்கு இணக்கமுறச் செய்யும் அதே வேளையில் பா.மொ.க (அ) நாம் பிறந்து வளர்ந்த நாட்டின் பண்பாடு, மொழியோடு தொடர்புபடுத்துகிறது, (ஆ) புலம்பெயர்ந்து வாழும் நாட்டின் வாழ்வோடு தொடர்புபடுத்தும் கருப்பொருள்களை வலியுறுத்துகிறது. தங்கள் கல்விச் செயற்பாடுகளை நடாத்துவதற்காக இருபகுதியினரும் பல்பண்பாட்டு, பன்மொழி சமூகங்களில் ஒரு வெற்றிகரமான வாழ்வுக்கு இன்றியமையாத ஒரு தொடரான திறன்களை வளர்ப்பதற்குச் சுறுசுறுப்பான முறையிலே பங்களிக்க வேண்டும். அவையாவன, எடுத்துக்காட்டாக, முரண்படும் தன்மையும், பொறுமையும், ஆர்வமும் ஏற்றுக்கொள்ளலும் (மறுதலிப்புக்குப்பதிலாக) மற்றைய பண்பாடுகளுடன் தொடர்புபட்டு ஒரு வாழ்வுக்கான வழியும், ஒருவர் தன்னுடைய விழுமியங்கள் நியமங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் என்பவற்றை மீள்பரிசீலனை செய்வதற்கான விருப்பமும் உள்ளடங்கும்.

குடியேறிய மக்களின் குடும்பங்களிலிருந்து வந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு இன்னொரு இன்றியமையாத பல்பண்பாட்டுத் திறன் ஒன்று உண்டு : பிறந்து வளர்ந்த நாட்டுப் பண்பாடினையும் குடியேறிய நாட்டுப் பண்பாடினையும் நோக்கும்போது மேம்பாட்டுக்கு ஊறு செய்யும் (சிக்கல்கள், முரண்பாடுகள்) பண்பாடுகளுக்கிடையில் இருந்தும் பெருமளவு இறுக்கமற்ற நியமங்கள் சமூகவிழுமியங்களிலிருந்தும் உருவாகலாம். பா.மொ.க ஆசிரியர்கள் இது தொடர்பாக மிக்க பெறுமதியான பங்களிப்புகளைச் செய்யலாம். ஏனெனில், வழமையான பாடத்திட்ட ஆசிரியர்களை விட இவர்கள் பெரும்பாலும் இரு பண்பாட்டுச் சூழல்களுடன் நன்கு அறிமுகமானவர்கள். இந்தத் தொகுதியில் அடங்கியுள்ள கற்பித்தல் மதியுரைகள் கருப்பொருள் வேறுபாட்டுடனான தலைப்புப் பரப்புகளுக்கு பா.மொ.க பங்களிப்புகள் எப்படிப்பட்டன (கீழே பார்க்கவும்) என்பதைச் சுட்டுகின்றன. அவர்களுடைய நடைமுறைப்படுத்தல், தழுவல், விரிவாக்கம் உணர்வூட்டும் கிளர்ச்சியூட்டும் பாடங்களுக்கு இட்டுச் செல்லுமாயின், இவ்வெளியீட்டின் நோக்குகள் அடையப்பட்டனவாகும்.

## 2. இத்தொகுதியின் இலக்குகளும் கட்டமைப்பும்

இந்த வழிகாட்டி பல்பண்பாட்டுத் திறன்களின் மேம்பாட்டுக்கான பின்பற்றத்தக்க கருப்பொருட்களின் வழியே பா.மொ.க மாணவர்க்கும் ஆசிரியர்களுக்கும் பக்கத்துணை செய்கிறது. தாம் வாழும் சூழல் நிலைமைகளுக்கும் சமூகப் பின்னணிக்கும் இடையிலான முரண்பாட்டில் பிள்ளைகளும் இளம்பருவத்தினரும் முகங்கொடுக்க அவர்களை இவை செயற்படுத்தும். ஒரு பரந்துபட்ட, பெரிதும் முரண்-தன்மையான, நிச்சயமற்ற சமூகத்தில் எதிர்பார்ப்புக்களை செயற்படுத்தவும் மோதல் சூழல்களை எதிர்கொள்ளவும் போதுமான முறையில் தொடர்பாடல்களை ஏற்படுத்தும்பொழுது அவர்களது பல் பண்பாட்டு மற்றும் பன்மொழி அடையாளம் ஒரு பெறுமதிமிக்க வளமாக பணியாற்றமுடியும்.

இந்தத் தொகுதியானது ஒரே மாதிரியான அமைப்புடன் ஆறு கருப்பொருள் அலகுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் ஒரு சுருக்கமான அறிமுகத்துடன் தொடங்குகிறது. அத்துடன் வெவ்வேறான திறன்விருத்திப் பரப்புகளுடன் தொடர்புபட்ட ஒரு வேறுபட்ட கற்பித்தல் பரிந்துரைகளை உள்ளடக்கியுள்ளது.(நூலின் இறுதிப்பகுதியில் உள்ள கண்ணோட்டத்தையும் கீழேபார்க்கவும்.) கற்பித்தல் மதியுரைகள் குறிக்கப்பட்ட தரத்துடனும் தேர்ச்சிமட்டங்களுடனும் ஒப்புநோக்கப்பட்டன. எனினும் எல்லாமே உயர்தர கீழ்ப்பிரிவு வகுப்புகளுக்கு தேவையான மாற்றங்களுடன் பயன்படுத்தப்படமுடியும்.

சிறுவர்களினதும், இளைஞர்களினதும் உண்மையான மற்றும் வாழும் சூழல் மீதான திசைமுகப்படுத்தல்தான் இந்த ஆறு அலகுகளுக்குமான கருப்பொருள் தெரிவுக்கு வகைப்பாடாக அமைந்தது. மாணவர்களை அதிகமாகவும் உண்மையாகவும் அவர்களது செயற்பாட்டுச் சாத்தியங்களுக்கும் தன்திறன் தன்மைக்கும் உதவும் முகமாக முரண்தன்மைகள், சாத்தியங்கள், வளங்கள், தீர்வுகள் மற்றும் ஒரு பிரிவை ஊடறுத்துச் செல்லும் செயலாக எல்லா வகுப்புகளிலும் பல்பண்பாட்டுக் கற்றலை ஊக்குவிக்க கற்பித்தல் மதியுரைகள் வடிவமைக்கப்பட்டன. வழமையான கல்வி மற்றும் பா.மொ.க குழுக்களுடனான ஒத்துழைப்பு, வடிவமைப்பில் எப்போதும் உள்ளடக்கப்பட்டதாகவும் அதிகளவு விருப்பத்துக்குரியதாகவும் இருந்தது.

ஆறு அலகுகளும் பின்வரும் ஒழுங்கில் தரப்பட்டுள்ளன (அடைப்புக்குறிக்குள் முதன்மைத்திறன் பகுதிகள்):

**1 பண்பாடும் அடையாளமும்:** ஒரேமாதிரி எனினும் வேறுபட்டது! (அடையாள மேம்பாட்டுக்கான ஊக்குவிப்பு)

**2 புலம்பெயர் கதைகள்:** உலகம் எங்கள் வகுப்பறையில் (தன்வரலாற்றுக் கற்கை)

**3 எங்கள் மொழிகள்:** நாங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசுகிறோம்! (ஒவ்வொரு நாள் வாழ்வின் பன்மொழி ஒரு வளம் என்னும் விழிப்புணர்வு)

**4 பல்பண்பாட்டுத் தொடர்பாடல்:** ஒருவரோடொருவர் ஒத்துப்போதல் (தொடர்பாடல் திறன்)

**5 மோதல்கள்:** தீர்வுகளை ஒன்றாக நாடுதல் (மோதல்களைத் தவிர்க்கவும் தீர்ப்பதற்குமான ஆற்றல்)

**6 சனநாயகமும் சிறுவர் உரிமையும்:** நாங்கள் தலையிடுவோம் (நீதி மற்றும் சனநாயகம் பற்றிய எண்ணக்கருவை விளங்கிக்கொள்ளல்)

மாணவர்களின் சொந்த அனுபவங்கள் அவதானிப்புகள் மற்றும் மனப்பாங்குகளுடன் பல பாடப்பொருட்கள் தொடர்புபட்டவை. வகுப்பறையுள் இந்தத் தலைப்புகளுடன் இயங்குவது ஆசிரியரின் பெரும் உணர்திறன் நம்பிக்கை மற்றும் ஏற்றுக்கொள்ளும் முறையினால் கட்டியெழுப்பப்பட்ட வகுப்பறை சூழல் என்பவற்றை வேண்டி நிற்கிறது. இவ்வின்றியமையா முன்தேவைகள் இல்லாது மாணவர்கள் தம்மை மனந்திறக்க முடியாததாகலாம் அல்லது மேற்குறிக்கப்பட்ட இலக்குகளை முழுமையாகவோ பகுதியாகவோ எட்டப்படமுடியாது.

## 3. பா.மொ.க கல்வியில் திறன் சார்ந்த நோக்குநிலை

தற்கால கற்பித்தற்கலையின் இன்றியமையாத கோட்பாடாக திறன் திசைமுகப்படுத்தல் "அடிப்படைகளும் பின்னணிகளும்" கைநூலில் (இயல்கள் 2, 5, 9) விரிவாக விளக்கப்பட்டுள்ளது. தற்போதைய தொகுதியின் தலைப்புக்கு, குறிப்பாக மூன்று திறன்கள் முதன்மையான இன்றியமையாத தன்மைகள் உடையன.

அ) *விளங்கிக்கொள்ளும்திறன்*, இங்கு அடையாளம் காணும் திறனுடன் விபரிக்கப்பட்டுள்ளது: அகம் சார்ந்த திறன்களை வளர்க்கவும், தொடர்பாடலின் வழிமுறைகளின் பகுதியாக ஒருவரைப் பார்ப்பதற்கும் எல்லாப் புலன் உணர்வுகளாலும் மற்றும் அக உணர்வினை உணர்ந்துகொள்வதற்குமான புலன்சார்ந்த, உணர்ச்சிசார்ந்த திறனின் அறிகை வளர்ச்சியுடன் இது தொடர்புற்றுள்ளது. கற்போர் அவர்களது உணர்ச்சிகரமான உணர்வுடன் தமக்கென ஆக்கிக்கொள்ளும் பொருத்தமான வடிவங்களுடனும் சீரிய முறையிலே அடையாளம் காணப்படுகின்றனர்.

ஆ) *பிரதிபலித்தல் திறன்* (வெளிப்படுத்தும் திறன்) மொழியூடாக காத்திரமான தொடர்புகளைப் பெருக்கும் நிலையில் அறிகைத்திறன் வளர்ச்சியுடன் பிரதிபலித்தல் திறன் தொடர்புபடுகிறது. அதாவது உருவற்ற கருத்-துகள், அவைபற்றி கலந்துரையாடி பிரதிபலித்தல்.

இ) தொடர்பாடல் திறன், ஒருவர் வாழும் சூழலில் தொடர்பாடல் செயலால் உணரப்பட்டு பிரதிபலித்தலை 'செயற்படுத்துவதற்கான தொடர்பாடல் திறன்' வெளிப்படுத்துகிறது. அதன் விளைவாக ஒரு தனியாள் தான் வாழும் சூழலில் செல்வாக்குக்கு உட்படுத்தி செயற்படுத்துவதற்கான புதிய நோக்குகளையும், புதிய வெளிப்பாட்டு வடிவங்களையும் வளர்க்க முடியும்.

ஹொல்ஸ்ப்றெஹறின் கூற்றின்படி (1999, நூற்பட்டியல் குறிப்புகளை பார்க்கவும்), பல்பண்பாட்டு திறன்கள் என்னும் எண்ணக்கரு பாடநிலையையும் வாழிடச் சூழல் மற்றும் சமூக நிலையுடன் இணைப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இதனால், பிள்ளைகளும் இளவயதினரும் தம்முடைய தன்பயனைப் பட்டறிந்துகொள்வர். இந்த நான்காவது வகையே புதிய அறிக்கை வடிவங்கள், பிரதிபலித்தல் வடிவங்கள் மற்றும் நடத்தை வடிவங்கள் மேம்பாடடைய ஒப்புதலளிக்கின்றது.

## 4. 'வாழும் உலகு' என்பது ஓர் இன்றியமையாத அடிப்படையான எண்ணக்கரு.

மாணவரின் உண்மையான வாழும் உலகு பற்றிய ஆசிரியவியலையும் கற்பித்தலையும் நோக்கும்போது இன்றியமையாமை பல தடவை "அடிப்படைகளும் பின்னணிகளும்" என்ற கைநூலில் குறிப்பிடப்பட்டது (5அ.4 மற்றும் 3அ 2.3 இயல்களைப் பார்க்க). வாழும் உலகுக்கான நோக்குநிலை ஒரு முதன்மைப் பங்கை வகிக்கின்றது. குறிப்பாக பல்பண்பாட்டியத்தையும் பல்பண்பாட்டியல் தேர்ச்சியையும் கருத்தில் கொள்ளும்போது தற்சமயம் பன்மொழிச் சமூகத்தின் மொழித் தன்மைகளை இது கருத்தில் கொள்கின்றது. ஒவ்வொரு நாளைய பன்மொழியும் - பல்வேறு மொழிகளுடனும் பல்வேறு மொழிகளுக்கிடையிலும் வாழ்தல். இது ஒரு வாழ்ந்த உண்மையாகும். அது தேர்வுசெய்யப்பட்டுப் பாராட்டப்பட வேண்டியது (குறிப்பாக "எங்கள் மொழிகள்" அலகு 3ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்).

தான் வாழும் உலகின் குடிமகனாக / குடிமகளாக பா.மொ.க பிள்ளை எப்போதும் ஒரு சமூகத்தின் உறுப்பினர் ஆகவும் உள்ளது. அந்த வகையில் அவர் ஒரு தளத்தின் அங்கத்தவர் ஆகவும் வாழும் உலகு மற்றும் சமூகத் தளத்தின் வழியே இயங்குகின்றார். இந்த நிலைகளுடன் பன்மடங்கான பல்பண்பாட்டியல் ஒன்றோடொன்று மயங்கல் மற்றும் செயலெதிர்ச்செயல் சூழல்களுடன் இணைக்கப்படுகின்றன. இவை பல்பண்பாட்டுக் கற்றல், அடையாள நடைமுறைகளைத் தேர்வுசெய்தல் மற்றும் சமூக அமைப்பு நிலைப்பாடுகள் என்பனவற்றை வேண்டி நிற்கின்றது. அதேவேளையில் அவை மக்கள் தாமாகவே இயங்கும், செயற்படும் குடிகளாக பட்டறிவு பெறுபவர்களாக உறுதிசெய்கின்றன. இன்றியமையாத இந்த கொள்கையைப் பின்வரும் பகுதி மிக விரிவாக விளக்குகின்றது.

**பாடமும், சூழலுடன் இணைந்து வாழுதலும்**

சிறுவர்களும் வளரிளம் பருவத்தினரும் பல்வேறு சூழல்களில் இயங்குகின்றனர்: குடும்பம், பொதுப் பாடசாலை, ஓய்வுநேரம், உறவினர், அயலவர், வகுப்புத்தோழர் குழு (நண்பர் வட்டம்) முதலியவை. இந்தச் சமூகச் சூழல்கள் ஒவ்வொன்றும் தமது சொந்த சிறிய வாழும் உலகின் சொந்த விழுமியங்கள் மற்றும் நியமங்கள் என்பவற்றைக் குறித்துக்காட்டுகிறது. ஓர் ஆசிரிய வாண்மைக் கொள்கையாக, வாழும் உலக நோக்குநிலை என்பது அவரது முந்திய அறிவு மனப்பாங்கு மற்றும் பல்வேறு பாகங்களும் உள்வாரித் திறங்களுடனான பாடமாக ஒரு பிள்ளையை இணைந்து வாழுதல் ஆகும்.

பிள்ளைகள் தங்களை பயனுறுதியாளர்களாக நோக்க, தாங்களாகவே பொறுப்புக்களைச் சுமக்க, வாழும் சூழலை உருவமைக்க முடிந்தவர்களாக இயங்கவும் அவர்கள் தங்களது சுய அடையாளத்துடனும் சுய அடையாளத்தையும் பிறரின் அடையாளத்தையும் தெரிந்துகொள்ள ஈடுபாடு காட்டக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். அப்படிச் செய்கின்றபோது அவர்கள் சுய அறிவு மற்றும் வெளிவாரி புலனுணர்வுகளுக்கான உணர்திறனையும், உள்ளார்ந்த எதிர்ப்பு மற்றும் வெளிவாரி சவால்களை கையாளுகையையும் மேம்படுத்த வேண்டும், சூழலுடன் இணைந்து வாழுதல் என்பது சிறுவர்களும் வளரிளம் பருவத்தினரும் தங்களது கால, இட, சமூக கட்டமைக்கப்பட்ட வாழும் சூழலைக் கண்டுபிடிக்கக் கூடியவர்களாகத் தங்கள் உடனடி சூழலிலிருந்து பங்காளர்களாக பட்டறிவைப் பெறுபவர்களாகுதல் ஆகும்.

பா.மொ.க மாணவருடன் சேர்ந்து இயங்குவதென்பது ஒருவர் குறைந்தது இருவகையான பண்பாட்டு இனத்துவப் பின்னணிகளுடன் ஈடுபாடுகொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது: வாழும் சூழல் காரணமாக குடிபுகு நாட்டின் கலாச்சாரம் முதலிடத்திலும் தாய் நாட்டோடு தொடர்பின் மூலம் அவர்களது வாழ்க்கைமுறைபற்றி அறிவதற்கு சாத்தியம் இருப்பதனாலும் அக்கலாச்சாரமும் மாணவரை சென்றடையும்.

இட நிலையான அளவுக்கு அப்பால் வாழும் உலகு என்னும் எண்ணக்கரு ஒரு கால நிலையான அளவையும் கொண்டுள்ளது. (அ) அகவயமான அதே நேரத்து புலனுணர்வுகள், பட்டறிவுகள் மற்றும் (ஆ) பெருமளவு சமூகமயப்பட்ட வரலாற்று நிலையாக வளர்க்கப்பட்ட சமூகக் கட்டுமானங்கள் என்பவற்றுக்கிடையில் ஒரு வேறுபாடு மேற்கொள்ளப்பட வேண்டும். நாளாந்த வாழ்வுடன் திசைமுகப்படுத்தப்பட்ட ஒரு கற்பித்தல் அணுகுமுறைமை மேற்சொன்ன இரு அளவுகளிலும் இணைக்கப்பட்டுள்ளது. அதனால் தன்வரலாறு கற்றல் கொள்கையுடன் அதனை ஆற்றுப்படுத்த முடிகின்றது. வாழும் சூழல் ஒரே நேரத்தில் வரலாற்று நிலையாக வளர்க்கப்பட்ட வலயத்தைக் குறித்துக்காட்டியதால் தன்வரலாறான புலம்பெயர் பட்டறிவுகள் தேர்ச்சிகள் மற்றும் கடந்த காலத்துடன் தொடர்புபட்ட மூலவளங்கள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. அவை பிள்ளைகளை அவர்களது தானாகச் செயற்படும் திறனில் அவர்களது முந்திய பட்டறிவுகளை முதன்மையான வளமாக அறியப்படுத்துவதில் பக்கத்துணையளிக்க முடியும்.

வாழும் சூழலின் மூன்றாவது எண்ணக்கருவாக கால, இட அளவைகளுக்கு அப்பால் அங்கு ஒரு சமூக அளவு இருக்கின்றது. எந்தவொரு சமூகச் சூழலில் உள்ள பிள்ளைகளும் ஓர் ஊடாட்டமுள்ள அமைப்புக்குள் உட்படுத்தப்பட்டுள்ளனர். அது அவர்கள் உண்மை நிலையை உட்பொருள் காண விளக்குதற்கும் அந்த அளவுக்குள்ளேயே போதுமான முறையில் தம்மை நடத்திக்கொள்ளவும் ஒப்புதலளிக்கின்றது. ஒவ்வொரு சமூகச் சூழலிலும், பல்வேறு அறிவுப் பெட்டகங்களையும் பல்வேறு உட்பொருள்காண் வடிவங்களையும் மற்றும் குறிப்பிடத்தக்க சிறப்பு மொழி வழக்குகளையும் பிள்ளைகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். அவற்றுக்கு அவர்கள் செயற்படுகின்ற மற்றும் ஊடாட்ட வேளைகளில் மீளச் செல்ல முடியும். எடுத்துக்காட்டாக, சுவிற்சர்லாந்திலுள்ள துருக்கி நாட்டு பா.மொ.க மாணவர்கள் ஒரு வகையில் தங்களது கட்டுப்பாட்டுக்குள் ஒரே தன்மையானதென்று சொல்லத்தக்க துருக்கி – சுவிஸ் பண்பாட்டை மட்டுமல்ல குடும்ப, பாடசாலைப் பண்பாடு, குறிப்பிடத்தக்க துருக்கி – சுவிஸ் புலப்பெயர்வுப் பண்பாடு, மொழி மற்றும் வகுப்புத் தோழமை, ஓய்வுநேர, உணவு, இசைப் பண்பாடு, முதலியனவற்றைக் கொண்டுள்ளார்கள். தனித்தனியாக உள்ள இந்த உலகங்களுக்கு பொருந்தக்கூடிய பல்வேறு விழுமியங்கள் மற்றும் நெறிகள் ஒன்றுக்கொன்று பகுதியளவில் முரண்நிலைத் தன்மையும் தொடர்புத் தன்மையும் கொண்டவையாக உள்ளன. பல்வேறு உட்பொருள்காண் மற்றும் நடத்தைக் கோலங்களுடன் கூடிய பல்வேறு வாழும் சூழல்களுக்கு இடையில் ஏற்படும் சிக்கல்கள் அடிக்கடி வெவ்வேறு பதற்ற நிலைமைகளை மேற்கிளப்பும்.

ஓர் இலகுவான எடுத்துக்காட்டாக, பெற்றோரின் வலிமையான தம் பிறப்புநாட்டு விழுமியப் பண்பாட்டை இன்னும் கடைப்பிடிக்கும் தன்மையாலும், அதே வேளை பிள்ளைகள் குடியேற்ற நாட்டுத் தம் பள்ளித் தோழர்களூடாகப் பெற்றுக்கொண்ட விடயங்களை தழுவுவதாலும் விளையும் முரண்படும் தன்மையைக் காட்டலாம்.

இந்த விடயத்தில் பா.மொ.க ஓர் இன்றியமையாத தொடர்புபடுத்தும் பங்கினை ஆற்ற முடியும், ஆற்றவேண்டும். அது மாணவரின் பல்வேறு வாழும் சூழல்கள் மற்றும் பல்பண்பாட்டியல் கொள்கைகள் மீது ஈடுபடுத்தவேண்டும். இச் செயற்பாட்டைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கிடையில் காத்திரமான கலந்துரையாடல்களையும் சூழலுடன் இணைந்து வாழுதலையும் மேற்கொள்ளவேண்டும். புதிய கைகூடக்கூடிய செயற்பாடுகள் நோக்குகள் என்பன இதனால் மேம்படுத்த முடியும், மற்றும் பிள்ளைகளும் வளர் பருவத்தினரும் தங்கள் அடையாளத்தையும் தங்கள் பங்கினையும் வடிவமைப்பவர்களாக அமைய அவர்களுக்குப் பக்கத்துணை வழங்க முடியும்.

# அலகு 1:
## பண்பாடும் அடையாளமும் – ஒரேமாதிரியானவை எனினும் வேறுபட்டவை!

1

## அறிமுகம்

பொதுப் பள்ளிகள் மட்டுமன்றி பா.மொ.க வும் எல்லா மாணவர்களின் அடையாளத்தை மேம்படுத்தப் பக்கத்துணை செய்யும் நோக்கினைப் பின்பற்றுகின்றன. ஒருவர் தன் அடையாளம் அதற்கெதிரான மோதல் என்பவற்றின் மேம்பாடு, ஒரு தனியாள் தன்னுடனும் சூழலுடனும் வாழ்நாள் முழுவதுமான எதிரும் புதிருமுடைய ஓர் உரையாடலை வேண்டிநிற்கிறது. ஒரு பல்பண்பாட்டு பன்மொழிச் சூழலில், தங்கள் அடையாளங்களை உறுதிப்படுத்தவும் தன்பயனுள்ளவர்களாக தாங்களே பட்டறிவுக்குட்படவும், வாழும் சூழல்களின் பன்மொழி, பல்கலாச்சாரத்தில் வாழும் மாணவர்களுக்கு பல வகைப்பட்ட வாழ்க்கைமுறை, பண்புகள் இருப்பதால் தமது அடையாளத்தை இனம் கண்டுகொள்ள கடினமாக இருக்கும். இப்படி இருக்கும்போது பா.மொ.க மாணவர்கள் தாம் சிறுபான்மையினர் மற்றும் தமது பண்பாட்டுத்தோற்றம் என்னும் தம் நிலையுடன் முரண்பட்டு தப்பித்துக்கொள்ளவோ, தங்கள் பண்பாட்டு இயல்புகளை மறுக்கவோ முடியாது. அவர்கள் தமக்கும், தாம் வாழும் சூழலுக்குமிடையே நடைபெறும் இடையறாத பேச்சுவார்த்தைச் செயன்முறைகளில், அவர்கள் ஒரு பக்கத்தில் தம் சமூக அடையாளத்தையே சார்ந்திருப்பர், மறுபக்கத்தில் பாதுகாப்புக்கும் அடையாளத்துக்குமான இடைவெளிகளிகளையும், இடங்களையும் சார்ந்திருப்பர். அங்கு அவர்கள் தங்கள் விலக்கல் பட்டறிவுகளை கலந்துரையாடி தங்கள் அடையாளம் பற்றி ஒருவர் மற்றொருவருக்கு உறுதிப்படுத்துவர்.

பா.மொ.க, மாணவர்களுக்கு தங்களுடைய பட்டறிவுகளுடன் உருக்காட்டவும் ஒத்துப்போகவும் அவர்களுக்கு உதவ முடியும். இதனூடாக பள்ளியிலும் சமூகத்திலும் பண்பாட்டுப் பன்முகத் தன்மையைக் கையாளுதற்கான சிறந்த தன்மையையும், பொறுத்தலையும் மேம்படுத்துதல் தொடர்பாக அது இன்றியமையாத பங்களிப்பினை நல்கும். இச் செயற்பாடு வெற்றியடையின், தன்பயன் ஒற்றுமை தொடர்பான பட்டறிவைப் பெற்று தங்கள் வலிமைகளையும் திறன்களையும் கண்டுபிடிப்பதற்கு மாணவர்களுக்குப் பக்கத்துணை வழங்கப்படும். இவ்வாறு செய்வதால், அவர்கள் தங்கள் (இரு) பண்பாட்டு அடையாளத்தின் ஒரு பகுதியான தங்கள் இன, பன்மொழி திறன்களின் வளங்களையும் உணர்ந்துகொள்ளவும் அவற்றைப் பாராட்டவும் கற்கின்றனர். பல்வேறு ஈர்ப்புகளையும் பண்பாட்டுப் பின்புலங்களையும் கருத்தில் கொள்ளும்போது, அவர்கள் தங்கள் தனித்துவத்தையும் தனிப்பட்ட நிலையினையும் கண்டுகொள்கின்றனர். குழுவினுள் அவர்களுடைய பொதுத் தன்மைகளையும் வேறுபாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு, அவர்கள் உலகமயமாக்கப்பட்ட வையகச் சமூகத்தினுள் தங்கள் பன்னாட்டு இணைப்பினை உணர்ந்துகொள்ளக் கற்கின்றனர். அதேவேளை, தங்களுடைய வேறுபட்ட சமூக பண்பாட்டு ஆளுமைப் பண்புக்கூறுகளுடன் எல்லா மாணவர்களின் அடையாளங்கள் பற்றிய இந்த ஒப்புதலும் பாராட்டும் வகுப்பில் ஒன்றாக வாழ்வதற்கும் கற்பதற்கும் பக்கத்துணை செய்கின்றன.

பின்வரும் ஏழு கற்பித்தல் பரிந்துரைகளில் விளங்கிக்கொள்ளும் திறன், பிரதிபலித்தல்த்திறன், பா.மொ.க கட்டமைப்பினுள் செயற்படும் திறன் ஆகியவற்றை முன்னேற்றுதற்குப் பங்களிக்கும். மாணவர்களுடைய அடையாளப் பட்டறிவுகள், வளங்கள், ஆற்றல் வளங்கள் என்பன எப்போதுமே தொடக்கப் புள்ளியாக அமைகின்றன. தங்கள் தனிப்பட்ட பிறநாட்டுப் பட்டறிவுகளுடன் ஆசிரியர்களே முதன்மைப் பங்கினை வகிக்கின்றனர். இது வகுப்பறைக் கற்பித்தலை ஏற்பாடு செய்யவும் நடத்தவும் பணியாற்றுகிறது.

எந்த பகுதித் திறன்கள் எந்த அலகில் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன என்பது இந்நூலின் முடிவிலுள்ள கண்ணோட்டத்திலிருந்து தெளிவாயிருக்கும். வகுப்புகளுக்கும் தரங்களுக்குமான ஒப்படைகள் பரந்த அளவில் வரையறுக்கப்பட்டுள்ளன; பெரும்பாலான பரிந்துரைகள் உயர் அல்லது கீழ்வகுப்புகளுக்கு மிகக் குறைந்த மாற்றங்களுடன் நடைமுறைப்படுத்தலாம்.

# 1.1 இதுதான் நான்

**இலக்கு**


*மாணவர் தம்மைத் தாமே ஒரு மரக்குறியீட்டின் துணையுடன் நல்லமுறையில் அறிந்துகொள்ளக் கற்கின்றனர். அவர்கள் தங்களுக்கே உரிய திறமைகளை, ஆர்வங்களை, தேவைகளை அதனூடாக அவை எவ்வளவு இன்றியமையாத தனித்துவம் மிக்கவை என்பதை உணர்ந்து கொள்கின்றனர். இந்த அடிப்படையில், அவர்கள் தங்களைப் பிறருடன் ஒப்பிட்டு பொதுமைகளையும் வேறுபாடுகளையும் கண்டறிவர்.*

வகுப்பு 1 - 6 | 30 - 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
கோட்டு வடிவ மரத்தின் படமுள்ள பணித்தாள்

**நடைமுறை:**

- மாணவர் ஒரு மரத்தின் வரிவடிவப் படம் கொண்ட பணித்தாளைப் பெறுவர். அந்த மரமானது தங்களது ஆளுமையின் உருவக வடிவம் என அவர்கள் விளங்கிக்கொள்வர். மரத்தின் பகுதிகள் பின்வரும் பிரிவுகளைக் குறிக்கின்றன. (பலகையில் ஓர் எடுத்துக்காட்டுடன் கலந்துரையாடப்பட்டு விளக்கப்பட வேண்டும்)
  - வேர்கள்: அடிப்படைத் தேவைகள். நான் வாழ்வதற்கு என்ன வேண்டும்? நான் எதனுள் ஆழமாக வேரூன்றியுள்ளேன்? (குடும்பம், உணவு, வீடு முதலியன)
  - கிளைகள்: திறமைகள் / வலிமைகள். என்னால் என்ன செய்ய முடியும்? எனது பலங்கள் என்ன?
  - இலைகள்: ஆர்வங்களும் / பொழுதுபோக்குகளும். எனது பொழுது போக்குகள் என்ன? எதில் நான் ஆர்வமாய் உள்ளேன்?
  - பூக்கள் அல்லது பழங்கள்: ஆசைகள் / கனவுகள். எதனை நான் விரும்புகிறேன்? எவ்வகைக் கனவுகளை நான் காண்கிறேன்?
  - மர அடிக்குற்றி: பெயர் / பட்டப் பெயர்



- மரங்களின் ஒவ்வொரு பிரிவும் என்ன குணத்தைக் கொண்டுள்ளது என மாணவர் எழுதுவர். (மிக இளைய மாணவர்களுக்கு ஆசிரியர் அல்லது வகுப்புத் தோழன் / தோழி துணை செய்யலாம்). தொடர்ந்து அவர்கள் தாள்களை நிறம் தீட்டுவர்.
- முழு வகுப்புடனும் உருக்காட்டலும் கலந்துரையாடலும்: ஒவ்வொரு மாணவர் தன் மரப்படத்துடன் தன் ஆளுமையையும் வழங்குகிறார். முன்னரேயே ஒரு சில வாக்கியத் தொடக்கங்களை மாணவருக்கு வழங்குவது பயன்மிக்கது. (பலகையில் எழுதி விடலாம்) (எ.கா.: "எனது திறமைகளாவன:…", "…நான் ஆர்வமாக உள்ளேன்". நிறைவாக, பால், அகவை தொடர்பான ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உள்ளடங்கிய பொதுத்தன்மைகளும், வேறுபாடுகளும் கலந்துரையாடப்படலாம்.

# 1.2 உட்பக்கப் பார்வை – வெளிப்பக்கப் பார்வை

**இலக்கு**

*மாணவர் தமது ஆளுமையின் உள்நோக்கையும் வெளிநோக்கையும் உருக்காட்டுவர். அவர்கள் தன்னுருவும் வெளியுருவும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடும் என்பதையும் வெளியுரு எங்களைப் பற்றி மேலும் அறியவும் மேலும் மேம்படுத்தவும் துணைசெய்யும் என்பதை நன்கறிவர். வெளியுரு பற்றிய அறிவு உள்ளுரு பற்றியது போன்று இன்றியமையாததாகும், அவை இரண்டும் ஒன்றையொன்று தம்முள் செல்வாக்கை ஏற்படுத்தும் என்பது பற்றி அவர்கள் அறியவருவர். இது அவர்களது தம் உருக்காட்டல் மற்றும் தம்விமர்சன ஆற்றல் திறனை மேலும் வளர்க்கும்.*

வகுப்பு 2 - 9 | 30 - 45 மணித்துளிகள்



**கருவிகள்:**

ஓர் ஆளின் வெளிக்கோட்டுப் படம்

**குறிப்புகள்:**

- இந்தப் பயிற்சி மிகவும் தனிப்பட்ட சில வேளை வலிதரக்கூடிய உள்நோக்குகளுக்கு இட்டுச் செல்ல முடியும். அதனால் ஆசிரியரால் இது வழிப்படுத்தப்பட வேண்டும். மாணவர்கள் எந்தளவுக்கு தம்மை வெளிப்படுத்தும் இயல்புற்றிருக்கிறாரோ, அந்தளவுக்கு மட்டுமே வெளிப்படுத்த வேண்டும். இது எந்த வகையிலும் அவர்கள் தம்மை "வெளிப்படுத்த வேண்டும்" என ஊகிக்கலாகாது.
- சான்றுகள்: விருந்து விளையாட்டு "இப்போது இது உனது நேரம்!" ("now it's your turn") ஆசிரியர்களுக்கான இணைக் கைநூல் (accompanying booklet for teachers). மாணவர்களுக்கு சனநாயகப் பயிற்சித் தரங்கள் 5-7 (democracy training for students, grades 5–7). தொடர்பு: http://www.gesichtzeigen.de/wp-content/uploads/2008/06/begleit_gesell_05.pdf

**நடைமுறை:**


- மாணவர்கள் ஒவ்வொருவரும் ஓர் ஆளின் வெளிக்கோட்டுப்படமுள்ள தாளையும் பின்வரும் வாய்வழி அறிவுறுத்தல்களையும் பெறுவர்: உருவப்படத்தின் இடைவெளிகளில் அடைமொழிகள் அல்லது தங்களைப் பற்றி சில வாக்கியங்கள் எழுதுவதனூடாக இடைவெளிகளை நிரப்ப வேண்டும். அப்படிச் செய்யும் போது, தங்கள் இயல்புகள், வலிமைகள், இயலாமைகள், விருப்புகள், கனவுகள் என்பவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இவற்றை சில உருப்படியான எடுத்துக் காட்டுகளுடன் விளங்கப்படுத்தப்பட வேண்டும். இவற்றை நிரப்ப பத்து மணித்துளிகள் எடுக்கலாம்.
- இறுதியாக, இணையர்களாக, மாணவர்கள் தங்கள் வெளிக்கோட்டுப் படத்தாளை தம்மிடையே மாற்றிக்கொள்கின்றனர். தங்கள் வகுப்புத் தோழனின் / தோழியின் தாளில் திறவுச் சொற்களால் அல்லது சிறு வாக்கியங்களால் தாம் எப்படிப் பட்டறிந்தனர் என்பதைப் பதிவு செய்கிறார்கள் (வெளிப்பக்கப் பார்வை உட்பக்கப் பார்வையில் உள்ள அதே கூறுகள் குறிக்கப்படுகின்றன).
- முழு வகுப்புடன் உருக்காட்டலும் கலந்துரையாடலும்: எந்தளவு தன் உருவும் பொது உருவும் ஒத்துள்ளன? என்னை வியப்பிலாழ்த்தியது என்ன? என்னை மகிழ்வடையச்செய்தது என்ன? எதனை நான் கற்றேன் அல்லது அவதானித்தேன்? வெளிப்பக்கப் பார்வை இருந்தபோதும் அல்லது அதன் காரணமாக எதனை நான் தக்கவைக்க வேண்டும் அல்லது மாற்ற வேண்டும்?
- கலந்துரையாடலுக்கான மேலதிக தூண்டல்: ஒரு வகுப்பறைத் தோழன் / தோழியின் உள்ளீடு காரணமாக வெளிப்பக்கப்பார்வையுடன் எம்மை நாம் இப்போது பழக்கப்படுத்திக் கொண்டோம். எனினும் பெருந்தொகையானவர்கள் "வெளியிலிருந்து" என்னை உணர்ந்து மதிப்பிடுகின்றனர். இவர்கள் எல்லாம் யார்? நான் எப்படி இவ் வெளிவாரிப் பார்வைகளை எல்லாம் பட்டறிந்து கொள்வது? என்ன வகையான உணர்ச்சிகள் அவர்களுடன் என்னை இணைத்துக் கொள்கின்றன? (சூழலுக்குள் உள்ள பண்பாட்டுப் பல்வகைத் தன்மையை அடையாளம் காணவும் இப் பார்வைகள் மீதான அதன் வகிபாகத்தையும் செல்வாக்கையும் மீட்டுக்கொள்வதற்கு இதுவும் ஒரு வாய்ப்புத்தான்.
- இந்தப் பயிற்சி மேல்தர வகுப்புக்களுக்கும் நீட்டிக்க முடியும் (எ.கா.: அவதானிக்கப்பட வேண்டிய மெருகூட்டப்பட்ட வகைகளின் பட்டியல் ஒன்றைப் பற்றிய கலந்துரையாடல்: ஒன்றுக்குப் பதிலாக இரு வகுப்பறைத் தோழர்களால் வெளிப்பக்கப் பார்வைகள் உருக்காட்டல் செய்யப்படும்). வெளிக்கோட்டுப் படங்களுக்காக சில பண்புகளுடன் கூடிய அளவீட்டினை வரையலாம். (1 – 10 வரையான மதிப்பீடுகள் கொண்ட வரிகளை பண்புகளுக்காக, "எனது சமூக

1

நடத்தை", "ஒரு மாணவனாக எனது நடத்தை" முதலியவை) இந்த அளவீடுகளில் தன்பக்கப் பார்வையையும் வெளிப்பக்கப் பார்வையையும் குறிக்கும்படியாக வெவ்வேறு நிறங்களுடன் கூடிய குறுக்கு உருவங்கள் (ஓ) பதிவு செய்யப்படுகின்றன. தன்பக்கப் பார்வை மற்றும் வெளிப்பக்கப் பார்வை எனும் தலைப்பில் பல்வேறு மக்களுடன் நேர்காணல்களையும் நடாத்துவது சாத்தியமாகும்.


# உட்பக்கப் பார்வை – வெளிப்பக்கப் பார்வை

மாணவர்களுக்கான பணித்தாள்



# உட்பக்கப் பார்வை – வெளிப்பக்கப் பார்வை

மாணவர்களுக்கான பணித்தாள்



# 1.3 நானும் மற்றவர்களும்

**இலக்கு**

*தங்களுடைய அடையாளத்தைப் பற்றி மிகவும் நெருக்கமாக ஆராய்ந்து எண்ணுதற்கு இந்தப் பயிற்சி, மாணவரை ஊக்குவிக்கும். அடையாளத்தை வலுப்படுத்த, தன்னம்பிக்கை மற்றும் பாராட்டத்தக்க தன்மதிப்பீடு, ஆகியவற்றுக்கு இது பங்களிப்புச் செய்யும். ஒருவரது தன் வலுவையும் மற்றையோரது வலுவையும் பற்றிய விழிப்புணர்வை இது மேம்படுத்துகிறது.*

வகுப்பு 2 - 9 | 30 - 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
ஓர் இலக்குடன் கூடிய கடதாசித் தாள்கள் (ஒரு மாணவருக்கு இரண்டு தாள்கள்)


**குறிப்புகள்:**

- குழு மீதான பெருமளவு நம்பிக்கையையும் உணர்திறன்மிக்க விடயங்களையும் கையாளும் ஆசிரியர் திறமையையும் தன்னுடைய மற்றும் வெளிக்கள பகுப்பாய்வையும் வேண்டி நிற்கின்றது. எந்தப் பரப்புகளில் மக்கள் வலுவாக உள்ளனர் (சமூகத் திறன்கள், கற்றல்திறன் வலிமைகள், நல்ல குணங்கள் முதலியன) என எடுத்துக்காட்டுகளுடன் முற்கூட்டியே விளக்கி கலந்துரையாடுவது நன்மை பயக்கும். இந்தப் பயிற்சி ஒருபாலாருடன் குழுவாக நடத்தலாம். இதனால் பின்னர் பெண் பிள்ளைகள் மற்றும் ஆண்பிள்ளைகளின் வலிமைகளை ஒப்பிட்டுக் கலந்துரையாடலாம்.
- சான்றுகள்: முறைகளின் தொகுப்பு, கற்கும் இடம், காற்பந்து விளையாட்டு மைதானம், ரொபேட் பொஷ் நிறுவனமும் ஜேர்மன் முதன்மை லீக் காற்பந்தாட்ட நிறுவனத்துடன் இணைந்து செயல்படுதல். இயல் 3: அடையாளம். தொடர்பு: http://www. bosch-stiftung.de/content/language1/downloads/ Methodensammlung_mit_Lernkarten.pdf (Collection of methods, place of learning, football stadium. Robert Bosch Foundation in collaboration with the German major league soccer foundation. Chapter 3: identity, see link above)

---

**நடைமுறை:**

- இணையர்களாக வேலை செய்தல்: மாணவர்கள் ஒவ்வொருவரும் ஓர் இலக்குடன் இரு தாள்களைப் பெறுவர். ஒரு தாளில் தமது பெயரைக் குறிப்பர். மறுதாளில் மற்றைய பிள்ளையின் பெயரை இடுவார்.




- முதலில் பிள்ளைகள் தமக்கிருக்கும் ஐந்து நற்பண்புகளை தமது இலக்கு பக்கத்தில் வரிசைப்படுத்துவர். ஒரு குறிப்பிட்ட பண்பு எவ்வளவு இன்றியமையாதது எனக் கருதுவாரோ அந்தளவுக்கு இலக்கின் நடுப்புள்ளிக்கு அருகில் பதிவு செய்வார்.
- பின்னர் அதே பயிற்சியை தமது கூட்டாளிக்காக மீளச் செய்வர். பின்னர், தமது முடிவுகளை ஒன்றோடொன்று ஒப்பிடுவர்.
- முழு வகுப்புடன் உருக்காட்டலும் கலந்துரையாடலும்: இந்தப் பயிற்சியுடன் உமது பட்டறிவு எப்படி அமைந்தது? உமது விழிப்புணர்வுக்கும் உமது கூட்டாளியின் பார்வைக்கும் இடையில் பெருமளவு வேறுபாடுகள் உண்டா? உண்மையில் வலு என்பது எதைக் கொண்டு அமைகின்றது?, உமது வலுக்களுக்காக உம்மால் ஏதாவது செய்ய முடியுமா? இயலாமையை வலிமையாக மாற்ற முடியுமா?
- செயற்பாட்டு முடிவின் மதிப்பீட்டில் முதலாவதாக முக்கியமாக முதலில் அவர்களது பலவகையான வேறுபட்ட வலிமைகளையும், திறமைகளையும் உரையாடவேண்டும். இரண்டாவதாக தமது இயலாமைகளை எவ்வாறு சரிசெய்யலாம் என்று விவாதிக்கவேண்டும்.

1

# 1.4 என்னைப் பறக்க விடு

**இலக்கு**

*பறக்கும் பட்டத்தை ஒரு குறியீடாகக் கொண்டு மாணவர்கள் ஏற்புடைய ஒருமைப்பாடுகள் வகிபாகங்களுடனான தம்முடைய பண்பாட்டு அடையாளம் பற்றி உருக்காட்டல் செய்வர். அவர்கள் தாம் வெறுமனே இரண்டு பண்பாடுகளுக்கும் நாடுகளுக்கும் இடையே இடர்படுவதாக உணராமல் இருநாடு, பண்பாட்டைக் கொண்டுள்ளதற்காக பெருமைப்பட்டுக்கொள்வர்.*

வகுப்பு 4 - 9

அண்ணளவாக 2 பாடங்கள்

**கருவிகள்:**
பணித்தாள் (பட்டம் செய்வதற்கான விளக்கமுடன்), எடுத்துக்காட்டாக, பட்டம் செய்வதற்கு ஒரே அளவாக வெட்டிய இரண்டு தாள்கள். வாலுக்கு தாள் கீற்றுகள், நூல் மற்றும் நிறப் பென்சில்கள்.

**குறிப்புகள்:**

ஒருவரின் சொந்த பல்பண்பாட்டு அடையாளத்தைப் பற்றிய உருக்காட்டுதலை 2-3 கிழமைகளுக்கு ஒரு கருத்திட்டமாக நீட்டிக்க முடியும். அவ்விடத்தில் பட்டத்தின் தனித்த பகுதிகள் ஆழமாக ஆராயப்படுகிறது. அப்படிச் செய்யும் போது உருக்காட்டுதல் கேள்விகள் மாணவரின் தேர்ச்சி மட்டங்களுக்கு இணங்க ஒழுங்கமைக்கப்படுகின்றன. அந்தக் கருத்திட்டமானது வழமைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஈடுபாட்டுடன் நடைமுறைப்படுத்தலுக்கு தானே இட்டுச் செல்கிறது. அக்கருத்திட்டத்தின் முடிவில் பட்டங்கள் பறக்க விடப்படுதல் ஒரு பகுதியாகும். எப்படியும் இது இன்னுமொரு படிமுறையை வேண்டி நிற்கின்றது (பட்டத்தின் புறவடிவத்தைப் பொருத்தமான தாளுக்கு மாற்றி காற்றில் பறக்கக்கூடிய ஒரு பொருத்தமான வடிவமைப்பை வழங்கல்.)

---


**நடைமுறை:**

- நடைமுறையைத் தொடங்குவதற்கு, ஆசிரியர் பட்டத்தின் பாகங்களை அடையாளக் குறியீடாக வழங்குவர். செயற்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகப் பட்டத்தைக் காட்டிப் பணித்தாளை விளங்கப்படுத்துவார். பட்டத்தின் புறவடிவையும், இப்பகுதிகளுக்கான பாகங்கள் குறித்து நின்றனவோ அவற்றையும் செயற்பணித்தாள் காட்டும். ஒவ்வொரு பகுதியும் ஒரு வாழும் சூழலையும் ஒரு பகுதி அடையாளத்தையும் குறித்து நிற்கும். எ.கா. குடும்பம், பாடசாலை, நட்பு, அயலவர் முதலியன. ஒவ்வொரு பகுதி அடையாளமும் வாழும் சூழலும் ஒரு தொடர்பான வகிபாகத்துக்கு உரித்துடையதாகின்றது. எல்லா வகை பகுதியான அடையாங்களின் வகிபாகங்களின் கூட்டுத் தொகையாக ஒரு ஆளுமையும் அடையாளமும் உருவாக்கப்படுகின்றது. அந்த விளக்கமான அறிமுக கலந்துரையாடல் எல்லா மாணவர்களும் பின்வரும் ஒப்படைகளை விளங்கிக்கொண்டனர் என உறுதிப்படுத்த வேண்டும்.
- முதலில், பட்டத்தின் மத்தியில் ஒரு புன்னகை புரியும் முகம் ஒன்றை மாணவர் இடவேண்டும். (கையால் கீறிய அல்லது ஒட்டப்பட்ட படம்) புன்னகையைச் சுற்றித் தங்களைப் பற்றிய இன்றியமையாத தகவல்களைச் சொற்களால் தாமே எழுதுவர் (வயது, விருப்பு, உடன்பிறந்தோர், மொழி, சில குணங்கள்)
- அவர்கள் பட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குப் பெயரிடுவர். பணித்தாளின் மேலுள்ள அட்டவணையில் தனித்த கட்டங்களுக்கான தகவல்களைப் பதிவு செய்வர். பட்டத்தின் முன்பகுதியைக் குடியேறிய நாட்டில் வாழும் சூழலுக்கும் பிற்பகுதியைப் பிறந்த நாட்டுக்கும் பயன்படுத்துவது நல்ல கருத்தாகும். ஆறு முக்கோணங்கள் போதுமானவையாக இல்லாதுவிடின் அவற்றை (அல்லது சிலவற்றையாவது) மேலும் அரைவாசியாகப் பிரிக்கமுடியும்.
- அடுத்த படியாக, வேறுபட்ட / ஒத்த உறுப்பினர்களின் அடையாளங்களை அதாவது (முறை) பற்றி வகுப்பு கலந்துரையாடுகிறது. மாணவர்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு, ஆசிரியர் கதாபாத்திரத்தின் பகுதி அடையாளங்களை (ஒன்று விட்ட சகோதரன், விளையாட்டு வீரன், மாணவர், கழக உறுப்பினர்) பரிந்துரைக்கிறார். அப்படியான ஒரு பதிவினையுடைய பட்டத்தை உடைய மாணவர்கள் எழுந்து நின்று அறிவிப்பர்.
- பட்டம் பற்றிய எண்ணக்கருவை 4 பேர் கொண்ட குழுக்களில் அளிக்கை செய்து விளங்கப்படுத்துவது கைகூடுவதாகும். விவாதத்திற்கான தூண்டியாக ஆசிரியர் பின்வரும் கேள்விகளை பலகையில் எழுதிக் கேட்க முடியும். "அடையாளத்தை ஏற்படுத்துவது எது? என்னுடைய அடையாளத்தின் இன்றியமையாத பண்புகள் யாவை? நான் எந்தக் குழுவில் இருப்பதாக உணர்கிறேன்? எனது பகுதி அடையாளங்களின் / வாழும் சூழல்களின் அடிப்படையில் எந்த வலிமைகளையும் வளங்களையும் நான் கொண்டிருக்கிறேன்? எது எனக்கு முக்கியமானது? எந்த நம்பிக்கைகள், நியமங்கள், எண்ணங்கள் என்னிடம் கடத்தப்பட்டுள்ளன? "

- இறுதிக் கலந்துரையாடலில் முக்கியமாக பல்வகை அடையாளங்களைப் பற்றி பிரதிபலிக்கும்படி உரையாடப்படவேண்டும். கலந்துரையாடலுக்கான தூண்டிகள் வயதுப் பொருத்தமானவையாகவும் பின்வரும் முக்கிய கருப்பொருட்களை ஒட்டியதாகவும் அமையவேண்டும்:
  - எந்த அடையாளப் பகுதிகள் குறிப்பாக உங்களுக்கு முதன்மையாகின்றன? ஏன்?
  - எந்த அடையாளப் பகுதிகள் உங்களுக்குத் தொடர்பு இல்லாதவை? ஏன்?
  - உங்கள் தொடக்ககால நாள்களுக்கு மிகவும் (அல்லது மட்டுமேயான) இன்றியமையாத பண்புகள், பங்களிப்புக்கள் ஏதும் உண்டா?
  - பகுதி அடையாளங்கள் பற்றிய வரிசை அடுக்குகள் ஏதும் உண்டா?
  - உம்மால் அடையாளம் காணப்பட முடியாவிடினும் வெளியிலிருந்து / சமூகத்திலிருந்து உமக்குத் தரப்பட்ட பகுதி அடையாளங்கள் ஏதும் உண்டா?
  - உமது அடையாளத்துக்கு உமது மொழி வகித்த பங்கு என்ன?
  - எந்த கதாபாத்திரங்கள் உங்கள் பட்டத்தில் அதிக அளவு இடத்தை எடுத்துக்கொள்கின்றன, குறிப்பாக சிறிய அளவு எவை?
  - உமக்கு குறிப்பாக பிடித்த, பிடிக்காத கதாபாத்திரங்கள் ஏதாவது உண்டா?
  - இந்த கதாபாத்திரங்களுக்கிடையில் ஏதாவது மோதல்கள் முரண்பாடுகள் உண்டா? அல்லது அவை ஒன்றை ஒன்று முழுமைப்படுத்துகின்றனவா?
  - உம்மைப் பற்றி அல்லது குழுவைப் பற்றி ஏதாவது புதிதாகக் கற்றுக் கொண்டீரா?

---

## பட்டம் (செயற்பணித்தாள் விளக்கங்களுடன் கூடிய)




1

# 1.5 உள்ளடக்கப்பட்டதும் – வெளியேற்றப்பட்டதும்

**இலக்கு**

*தெரிந்தோ, தெரியாமலோ ஒருவர் தம் குழுவில் இருந்து எப்படி வெளியேற்றப்பட்டார் என்பதை மாணவர் ஒரு நடிப்பின் மூலம் அறிந்துகொள்ளமுடியும். இது தொடர்பான உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதன் மூலமும், எதிரான செயற்பாட்டினைக் காட்டுவதன் மூலமும் சமூகத்திற்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.*

வகுப்பு 4 - 9 | 60 மணித்துளிகள்



**கருவிகள்:**
ஐந்து அட்டைகள்.
நான்கு ஒரேமாதிரியானவை, ஒன்று வேறுபட்டது. (எ.கா. கீழே பார்க்கவும்)

**குறிப்புகள்:**


- நடிப்பில் பிள்ளைகளுக்கு ஏற்கனவே நடித்த பட்டறிவு இருக்குமானால் இது துணைசெய்வதாயிருக்கும். இன்றியமையாத விதி என்னவெனில் நாடகம் நடிக்கும்போது கருத்துக்கள் கூறமுடியாது, முடிவிலேயே கருத்து கூறமுடியும்.
- சான்று: http://www.fippev.de/t3/fileadmin/fippev/userdaten/PDF/Anti-Bias-Ordner/Diskriminierung_Antibias_in_der_Schule.pdf

**நடைமுறை:**

- மாணவருக்கான தகவல்கள்: ஒரு நாடகத்தை நடாத்துவதற்கு, ஐந்து பேர் கொண்ட குழுவில் நாலு பேர் ஒரு கருப்பொருள் பற்றி தீவிரமாக உரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருக்க, 5வது ஆள் அதில் தன்னைத் தொடர்புபடுத்திக் கொள்ளவில்லை. (கீழே உள்ள எ.கா.டைப் பார்க்க, மற்றைய எடுத்துக்காட்டுக்கள்: 4 அட்டைகள் "கடற்கரையில் விடுமுறையைக் கழித்தல்" பற்றியும், 1 அட்டை "மலையில் விடுமுறையைக் கழித்தல்" பற்றியும் 4 அட்டைகள் "ஆசிரியருடன் பிரச்சனை" பற்றியும், 1 அட்டை"பாடசாலையின் நல்ல பட்டறிவுகள்" பற்றியும்.
- ஐந்து தன்னார்வலர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அட்டையைப் பெற்று அதிலுள்ள விடயம் பற்றி உரையாடுவர்.(ஒருவர் தொடர்ச்சியாக தொடர்பில்லாமல் பேசிக்கொண்டு இருக்கிறார் என்பது விரைவில் தெரியவரும்) இந்த ஐந்து கதாபாத்திரங்களும் வகுப்பின் நடுவில் அமர்ந்திருக்க மற்ற மாணவர்கள் அவர்களைச் சுற்றி வட்டமாக அமர்ந்து இருப்பர். இந்த நாடகம் 10 நிமிடம் இடம்பெறலாம். மேலதிக நேரம் கிடைக்குமெனின் வேறொரு தலைப்புடன் இன்னொரு நடிப்பினை செய்யலாம்

---

## அட்டைத் துண்டுகளுக்கான எடுத்துக்காட்டுக்கள்




- தொடர்ந்த நிறைவு உருக்காட்டல் நிகழ்வில் வகுப்பு திறவுக் கேள்விகள் பற்றி உரையாடுவர். அவையாவன:
  - நாடகத்தில் பங்குபற்றியோர் நடிக்கும்போது எவ்வாறு உணர்ந்தார்கள்? இப்போது எப்படி உணர்கின்றனர்?
  - பார்வையாளர்கள் எதனைக் கண்டுகொண்டனர்?
  - பொதுவான வெளியேற்றுவதற்கான காரணங்கள்: இந்த விளையாட்டில் ஏன் வெளியேற்றல் இடம்பெற்றது? நீர் வேறு எவ்வகையான வெளியேற்றும் சூழல்கள் பற்றி அறிந்துள்ளீர்? எப்படி இவ்வாறான வெளியேற்றல்களைத் தவிர்க்க முடியும்?

– முடியுமாயின் எமது சமூகத்தின் பண்பாகிய வெளியேற்றும் சூழல்களின் தொகுதி ஒன்றைத் திரட்டவும்; இந்த சூழல்களை மாற்றுவதற்கான மதிநுட்பங்கள் பற்றிய கலந்துரையாடல்.

# 1.6 தன் அடையாள மூலக்கூறு

**இலக்கு**

*மாணவர் தமது பண்பாட்டு அடையாளத்தை உருக்காட்டி பொதுவானவற்றையும், வேறுபாடுகளையும் தெரிந்து கொள்வர். அவர்கள் தங்களுடைய மாறுபாடான குழு இணைப்புக்களையும், சிறுபான்மையான அல்லது பெரும்பான்மையான குழுக்களுடனான இணைப்பையும் அத்துடன் தொடர்பான பட்டறிவையும் தெரிந்துகொள்வர்.*

வகுப்பு 4 - 9

45 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
அடையாள மூலக்கூறு பணித்தாள் (எடுத்துக்காட்டு வலப்பக்கம் பார்க்கவும்)

**குறிப்புகள்:**

சான்று: "A World of Difference"; Institute Training Manual, ©1994 Anti-Defamation League.


**நடைமுறை:**

- என்ன சிக்கல் என்பதை கிரகித்துக்கொள்ள "எனது தனியாள் அடையாள மூலக்கூறு" எனும் பணித்தாளை மாணவர் பெற்றுக்கொள்வர். முதலில் ஒரு சிறிய வகுப்பறை கலந்துரையாடலிலும், பின்னர் தனியாகவும் பல்விதக் குழுக்களில் தாம் எக்குழுவுடன் தொடர்புள்ளவர் என்று சிந்தனை செய்வர்.
- நடுவிலுள்ள வட்டத்தினுள் தங்கள் பெயர்களை எழுதிய பின் தாங்கள் எந்தக் குழுவுடன் இணைக்கப்பட்டுள்ளார்கள் என உணர்கின்றனரோ அந்த வேறுபாடான குழுக்கள் பெயர்களைச் சுற்றியுள்ள வட்டங்களில் எழுதுவர். (குடும்பம், பள்ளி, ஓய்வு நேரம், பிறந்த நாட்டு உறவினர், அரட்டைக் குழுக்கள், முகநூல் நண்பர்கள் முதலியவை)
- இரண்டாவது படிமுறையில், குழுத் தொடர்பாளர்களைக் கண்டுகொள்வதற்காக ஆசிரியர் "எழுந்துநிற்றல்" பயிற்சியை நடத்துவர், அவர் வரக்கூடிய வேறுபட்ட குழுக்களை அழைத்துக்கொள்வர். ("உதைபந்தாட்டக் குழு", "பிறந்த நாட்டில் உறவுகள்" முதலியவை.) இந்தக் குழுக்களை நிரல்பண்ணிய மாணவர் எழுந்துநின்று ஒரு சிறு உரை செய்யலாம். தொடர்ச்சியாக அழைக்கப்படாத ஆனால் பணித்தாளில் நிரற்படுத்தப்பட்ட வகைப்பாடுகள் கலந்துரையாடப்படும்.
- மூன்றாவது படிமுறையில் இரண்டு பேர் கொண்டு மாணவர் குழுக்களை உருவாக்குவர். (யாருடன் குறைவான தொடர்புகளைப் பேணுகின்றாரோ அவருடன் இணையாகச் சேரல் விரும்பத்தக்கது.) எந்தக் குழுக்கள் இணைப்புக்கள் தங்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன, எந்தவகையான வேறுபட்ட ஆட்கள், தனியாள், அரசியல், சமூக நிகழ்வுகள் (குடும்பம், ஓய்வுநேரம், தேசியப் பண்பாடும் பாரம்பரியங்களும்) அவர்களது பண்புகளை உருவமைப்புச் செய்தன என்பதை ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடும். இந்தக் குழுவின் அங்கத்துவராக இருப்பதில் உள்ள குறிப்பான கருத்தும் இன்றியமையாமையும் என்ன? இக்குழுவில் அங்கத்தவராக இருப்பது எவ்வளவு எளிது அல்லது கடினம்? இணையர்களாக கலந்துரையாட வேண்டிய தூண்டிகள் பற்றி முன்னரே விளக்கியிருக்க வேண்டும்.
- இச்செயற்பாட்டை முடிவுறுத்துவதற்கு முழு வகுப்பும் செய்யக்கூடியவை: அதற்கான பரிந்துரைகள்
  - இரண்டு பேர்கொண்ட குழுவில் எவ்வகையான முக்கிய கருத்துக்களை நீங்கள் விவாதித்தீர்கள்?
  - மாணவர் ஏதாவது புதிதாக அல்லது தங்களைப் பற்றி வியப்புடன் ஒன்றைக் கண்டுபிடித்தார்களா?
  - எழுந்துநில் பயிற்சியில் அல்லது இணையர்களின் கலந்துரையாடலில் மாணவர்கள் தம்மைப்பற்றி புதிதாக அல்லது வியப்பான ஒன்றை (குறிப்பிட்ட பால் அல்லது குறிப்பிட்ட அகவைக்கான நடத்தை) தெரிந்துகொண்டார்களா?
  - எநத குழு இணைப்புகள் சிக்கலானதாகவும் வலிதரத் தக்கதாகவும் இருந்தன?

– உமது கருத்தின்படி எக்குழுவின் இணைப்புகள் சமூகத்தால் மதிக்கப்பட்டுள்ளன? எவை மதிக்கப்படவில்லை?

- குறிக்கப்பட்ட கடைசிக் கேள்விக்கு விடை கூறுவதற்கு முதலில் பல்வேறு சமூகக் குழு இணைப்புகள் பற்றி கலந்துரையாடுவது பயனுள்ளது (செழுமை - வறுமை, உள்நாட்டவர் - வெளிநாட்டவர், ஆண் - பெண், கிறிஸ்தவர்கள் - முஸ்லிம்கள், பல்பாலினத்தார் - ஒருபாலினத்தார் முதலியவை.) இக் குழுக்களுடன் சேர்ந்திருப்பதால் உள்ள சமூக நலன்களும், குறைபாடுகளும் அவற்றின் ஏற்புடைமைக்கு பின்வரும் அளவுத் திட்டத்தினூடாக கலந்துரையாடி விளங்கப்படுத்த முடியும்.

**எனக்கே உரிய அடையாள மூலக்கூறு**




# 1.7 ஒற்றுமையே பலம்

**இலக்கு**

*கூட்டு வலு என்னும் கொள்கையினூடாக ஒருவர்க்கொருவர் தங்கியிருத்தல் என்பது தம்முடைய அடையாளத்தைக் கைவிட்டு விடுதல் என்பது அல்ல என மாணவர்கள் கற்றுக்கொள்கின்றனர். ஒரு குழுவின் பக்கத்துணையால் வரும் நன்மைகள் மிகத் தெளிவாகவே காணக்கூடியனவாக இருக்கின்றன.*

வகுப்பு 7 - 9 | 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
சிறு தடிகள் அல்லது உருண்ட மரத்தடிகள் (5.மி.மீ விட்டம், 30-40 செ மீ நீளம், இரண்டு ஒரு மாணவருக்கு) நூல்,
சிறுகடதாசி, பெயரட்டைகள்.


**குறிப்புகள்:**

சான்று: Schilling, Dianne (1993): Miteinander klarkommen. Toleranz, Respekt und Kooperation trainieren. (Getting along with each other. Tolerance, respect and cooperation training). Mülheim an der Ruhr: Verlag an der Ruhr.

**நடைமுறை:**

- 6 – 12 பேர் கொண்ட ஒரு மாணவர்கள் குழுவை உருவாக்குவர். ஒவ்வொருவரும் ஒரு தடியைப் பெறுவர். தடிகள் மாணவர்களையே குறியீடு செய்கிறது என ஆசிரியர் விளங்கப்படுத்துவர். இத்தடிகள் அவர்களது பலம், பலவீனம், உணர்வுகளை கொண்டுள்ளன என கற்பனை செய்ய வேண்டும். மனிதர்களுக்குள்ள வாழ்வியல் சிக்கல்களும், மன அழுத்தங்களும் சில நேரங்களில் அவர்களை வலுவிழக்கவும், உடைந்துபோகவும் செய்கிறது என்பதை இத்தடிகள் பிரதிபலிக்கும். மாணவர் தமது தடிகளை உடைத்து இந்த நிலைமையைச் செயல் முறையாகச் செய்து காட்டுவர்.

- தடிகளை உடைத்த பிறகு ஆசிரியர் எவ்வளவு அழுத்தம் தேவைப்பட்டது என்று மாணவரைக் கேட்பார். – மிகக் குறைவான அழுக்கம், நடுத்தரமான அழுக்கம், மிகக் கூடிய அழுக்கம். பலர் தடிகளை மிக எளிதாகவும், அதே வேளையில் மற்றவர்கள் மிகக் கடுமையாகவும் முயற்சித்தனர் என அறியக்கூடியதாயிருக்கும்.



- மக்கள் தடிகளைப் போலவே வாழ்வில் பல்வேறு தரங்களில் புகுத்தப்பட்ட அழுத்தத்தை எதிர்கொள்ள முடியும். எந்தளவு அழுத்தத்தை ஒருவர் எதிர்கொள்ள முடியும் என்பது அவர் எவ்வளவு, தாக்கத்துடன் அழுத்தத்தை கையாள முடியும் என்பதில் தங்கியுள்ளது. அழுத்தம் மிக வலுவாக இருந்தால் மிக வலுவுள்ள ஆளும் உடைந்து போய் விடுவார்.
- மிகுதியாகவுள்ள தடிகளும் பகிரப்படும். ஒரு தாள் மற்றும் பெயரட்டையுடனும் அட்டையில் தமது பெயர்களை எழுதி தடியில் ஒட்டுவர். பின்னர் அவை ஒன்றாக சேர்க்கப்பட்டு கட்டாகக் கட்டப்படும். ஆசிரியர் பல்வேறு மாணவரிடம் அக்கட்டை வெறுங்கைகளினால் முறிக்குமாறு கூறுவார். மிக வலிமையுள்ள ஆட்களும் இச் செயற்பாட்டைச் செய்ய பெரும் இடர்களை எதிர்கொள்வர் என்பது தெளிவாகும்.
- நிறைவு / வகுப்பு உருக்காட்டலுக்கும் கலந்துரையாடலுக்குமான தொடக்க உதவிகள்:
  - இந்தப் பயிற்சி எங்களுக்கு என்ன செய்யும்? இதேபோன்ற ஒற்றுமைப்பட்ட வேறு எவற்றைக் காணமுடியும்?
  - சொந்த அடையாளத்துக்கும் குழு அடையாளத்துக்கும் இடையில் எவ்வகை வித்தியாசத்தைக் காண முடியும்?
  - குழுவாக வேலை செய்வதில் என்ன நன்மைகளைப் பெற முடியும்?
  - ஒருவர் குழுவில் இணையும்போது அவருடைய தனிநபர் அடையாளத்தில் ஏற்படும் மாற்றங்கள் என்ன?
  - ஒரு குழு ஒருவருக்கு வாழ்வின் இடர்களைச் சமாளிக்க, சிக்கலில் வெற்றிபெற எப்போது, எந்த பரப்பில் உதவிபண்ண முடியும்? எப்போது, என்ன தன்மையில் இதனைச் செய்யமுடியாது?

# அலகு 2:
# குடிபெயர்வுக் கதைகள் – எங்கள் வகுப்பறைக்குள் உள்ள உலகம்

2

## அறிமுகம்

மற்றைய பிள்ளைகள் மற்றும் இளம்பருவத்தினரைப் போலவே பா.மொ.க மாணவர்கள் தனித்துவமான தன்வரலாற்றைக் கொண்டுள்ளார்கள். ஒரு தன்மையான பண்பாட்டில் வளரும் உள்ளூர் பிள்ளைகள், இளம்பராயத்தினரிடம் இருந்து இவர்களைப் பிரிப்பதும், தனித்துவத்துக்குப் பங்களிப்பதும் இவர்களது குடிபெயர்ப்புக் கதைதான். அது அவர்களே நேரடியாக அனுபவித்ததாக இருக்கலாம் அல்லது குடிபெயர்ந்த பெற்றார் அல்லது பேரன் பேத்தியருடைய பிள்ளைகளாக வாழ்ந்ததனாலாக இருக்கலாம். இவ்விரண்டு நிலைகளிலும், அந்த வளரிளம் பருவத்தினருக்கு குடிபெயர்வுப் பின்புலம் ஏற்கனவே உள்ள ஒரு குறிப்பான வளமாக இருக்கின்றது. ஆயினும் இது சமூகத்தில் அதற்குரிய மதிப்பைப் பெறாது உள்ளது.

குடிபெயர்வுப் பின்னணி, பிறந்த நாட்டுப் பண்பாடு ஆகிய இரு பண்பாடுகளுக்கும் இடையிலான வாழ்வு என்பன பா.மொ.க வின் மையக் கருப்பொருளாகும். ஒருவருடைய குடிபெயர்வு வரலாற்றின் ஆய்வு என்பது ஒருவருடைய தன்வரலாற்றில் குடிபெயர்வின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கிறது. மாணவர்கள் தாம் புகுந்த நாட்டு சவால்களுக்கு அந்த வகையில் உணர்திறன் உடையவர் ஆக்கப்படுகின்றனர். மறுதலையாக அவர்கள் தங்களது சிறப்பு வளங்கள் பற்றி அறிந்து கொள்வதோடு அவற்றை ஒவ்வோர் நாள் வாழ்விலும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைக் கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் குடிபெயர்வுப் போக்கை தங்கள் குடும்ப வரலாற்றின் ஒரு பகுதியாகக் கற்றுக் கொள்வதோடு தங்களுக்கே ஒரு மரியாதையையும் மதிப்பையும் வளர்த்துக் கொள்கின்றனர். பெற்றோர் மற்றும் அவர்களது பேரன் பேத்தியரின் செயற்றிறன்களுக்கு மதிப்புக் கொடுக்கின்றனர்.

அது தவிர தங்களது சொந்தக் குடிபெயர்வு வரலாற்றுடன் ஈடுபாடு காட்டுவதோடு, உள்ளுணர்வுடன்  பண்பாட்டு பல்வகைத் தன்மையை அனுபவித்து வெளிப்படையாக வழங்குவதற்குத் தங்களது சூழலில் வசிக்கும் வேறுபாடான பண்பாட்டு வட்டங்களில் இருந்து வரும் மற்றைய மக்கள் மற்றும் பள்ளித்தோழர்கள் பற்றியும் மாணவர் ஆராய்ந்து கொள்ள வேண்டும். மற்றவர்களது குடிபெயர்வுக் கதைகளை ஆராய்வதனூடாக அவர்கள் தங்களது தம் வரலாற்றை மீளாய்வு செய்துகொள்ளமுடியும். அத்துடன் மற்றவர்களைத் தாம் விளங்கிக்கொண்டதைக் காட்டவும் முடியும். இத் தன்வரலாற்றுக் கற்றல் குடிபெயர்வின் பல்வேறு காரணங்களையும் விளைவுகளையும் அடையாளம் காண உதவும். அத்துடன் மாறுபாடான பண்பாட்டு மக்களுடன் வாழ்வதில் கிடைக்கும் வாய்ப்புகளையும் சவால்களையும் பட்டறிய முடியும். அதேவேளையில் இப் பல்வேறு மட்டங்களில் உள்ள குடிபெயர்வு தன்வரலாறுகளை ஆய்வு செய்வதன் ஊடாக, குடி-பெயர்வின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார விளைவுகளை விளங்கிக் கொள்வதற்குக் கற்றுக் கொள்வதுடன், அவர்கள் தங்களது செயற்பாட்டுக்கான நுட்பங்களையும் சாத்தியங்களையும் வளர்த்துக்கொள்வர். இவ்வாறு பண்பாட்டு மொழியியல் பல்வகைத் தன்மை சார்ந்து அவர்கள் சகிப்புத் தன்மையையும் அடையாளத்தையும் வளர்த்துக் கொள்வதோடு இந்த வகையில் தங்களுடைய பண்பாட்டு ஆற்றல்களையும் விரிவுபடுத்திக் கொள்வர்.

பின்வரும் ஏழு கற்பித்தல் பரிந்துரைகளின் தொடக்கநிலை மாணவரது அடையாளம் காணும் பட்டறிவுகள், வளங்கள், தகுதிகள் என்பவற்றில் தங்கியுள்ளது. ஆசிரியர் இன்றியமையாத பங்கினை எடுக்கிறார். தம் பட்டறிவுகள் மற்றும் வெளிவாரிப் பட்டறிவுகள் தம் கைகளில் உள்ளமையால் அவை பாட அலகுகளை ஏற்பாடு பண்ணுவதில் ஒரு இன்றியமையாத வளமாகப் பங்களிக்கின்றது.

வகுப்புக்கள் மற்றும் தரமட்டங்களுக்கான ஒப்படைகள் விரிவாக உள்வாங்கப்பட்டுள்ளன. வயது மற்றும் தேர்ச்சி மட்டங்களுக்கு அமைவாக பெரும்பாலான முன்மொழிவுகளை இலகுவாக வடிவமைக்க முடியும்.

மூன்று முன்மொழிவுகள் (2.7 அ – இ) அதிக விரிவான கருத்திட்டங்களை கொண்டுள்ளது. அவை திட்ட நாள்கள், வாரங்களின் வடிவமைப்புகள் ஒழுங்கான வகுப்பறைக் கல்வியுடன் உள்ள கூட்டறவுத் திட்டங்களுக்கு சிறப்பாகப் பொருத்தமானவையாக உள்ளன.

# 2.1 காற்றோடு போனது

**இலக்கு**

*தம்முடைய பலவகை உறவுகள், மொழி, இடம் ஆகியவற்றுடனான தொடர்புகளைத் தெரிந்து முன்வைப்பதன் மூலம், தமது இடப்பெயர்வு வரலாற்றை அறிந்துகொள்வதுடன் இடப்பெயர்வு என்பது இயல்பானது என்பதை மாணவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்*

வகுப்பு 1 - 9 | 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
நாடுகளை அல்லது பகுதிகளை பதிவுசெய்ய நிலப்படங்கள் அல்லது பெரிய தாள் கீற்றுகள், வெற்றுத் தாள் கீற்றுகள், "தன் அடையாள மூலக்கூறு" 1.6 பயிற்சியிலிருந்து வரைகலைகள்

**நடைமுறை:**

- நிலப்படங்கள் (பிறந்தநாடு, குடியேற்றநாடு(கள்) ஐரோப்பா மற்றும் உலகப் படங்கள்) வகுப்பறையில் காட்சிப்படுத்தப்படும், அல்லது நாடுகளின் பெயர்கள் துண்டுத் தாள்களில் எழுதப்பட்டு சுவர்களில் ஒட்ட முடியும். நாலு முதன்மைத் திசைகளையும் உதவியாக சேர்த்துக்கொள்ளலாம். தற்போதைய இருப்பிடம் மற்றும் பள்ளியின் இருப்பிடத்தை எழுதி வகுப்பறையின் நடுவில் குறியீடாக வைக்கவேண்டும்.
- படங்களின் உதவியோடு தங்களது பிறந்த இடங்களில் போய் நிற்குமாறு ஆசிரியர், மாணவர்களுக்கு கூறுவர். அடுத்ததாக பெற்றோர் பிறந்த இடம், பின்னர் பேரன் பேத்தியர் பிறந்த இடத்தில் போய் நிற்குமாறு கூறுவர்.
- குடிபெயர்வுக்கான கூட்டு அறிமுகத்தைத் தொடர்ந்து மாணவர் தங்களது குடிபெயர்வு வரலாற்று வேலையை தனியாக தொடர்வர். அப்போது ஒரு A4 சுவரொட்டியில் தங்களது உறவு வலையமைப்புக்களையும் இன்றியமையாத தொடர்பு ஆட்கள், உறவுகள், உடன்பிறப்புகள், அவர்களது மொழிகள், இருப்பிடங்கள், நாடுகள் என்பனவற்றையும் எழுதி வரைந்து கொள்வர். (பார்க்க பயிற்சி 1.6) பயன்படுத்துவர். அங்கு நடுவிலுள்ள வட்டம் தற்போதைய அமைவிடத்தையும் வெளிவட்டம் நாடுகளையும் குறிக்கும். நெருங்கிய வட்டங்கள் மாணவர் போய்ப் பார்க்கும் பெற்றோர், உடன்பிறப்புகள், தாத்தாக்கள் நாடுகளைக் குறிக்கும். இந்த ஆட்களின் பெயர்களைப் பொருத்தமான வட்டங்களில் வரிசைப்படுத்துவர். இந்த ஆட்களின் இன்றியமையாத தன்மைக்கேற்ப எழுத்துக்களின் அளவு அமையலாம். மாணவரது மிக அறியாத அல்லது காணவே முடியாத உறவினரின் நாடுகளுக்கு மிகத் தூரத்து வட்டங்களைப் பயன்படுத்தலாம். மிகவும் முன்னேற்றமான மாணவர் வட்டக் காட்சிகளுக்கு நிகராக ஓர் உலகப் படத்தை அல்லது பருமட்டான உருவப் படத்தைப் பயன்படுத்தி தங்களது உறவுமுறை வலைப்பின்னலை ஆவணப்படுத்தலாம்.
- வகுப்பு முழுமையாக முன்வைத்த எடுத்துரைப்பும் கலந்துரையாடலும். பயிற்சி 2.7அ விலிருந்து தெரிவு செய்யப்பட்ட கேள்விகளை அடிப்படையாகக் கொண்டு பிறப்பு, குடிபெயர்வுப் பின்னணி பற்றிய கூட்டு எதிரொளிர்வு என்பனவற்றை முழுவகுப்பாக நடத்தமுடியும்.
- "தமது சொந்தக் குடும்பங்களின் அடையாளங்களைத் தேடுதல்" என்ற மகுடவாக்கியத்திற்கிணங்க தூரத்து உறவினர்கள் எழுதப்பட்ட கடிதங்கள் மற்றும் குடிபெயர்வு வரலாறு (பார்க்கவும் 2.3) பற்றி பெற்றோருடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களை உள்ளடக்கி மேலும் நடைபெறக்கூடிய வேலைகளை உள்ளடக்க முடியும்.

# 2.2 எனது வகுப்பறைக்குள் புலம்பெயர்வுக் கதைகள்

**இலக்கு**

*தங்களது நேர்காணல் திட்டத்தின் பகுதியாக மாணவர் தங்கள் வகுப்பறைத் தோழர்களின் குடிபெயர்வுக் கதைகளை ஆய்வு செய்ய முடியும். பொதுத் தன்மைகள் வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டே குடிபெயர்வின் தாக்கங்கள் ஒருவரது தன்வரலாற்றில் பிரதிபலிக்கிறது.*

வகுப்பு 3 - 9 | 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
நேர்காண் வினாக்களுடன் (வகுப்புடன் ஆக்கப்பட்டவை) பணித்தாள், A3 தாள்

**குறிப்புகள்:**

- ஓரிரு கிழமைகள் முன்னதாக இக்கருத்திட்டம் பற்றி மாணவர்களுக்கு ஆசிரியர் அறிவிப்பார். அதனால் மாணவர் தாமே இதுபற்றி வீட்டில் அறிவித்து வகுப்பறைக்கு ஒரு (நினைவுச் சின்னத்தை) சிறப்பான ஒரு பொருளைக் கொண்டு வரலாம். இந்தத் திட்டம் பெற்றோருடனான நேர்காணலுக்கும் வாழும் மாவட்டத்தில் வசிக்கும் மற்றவர்களது குடிபெயர்வு வரலாற்றை ஆய்வு செய்வதற்கும் நல்ல தொடக்கமாக அமையும். (பார்க்க 2.3, 2.7 அ மற்றும் ஆ கீழே) இது வழக்கமான வகுப்பறைக் கல்வியுடன் இணைந்து செயற்படத் தன்னை வழங்கி நிற்கும்.

**நடைமுறை:**

- அந்தத் திட்டத்தைப் பற்றி மாணவர்க்கு அறிவிப்பார். நேர்காணலில் எவ்வகையான கேள்விகளைக் கேட்கமுடியும் என எடுத்துக்காட்டுக்களுடன் கலந்துரையாடி செய்து காட்டப்படும். உள்ளடங்கும் நேர்காணலுக்கான பொருத்தமான தலைப்புக்களாவன: குடிபெயர்வுக்கான காரணங்களும் திகதியும், பிறந்த நாட்டு தொடர்புகள் குடிபெயர்ந்த நாட்டில் வாழ்க்கை, எதிர்கால நோக்கு (2.7அ இல் பரிந்துரைக்கப்பட்ட கேள்விகள்).
- கேள்விகள் வடிவமைக்கப்பட வேண்டிய முறை கலந்துரையாடப்பட்டு, பயிற்சிசெய்யப்பட வேண்டும். (குறுகிய ஆம் / இல்லை விடைதரக்கூடிய கேள்விகளைத் தவிர்க்கவும்). ஒரு கதை சொல்லுவதற்கு தூண்டக்கூடிய வினாக்களைத் தொடுப்பது வரவேற்கத்தக்கது.
- வயது பொருத்தமான, அல்லது பல்வயதுள்ளோர் 4 பேர் கூடிய குழுக்கள் (முடியுமானால் இணையராக) நேர்காணலுக்காக 4 – 6 கேள்விகள் கொண்ட பட்டியலை ஒழுங்கமைப்பர். இக்கேள்விகளுக்கு முன் நேர்காண்பவரின் வயது, பிறந்த மாகாணம், பிறந்த இடம் என்பவற்றை சுருக்கமாகக் குறித்துக் கொள்ளவேண்டும்.



- இணையராக மாணவர் குடிபெயர்வுத் தலைப்புப் பற்றி மாணவர் ஒருவரோடு ஒருவர் நேர்காணல் செய்வர். ஏற்கனவே வளர்க்கப்பட்ட உரைத் தலைப்புக்களைப் பின்பற்றி நேர்காணல் 5 – 10 மணித்துளிகள் நீடிக்கும். பின்னர் கதாபாத்திரம் மாற்றி அமைக்கப்படும்.
- போதுமான நேரம் கிடைப்பின் நேர்காண்பவர் தனது நேர்காணல் கூட்டாளி பற்றிய ஒரு விளம்பர அட்டையை உருவாக்க முடியும். அதனை அவருக்கு வழங்கலாம். அதனை "இவ்வார இடப்பெயர்வுக் கதை" எனும் தலைப்பில் விரிவாக்கலாம் அல்லது பெற்றோர் நிகழ்வுக்காக காட்சிப்படுத்த முடியும்.

2

- வகுப்பு முழுவதுமாக ஒரு நிறைவுக் கலந்துரையாடலை ஆசிரியர் வழிப்படுத்துவார். அதனில் ஏற்கனவே ஏற்றுக் கொண்டதான கருப்பொருள்களில் (குடிபெயர்வுக்கான காரணங்கள் முதலானவை) ஒப்பீட்டு முறையில் அமையும். தூண்டிகள்: எவ் வகையான பொதுமைகளை வேறுபாடுகளை நீர் தீர்மானிக்க முடியும்? ஏன் மக்கள் குடியகல்கிறார்கள்? குடிபுகுதலுக்கான நிகழ்தகவுக் காரணம் என்ன? உமது பெற்றோர் (பேரன்பேர்த்தியர்) குடிபெயராமலிருந்தால் நீர் இப்போது எங்கு எப்படி இருப்பீர்? என்ன செய்து கொண்டிருப்பீர்? (இத் தலைப்பில் ஓர் கட்டுரை).


---

# 2.3 எனது புலம்பெயர் வரலாறு எனது தனிப்பட்ட திறமைகள்

**இலக்கு**

*மாணவர் தங்கள் பலத்தை எங்கிருந்து பெறுகிறார்கள், எத்தகைய வளத்தைக் கொண்டுள்ளார்கள். அவர்களது குடிபெயர்வு வரலாறு ஒரு வளமாக என்ன பங்கு கொண்டுள்ளது என ஆராய்வர்.*

வகுப்பு 2 - 9 | 45 - 90 மணித்துளிகள்



**கருவிகள்:**
ஒரு "கதிரவன்" படம்
(எடுத்துக் காட்டு, கீழே பார்க்கவும்)
தாள், நிறங்கள்.

**குறிப்புகள்:**

தவறான விளக்கத்தைத் தவிர்ப்பதற்காக, ஆசிரியர் பெற்றோரை முன்னதாகத் தொடர்பு கொள்ள விரும்பலாம். மற்றும் செயற்பாட்டின் இலக்கு பற்றி விளக்கலாம். (வளங்கள் பற்றிய நேர்கணியமான தெளிவு பெற) இந்த செயற்பாடு ஒரு கூட்டுறவுத் திட்டமாக ஒழுங்கான வகுப்பறை போதனைக்கு நன்கு பொருந்துகிறது.


---

**நடைமுறை:**

- மாணவரில் தாம் கண்டு மெச்சும் குணங்கள் பற்றி அவர்களின் பெற்றோர், சகோதரர், உறவினர் மற்றும் தொடர்புடையோரிடம் நேர்காணல் செய்வது அவர்களது பணியாகும் என ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவிப்பார்.
- வகுப்பு முழுவதும் அல்லது குழுக்களாக மாணவர் இந்த நேர்காணலுக்கான கேள்விகளைத் திரட்டுவர். எடுத்துக்காட்டு: என்னில் பிடித்தது என்ன?, எனது அருமை என்ன?, என்னில் வியக்கும் விடயம் என்ன?, எனது தனித்துவம் என்ன? முதலியன.
- எல்லோருமாகச் சேர்ந்து கேள்விக்கொத்து ஒன்றை வடிவமைப்பர். இரண்டு, மூன்று வடிவமைப்பில் பல்வகைக் கடினத்தன்மை உடையன. ஒவ்வொரு மாணவரும் குறைந்தது மூன்று கணக்கெடுப்புகளை நிரப்பி எடுக்கவேண்டும்.
- மாணவர் இக்கருவிகளை தொடர்புபட்டோருக்கு நிரப்புவதற்காக கொடுப்பர். அல்லது இணைந்து கேள்விக் கொத்துக்களை நிரப்புவர். பிறப்பு நாடுகளிலுள்ள உறவினருடன் தொலைபேசி உரையாடல் (ஸ்கைப்) ஊடாகக் கணக்கெடுப்புகள் நடத்த முடியும்.
- தொடரும் கிழமையில் கணக்கெடுப்புகளின் பகுப்பாய்வு: (மாணவர் தம்முடைய கேள்விக் கொத்துகளை அல்லது தமது வகுப்பறைத் தோழனின் / தோழியின் கேள்விக் கொத்துக்களை மதிப்பீடு செய்வர்) முதலில் "கதிரவன் பட" வடிவில் (கதிரவன் ஆற்றல் வலு என்பவற்றின் குறியீடாக் கீழே படத்தைப் பார்க்கவும்) இந்த நோக்கத்திற்காக தாளில் வலதுபக்க கரையில் கதிரவன் படத்தை வரைந்து, நிறம் தீட்டி, தங்கள் பெயருடன் குறித்துக் கொள்ளவர். பலவித அளவுகளில் அம்புக்குறிகளும் நிறங்களும் சூரியனைச் சுட்டி நிற்கும். கேள்விக் கொத்திலுள்ள கூற்றுக்களை இந்த அம்புக்குறிகள் தாங்கி நிற்கும். (எ.கா. "நான் உனது தாங்கும் வலிமையினை மெச்சுகிறேன்"). இந்த அம்புக்குறிகள் எங்கிருந்து கதிரவன் (அல்லது குறிப்பிட்ட பிள்ளை) தமது வலுவை பெறுகின்றனர் என்பதை முறையே சுட்டி நிற்கும். (அல்லது பேசப்படும் பிள்ளையை) ஒவ்வொரு அம்புக்குறியும் ஒரு வலுவின் ஊற்றையும் அடையாளத்தையும் குறியீடு செய்கின்றது. யாரிடமிருந்து கூற்று வாக்கியம் உருவாகியதோ அவரது பெயரை ஒவ்வொரு அம்புக்குறியும் தாங்கி நிற்கும்.
- குழுக்களில் மாணவர் தங்களது கதிரவன் படத்தினதும் தம்முடைய தனிப்பட்ட திறமைகளையும் அளிக்கை செய்வர். இறுதியாக இந்த வரைபடங்கள் பெற்றோர் சந்திப்பு போன்ற நிகழ்வொன்றில் பின்பு காட்சிப்படுத்த முடியும்.

- வகுப்பு முழுமையாக நடத்தும் நிறைவு மதிப்பீட்டுக்கான தூண்டிகள்:
  - இந்த வளங்களுக்கும் எனது குடிபெயர்வுத் தன்வரலாற்றுக்கும் என்ன தொடர்பு?
  - வேறு என்ன தனிப்பட்ட திறமைகள் என்னிடம் உள்ளன?
  - வாழ்வின் ஓட்டத்தில் எப்படி எனது தனிப்பட்ட திறமைகள் மாற்றமடைகிறது?
  - எனது தனிப்பட்ட திறமைகளுடன் நான் என்ன எல்லாம் செய்ய முடியும்?

**எடுத்துக்காட்டு**
**கதிரவன் படம்**






# 2.4 எனது தாயக நிலங்கள் – தன்வரலாற்று கதை சொல்லுதல்

**இலக்கு**

*தாய்நாடு தன் அடையாளம் பற்றிய கேள்வி எப்போதும் குடிபெயர்வு பின்னணியுள்ள மாணவருக்கும், பிள்ளைகளுக்கும் விடையளிக்கக் கடினமானது. "எனது தாய்நாடுகள்" எனும் இப்பயிற்சியில் மாணவர்கள் தமது குடிபெயர்வு தொடர்பான புவியியல் பரம்பலில் தனது உறவுகளைக் காட்டுவர். தமது தன்வரலாற்று உரைகளுடன், தமது குடிபெயர்வுத் தன்வரலாறு எப்படி இருந்தது, அது சில ஆட்கள், இடங்கள், நிகழ்வுகளால் எப்படி தாக்கம் பெற்றது என்பதை அடையாளம் காட்ட உதவும். இந்தப் பயிற்சி மாணவரை ஆக்கத் தன்மையுடன் "தாய்நாடு" பற்றிய கருப்பொருளுடன் ஈடுபட வைக்கும்.*

வகுப்பு 4 - 9 | 45 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
மாணவர்களின் தனிப் படங்கள், பெற்றோர் படங்கள், குடும்ப உறுப்பினர் படங்கள், உறவினர் நண்பருடன் படங்கள் உலகப்பட A3 பிரதிகள் (முடியுமாயின் ஐரோப்பா படம்)

**நடைமுறை:**

- ஒரு கிழமைக்கு முன்னதாக மாணவர் தங்களதும் குடும்ப அங்கத்தவர்களதும் நண்பர்களதும் மற்றும் உறவினரதும் படங்கள் அல்லது வரைபடங்களைத் திரட்டி வகுப்புக்குக் கொண்டு வரும் ஒப்படை வேலை ஒன்றைப்பெறுவர்.
- தொடரின் தொடக்கத்தில், மாணவர் நிலத்தில் வட்டமாக இருந்து நாடுகளின் பெயர்கள் இடப்பட்ட ஐரோப்பா அல்லது உலக வரைபடத்தின் A3 அளவு பிரதியைப் பெறுவர். முதலில் தமது படத்தை உலக வரைபடத்தில் தமது வசிப்பிடத்தில் ஒட்டுவர். பின்னர் அவர்கள் தம்மோடு தொடர்பில் உள்ள ஒவ்வொரு நாட்டையும் நகரையும் அல்லது வேறு இடங்களையும் நிறங்களால் வட்டமிட்டுப் பெயரிடுவர். பின்னர் தங்களது படத்தில் வட்டமிட்ட நாடுகளையும் நகரங்களையும் நிறக்கோட்டினால் இணைப்பர்.
- தனியாளாக இப்பணியைச் செய்து கொண்டு எந்தக் குடும்ப அங்கத்தவர் மற்றும் எந்த ஆளுடன் இந்த நாடு, அல்லது இடத்துடன் தொடர்பில் உள்ளார்களோ அவரது படத்தினை வரைபடத்தில் அந்த இடத்தில் ஒட்டுவர்.

- இறுதிப் படிமுறையாக அவர்கள் அந்த ஆளுடன் உள்ள ஒரு பொதுப் பட்டறிவைப் பற்றி வாக்கியம் ஒன்றை அந்த இணைக்கும் கோட்டில் எழுதுவர். (எ.கா. பிறந்த நாளைக் கொண்டாடியமை, ஓர் அன்பளிப்பைப் பெற்றமை, வீட்டு வேலை ஒப்படைகளுக்கு உதவியமை, கதைகள் கூறியமை, எழுதுவதற்கு கற்றுக்கொடுத்தமை, முதலியவை) எதிர்மறை நிகழ்வுகளுக்கும் ஓர் இடம் இருக்க வேண்டும். அப்படியான நிலைகளில் வாக்கியங்கள் எதிர்மறை அடையாளத்துடன் தொடங்கவேண்டும்.
- 4 பேர் கொண்ட குழுவில் மாணவர்கள் தங்களுக்குள் தாம் கண்டு கொண்ட குடிபெயர்வு தன்வரலாற்றைக் கூறி மற்றவர்களதும் இடங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றியும் கருத்துக்களைக் கூறுவர்.
- இறுதியாக நிறைவு மதிப்பீடு கேள்விகளும், தூண்டிகளும்:
  - தாய் நாடு என்பது உமக்கு தரும் கருத்து என்ன? எங்கு உண்டு? ஏன்?
  - தாயகம் எனும் கருத்துடன் முதன்முதலாக எதனைத் தொடர்புபடுத்துகிறீர்? வாழிடம், பிறந்த இடம், குடும்பம், நண்பர்கள் முதலியவை)
  - உமது தாயகம் எனப் பல இடங்களை பட்டியலிட்டீரா? ஆம் எனில், எவை? ஏன்?
  - உமது இடத்தில் அல்லது வாழிடத்தில் தன்னிடம் போல உணர்தல் எவ்வளவு இன்றியமையாதது (0 – 5 அளவுகோலில்)?
  - நீர் தற்போது வாழும் நாடு உமது தாய் நாடாகுவதற்கு நீர் என்ன செய்ய முடியும்?
  - உமது தாய் நாடு இங்கு எனில் உமது பண்பாட்டினை இழப்பீரா?
- நடத்தக்கூடிய ஆழமான ஆய்வு: தாய்நாடு பற்றி பல்வேறு ஆட்களையும் நேர்காணல் செய்தல்.

---

# 2.5 நேற்று – இன்று – நாளை

**இலக்கு**

*ஒரு நேரக்கோடு வாயிலாக மாணவர் தம்முடைய குடிபெயர் தன்வரலாறு பற்றி ஒரு முழுமனப் பதிவை பெற்றுக் கொள்வர். இது தங்களது தன்வரலாற்றில் குடிபெயர்வின் தாக்கம் பற்றி உருக்காட்டலுக்கு ஊக்கப்படுத்தும் அதேவேளையில் மறுபக்கம் அவர்களது சொந்த ஆர்வங்கள், விருப்புக்கள், நம்பிக்கைகளுடன் ஈடுபாடுகாட்டவும், இடமளிக்கும்.*

வகுப்பு 4 - 9 | 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
நேரக் கோடு அல்லது வாழ்வுக்கோட்டுக்கான ஒரு A3 தாள். (கீழே எடுத்துக்காட்டைப் பார்க்கவும்)

**குறிப்புகள்:**

இந்தப் பயிற்சி பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டது: Gudjons, H., Wagner-Gudjons, B. and Pieper, M: (2008): Auf meinen Spuren. Übungen zur Biografiearbeit. (என் தடயங்களைப் பின்பற்றி, தன்வரலாறுகளுடன் செயற்படும் பயிற்சிகள்). Bad Heillbrunn: Klinkhardt.

**நடைமுறை:**


- தொடக்கத்தில் மாணவர்கள் பின்வரும் வினாக்களுடன் ஒரு தாளைப் பெறு-வர். ஆசிரியர் இப் பயிற்சியை அறிமுகப்படுத்தி விளக்கமளித்தபின் மாணவர்கள் அதற்கு பதிலளிப்பர்.

அ) எனக்கு அகவை 8 ஆக இருக்கும் போது
- நான் முக்கியமாக ஆர்வம் செலுத்திய விடயம்
- ஒரு சிக்கல், ஒரு கடுமையான விடயம்
- ஒரு நம்பிக்கை அல்லது ஒரு விருப்பம்

ஆ) எனது வாழ்வில் இந்தநாள்

இ) இன்னும் 10 ஆண்டுகளில்:

## நேரக்கோடு அல்லது வாழ்வுக் கோட்டுக்கு எடுத்துக்காட்டு




- இரண்டாம் கட்டத்தில் சுழியத்தில் (ஸ்ரீஅகவை) ஆரம்பித்து 25 வயது மட்டும் விரிக்கப்படும் ஒரு நேர் ∴ வாழ்வுக்கோட்டை (A3 தாளில்) வரைவர். தனியாள் பணியாக மாணவர் இந்த நேரக் கோட்டில் எந்த இன்றியமையாத நிகழ்வுகளைப் பதிவு செய்யலாம் என எண்ணுவர். எதிர்மறை என உணரப்படும் நிகழ்வுகள் கீழே நிரற்படுத்தப்படும். உடன்பாடானவை மேலே பதிவு செய்யப்படும். மாற்றமுறும் சூழ்நிலைகளுக்கு (பாடசாலை தொடக்கம், குடிபெயர்வு, வேலையின் தொடக்கம், சிலசமயம் குடும்பத் தொடக்கம், குடியகல்வு முதலியவை) பொருத்தமான குறியீடுகள் உருவாக்கப்பட முடியும்.
- நேரக்கோடுகள் அல்லது வாழ்வுக்கோடுகள் உள்ள பக்கங்கள், காட்சிப்படுத்தப்பட்டு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டு குறிப்புச் செய்யப்பட்டு கலந்துரையாடப்படும். அப்படிச் செய்யும் போது மனப்பதிவுகள் பரிமாறப்பட்டு, கேள்விகளுக்கு விடைகள் வழங்கப்படும்.
- முழு வகுப்புடன் தொகுக்கும்போது பிரதிபலிக்கும் முதன்மையான கேள்விகளும் தூண்டிகளும்.
  - இந்த வேலையில் எவ்வகையான உணர்வுகளைப் பட்டறிந்தீர்?
  - உமது வாழ்வுக்கோட்டில் பொதுமைகளும் வேறுபாடுகளும் உண்டா? எங்கே?
  - இப் பொதுமைகளையும் வேறுபாடுகளையும் எதனுடன் தொடர்புபடுத்திக் கூறுவீர்? (பால், அகவை, குடிபெயர்வுப் பின்னணி முதலியவை)
  - எந்த நிகழ்வுகள் குறிப்பாக உடன்பாடானவை / எதிர்மறையானவை எனக் குறிக்கப்படுகின்றன? ஏன்?
  - எவ்வாறு ஒவ்வொன்றும் இறந்த, நிகழ், எதிர்காலங்களுடன் இணைக்கப்படுகிறது?

2

# 2.6 நான் வரலாறு எழுதுகிறேன்.

**இலக்கு**

*குடிபெயர்வுக் கதை, மற்றும் இரு பண்பாட்டு இரு மொழி ஆற்றல்களிலிருந்து கிடைக்கும் வளங்கள் பற்றிய தெளிவை மாணவர்களுக்கு ஏற்படுத்தல். இந்த மாணவர் தமது ஒவ்வோர் நாள் வாழ்க்கையிலும் இந்த வளங்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் எனக் காட்டுவர்.*

வகுப்பு 1 - 9

30 - 60 மணித்துளிகள்

**கருவிகள்:**
தாள் கீற்றுகள்,
சுவரொட்டித்தாள்

**குறிப்புகள்:**

இங்கு நினைவுபடுத்தப்படும் மற்றும் தொடர்புபடுத்தப்படும் காட்சிகள் மீளவும் நாடகங்களாக நடிக்கப்படும். ஒவ்வொரு காட்சி முடிவிலும் அதன் உள்ளடக்கம் மற்றும் அளிக்கை பற்றிய பின்னூட்டலை பார்வையாளர் நடிகர்களுக்கு வழங்குவர்.

---

**நடைமுறை:**

- அறிமுகமாக, ஆசிரியர் தனது இருபண்பாட்டு இருமொழி ஆற்றல்களுடன் குடிபெயர்வு தன்வரலாற்றை எப்படி ஒரு வளமாகப் பயன்படுத்தினார் என்பதை எடுத்துக்காட்டுடன் மாணவர்க்கு வழங்குவார். மேலும் கதைப்பகுதிகள் மாணவர்களுடன் உருவாகும். எடுத்துக்காட்டு: "வரும் வழியில் விமானநிலையத்தில் ஒருவருக்கு காவல் துறையினருடன் தொடர்புகொள்ள உதவி செய்தேன். ஏனெனில் என்னால் மொழிபெயர்க்க முடியும்" "எனது சமயம் பற்றிய இருவரின் உரையாடலில் துணிவுடன் கலந்துகொண்டேன். ஏனெனில் நான் அந்தச் சமயத்தின் ஓர் உறுப்பினன்." "இரு வேறு பண்பாட்டுப் பின்னணியில் வந்த இருவரது தவறான விளக்கத்தை பார்த்ததினால் அதில் என்னைத் தொடர்புபடுத்தி அவர்களுக்கு வேண்டிய விளக்கம் கொடுத்து துணைசெய்ய முடிந்தது."

- தொடர்ச்சியாக, மாணவர் மற்றைய தம் பட்டறிவுகளை நினைவில் கொண்டு (அல்லது தங்கள் சூழலில் இருந்து வருபவரின் பட்டறிவுகளை) ஒரு தாளின் கீற்றில் எழுதுவர்.

- வகுப்பு மாணவர் முழுமையுமாக (அல்லது இரு குழுக்களாக) வட்டமாக நின்று கீற்றை உரத்துப் படித்துக் குறிப்புகள் சொல்லி அவை "எனது குடிபெயர்வு வளங்கள்" அட்டையில் ஒட்டப்படும். எடுத்துக்காட்டாக: "நான் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசுகிறேன். அதனால்தான் என்னால் நடுநிலை வகிக்கமுடிகிறது." "இரண்டு நாட்டு மக்களுடன் என்னால் தொடர்பு கொள்ள முடியும்" "எனக்குப் பல வசிப்பிடங்கள் உள்ளது, அங்கெல்லாம் நண்பர்களும் உள்ளனர்." "என் தாய் நாட்டு விழாக்கள், இங்கு கொண்டாடப்படும் விழாக்கள் என இரண்டுமுறை நான் கொண்டாடுவேன்", "மற்றவர் அறியாத பல கதைகளை நான் அறிவேன்" முதலியன.

- மேலும் தலைப்பின் ஆராய்வு / தொடர்ச்சி: (வீட்டு வேலை ஒப்படைகளுக்கு மிகப் பொருத்தமானது) "தன் உருவ மாதிரிகளின் ஒளிப்படம்": மாணவன் / மாணவி அவர்களுக்கு இன்றியமையாத பத்து இடங்களில் தம் படங்களைத் தாமே எடுப்பர் (செல்பிகள்). இப் படங்களின் வழியாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்கள் ஆவணப்படுத்தப்பட்டு மற்றும் வளங்கள் வெளிப்படுத்தப்பட்டு, அட்டையில் காட்சிப்படுத்தப்படும்.

# 2.7 திட்ட நாள்களுக்கான மூன்று ஆலோசனைகள்

**தொடக்க நிலைக் குறிப்புகள:**

பின்வரும் பரிந்துரைகள் மிகுதியான நேரத்தை எடுப்பனவாகவும் முதன்மையான கருத்திட்ட நாள்களுக்கு மிகவும் பொருத்தமானதாகவும் உள்ளன. பா.மொ.க ஒவ்வொரு கிழமையும் 2 – 3 மணித்தியாலங்களே கற்பிப்பதனால் திட்ட நாள்கள் அல்லது ஒவ்வொரு நாள் திட்டங்கள் மிக அரிதாகவே நடக்கும்.
பரிந்துரைக்கப்பட்ட கருத்துக்கள் பா.மொ.க வுக்கும் பாரம்பரிய பெருங் கல்விக்கும் இடையே அல்லது வெவ்வேறு பா.மொ.க குழுக்களுக்குமிடையில் பல கூட்டுறவான முயற்சிகளுக்கு குறிப்பிட்ட பாடசாலையின் திட்டநாள் வாரத்தில் ஒருநாள் அல்லது தனியான திட்ட நாள்களின் கட்டுமானத்துள் நடத்தப்படுவதற்கு பொருத்தமானவை.
பின்வரும் பரிந்துரைகளுக்கு இன்னொரு சூழல் பா.மொ.க நிதி வழங்குபவர்களால் வழங்கப்படும் விடுமுறை அல்லது கோடைக்கால பயிற்சி நெறிகளாகும்.

**இலக்கு**

*பிறந்த நாட்டிலும் புகுந்த நாடுகளிலும் குடிபெயர்வு, பண்பாடு மற்றும் மொழியியல் பல்வகைத்தன்மை (அலகு 3 ஐப் பார்க்கவும்) போன்ற கருப்பொருள்கள் மிகவும் உயரிடத்தைப் பெற்றுள்ளன. விழிப்புணர்வு, உணர்திறன், இத் தலைப்புகள் தொடர்பான திறன்களைக் கையகப்படுத்துவது என்பது கேள்விக்கு இடமில்லாதவாறு மிக உயர்ந்த தொடர்புடைய உணர்வாற்றல் சார்ந்த நோக்காகும்.*

## 2.7அ என் குடும்பத்தின் குடிபெயர்வுக்கதை

வகுப்பு 4 - 9 | கருத்திட்ட நாள்

**நடைமுறை:**

- இத்திட்டம் ஆகக் குறைந்தது இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது. (எ.கா. ஒரு கருத்திட்ட கிழமையின் இரண்டு அரை நாள்கள்). முதற் கிழமையில், குடும்பத்தின் புலம்பெயர்வு கதைக்கான கேள்விகளைத் திரட்டி ஒரு கேள்விக்கொத்தாகத் தொகுக்கப்படும். (மாதிரி வினாக்களுக்கு கீழே பார்க்க). இவ்வினாக்களுக்கு முதலில் தனித்தனியாக மாணவர்களால் விடையளிக்கப்படும். பின்னர் அவை சிறு குழுக்களுக்கிடையில் பரிமாறப்படும்.

- வீட்டு வேலை ஒப்படையாக, மாணவர் தமது பெற்றோரை அல்லது பேரர் மற்றும் உறவினரை நேர்காணல் செய்வர். விடைகளை எழுத்தில் பதிவு செய்து வகுப்பறைக்கு எடுத்து வருவர்.

- இரண்டாம் கட்டத்தில் முடிவுகள் ஆவணப்படுத்தப்பட்டு ஆராயப்படும். சிறு சுவரொட்டிகள் இந்நோக்கத்திற்காக உருவாக்கப்படும். பின்னர் அவை அளிக்கை செய்யப்பட்டு கலந்துரையாடப்பட்டு ஒப்பிடப்படும். இன்றியமையாத பண்புகள்: குடிபெயர்வுக்கான காரணங்கள், ஐரோப்பா அல்லது உலகப்படத்தின் மேல் காட்சிகள், குடும்பத்தின் மீதான குடிபெயர்வின் தாக்கம் (எ.கா. பொருளாதார, பண்பாட்டு, மொழி அடிப்படையில்) சுவரொட்டிகளைப் படங்களாலும், பொருள்களாலும், மாதிரி நேர்காணல் கேள்விகள் வரைபடங்களாலும் நிறைவுபடுத்தப்பட முடியும்.

---

- இரண்டாம் கட்டத்தில் முடிவுகள்

  – குடிபெயர்வுப் பின்னணி பற்றிய கேள்விகள் (எங்கே பிறந்தீர்கள்? இங்கு எப்போது வந்தீர்கள்? அப்போது என்ன வயது? உறவினர்களுடன் எத்தகைய தொடர்புகளைக் கொண்டிருந்தீர்கள்? எப்படி இத்தொடர்புகளைப் பேணுகிறீர்கள்? எப்படிப் பெற்றோருடனும், சகோதரர்களுடனும் பேசுகிறீர்கள்? முதலியவை.)

  – பெற்றோர், பேரர்கள் மற்றும் உறவினர்களின் குடிபெயர்வு பற்றிய கேள்விகள் (எங்கே பிறந்தார்கள். இப்போது எங்கே வாழ்கின்றார்கள்? ஏன் இங்கே வந்தார்கள்? உங்கள் குடும்ப உறுப்பினர்கள் உங்கள் பெற்றோர், பூட்டன், பூட்டிமாரின் தாய்நாடு பற்றி எப்படிப் பேசுகிறார்கள்? என்ன சிறப்புக் கொண்டாட்டங்களை உங்கள் குடும்பத்தில் கொண்டாடுகிறீர்கள்? யார் யார் பங்குபற்றுவர்? என்ன சாப்பிடுவார்கள்? எந்தக் குழுக்களுடன், கூட்டுக்களுடன், நிறுவனங்களுடன் அவர்கள் இணைந்திருக்க விரும்புவர்? பிறந்த நாட்டுடனும், குடிபுகுந்த நாட்டுடனும் எவ்வகையான தொடர்புகளைப் பேணுவர்? பின்னோக்கிப் பார்க்கையில் குடிபெயர எடுத்த முடிவை எப்படி மதிப்பிடுவர்? எக்கனவுகள், ஆசைகள் நிறைவெய்தின? எவை நிறைவேறவில்லை?

2

## 2.7ஆ எங்கள் குடியிருப்புப் பகுதியில் பண்பாட்டுப் பல்வகைத் தன்மை

வகுப்பு 4 - 9 | கருத்திட்ட நாள்

**நடைமுறை:**

- ஆசிரியர் வகுப்பறைக்கு அறிவிப்பார்: நேர்காணல் அல்லது அறிக்கை சார்ந்து பின்வரும் விடயங்கள் அமையவேண்டும் (இச்செயற்பாடு பின்வருமாறு அமையும் என்பதை). புலப்பெயர்வுக்கான அடிப்படைக் காரணம் விளக்கமாக, குடியிருப்பு பகுதியிலுள்ள கலாச்சார வேறுபாடுகள், தமது குடும்பம் மற்றும் இனக்குழுவினரை வெளிக்காட்டுவதாகவும், பிரதிபலிப்பதாகவும் இருக்கவேண்டும். இக்கருத்திட்டம் 2.7 இல் உள்ள பரிந்துரையை கூடியளவு தொடர்ந்து கடைப்பிடிக்கும்.
- வகுப்பு முழுமையாக அல்லது குழுக்களில் மாணவர் நேர்காணல் கேள்விகளை அயலவர் மற்றும் மற்றைய அயல் மக்களிடமிருந்து திரட்டுவர். திட்டம் 2.7அ வில் உள்ள கேள்விகள் ஒரு அடிப்படையாக அமையும். அது பிறந்த நாடு, மொழி, குடிபெயர்ந்த காலங்கள் பற்றிய தகவலுடன் விரிவாக்கப்படும்.
- இப் பகுப்பாய்வு 2.7அ கருத்திட்டத்துக்கு உரிய ஒரு மாதிரியைப் பின்பற்றும்.

---

## 2.7இ குடிபெயர்வு எங்கள் எல்லோரையும் ஆவலுடையோராக ஆக்குகின்றது!

வகுப்பு 4 - 9 | கருத்திட்ட நாள்

**நடைமுறை:**

- கருத்திட்டம் 2.7ஆ விலிருந்து எடுக்கப்பட்ட நேர்காணல்களின் உண்மையான தொடர்ச்சியாக, வெவ்வேறு பண்பாட்டுடைய குடிபெயர்ந்தோர் (எடுத்துக்காட்டு மாணவர் அல்லது ஆசிரியருடன் தொடர்புபட்டவரும், அயலவர்களும்) தமது குடிபெயர்வு வரலாற்றை வகுப்பு மாணவர்களுக்கு கூறும்படி அழைக்கப்படுவர். முன்னேற்பாடாக ஆசிரியர், மாணவர்களுடன் இன்றியமையாத இடங்கள், குடிபெயர்ந்த தன்வரலாற்றுப் பண்புகள் பற்றிக் கலந்துரையாடலாம், அதனுடன் ஒரு சட்டகத்தினை உருவாக்கி அதில், எடுத்துக்காட்டாக, பிறந்த இடம், புலப்பெயர்வு காரணம், பயணம், வருகை, இன்றையநிலை, விருப்புகள் முதலியவற்றை உள்ளடக்கலாம்.
- கதைகூறும் வேளையில் மாணவர்கள் சட்டகத்தில் குறிப்புக்கள் எழுதலாம் பின்னர் வீட்டுவேலையாக குடிபெயர்ந்த வேளையில் நாட்டின் சூழல் குறித்தும், அந்நாட்டைப்பற்றியும் ஒரு ஆய்வுத்திட்டத்தை உருவாக்கி வழங்கலாம் அல்லது அதன் நிலைப்பாடு பற்றிய ஒரு அடிப்படை எழுத்துருவை வாசிக்கலாம்.
- முடிவில் மேற்கொள்ளப்பட்ட விடயங்களையும் தமது புலப்பெயர்வுக்கான சூழ்நிலை நோக்கத்தையும் ஒப்பிட்டு ஒரு கலந்துரையாடல் நிகழ்த்தலாம்.

# அலகு **3**:
# எங்கள் மொழிகள் – நாம் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசுகின்றோம்.

3

## அறிமுகம்

மக்கள், தாமாகவே பல்பண்பாட்டுச் சூழலில் தம்மைத் ஈடுபடுத்த எவ்வித தப்பெண்ணமும் இல்லாமல், மற்றைய பண்பாட்டுப் புலத்திலிருந்து வரும் மக்களுடன் வெற்றிகரமாக தொடர்பு கொள்ளக் கூடியளவு இருத்தல் என்பதே பல்பண்பாட்டு ஒருங்கிணைந்த அல்லது உள்ளடக்கிய கல்விக்கலையின் முன்னுரிமை நோக்காக அமைகிறது. இவ்வாறு செயற்படும்போது, அவர்கள் தங்கள் அடையாளத்தை இழக்கவேண்டும் என்ற எவ்வித அழுத்தமும் இல்லாமல் பழகக்கூடியதாக இருக்கவேண்டும்.

பல்பண்பாட்டுச் சமூகங்களின் மொழியியல் பக்கம் பன்மொழியம் ஆகும், அதுவே ஒவ்வொரு குடிபெயர்ந்த நாடுகளின், ஒவ்வொரு பாடசாலை மற்றும் ஒவ்வொரு வகுப்பின் உண்மை நிலையாகும். இப் பன்மொழியத்தைத் திறந்த மனத்துடனும் ஆர்வத்துடனும் எதிர்கொள்ளலும் அதே வேளையில் ஒருவரது தன் மொழி(களை) வளர்த்தலும் மதித்தலுந்தான் பல்பண்பாட்டு ஆற்றல்களில் மிக இன்றியமையாத தவிர்க்கமுடியாத தரமிக்கதாக அமைகின்றது.

பாரம்பரிய மொழிக்கல்வி இந்த வகையில் ஒரு பங்களிப்பை மேற்கொள்ள முடியும், மேற்கொள்ள வேண்டும். அதன் நோக்கு முதல் மொழியிலேயே இயல்பாக அமையும். எப்படியிருப்பினும், இது மாணவரின் மற்றைய வளங்களையும் திறன்களையும் காணாதுவிடுதல் அல்லது கருதாதுவிடுதல் எனப் பொருள்படக் கூடாது. (இதேபோல, இது வழக்கமான கல்வி வகுப்புக்களில் இடம்பெறக்கூடாது. இதனை ஏற்றுக்கொண்டு இந்த ஆற்றல்களை அவர்களது ஆசிரிய மற்றும் வாழும் சூழல் வழிகாட்டலின் பகுதியாக பயன்படுத்த வேண்டும்)

பின்வரும் ஏழு முன்மொழிவுகளும் எப்படி மாணவர்களின் மற்றும் சமூகத்தின் இரு மொழியம் மற்றும் பன்மொழியம் ஆகியன ஊக்கமிகு கற்பித்தல் தொடருக்கு வழியமைக்கும் என்பதைக் காட்டுகிறது. இக் கருத்திட்டங்கள் மிகவும் ஊக்கமளிப்பவை. அவை உடனடியாக மீட்டெடுக்கக்கூடிய, கைவசமுள்ள ஆற்றல்களுக்கும் பட்டறிவுகளுக்கும் இட்டுச் செல்லக்கூடியவை. பல நேரங்களில், அவை ஆக்கச் செயல்முறைத் தெரிவுகளுடன் இணைக்கப்படக்கூடியன. இறுதியாக, ஆனால் குறைந்ததல்ல, மற்ற மொழிகளுடனான ஒப்பீடு ஒருவரது தன்மொழியின் இயல்புகளையும் தனித்துவங்களையும் குறிப்பிடத் தகுந்த முறையில் பெருமளவு வெளிப்படுத்தும். எந்தெந்த பகுதி ஆற்றல்கள் எந்தெந்த அலகில் (நோக்கு ஆற்றல், பிரதிபலிப்பு ஆற்றல், செயற்படுவதற்கான ஆற்றல்) முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன என்பது புத்தகத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள கண்ணோட்டமூடாகத் தெளிவாகிறது. வகுப்புக்களுக்கும் தரங்களுக்குமான ஒப்படைகள், விரிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மையான பரிந்துரைகள், சிறு திருத்தங்களுடன் மட்டும், மேல் அல்லது கீழ் வகுப்புக்களில் நடைமுறைப்படுத்தலாம்.

நிறைவாக, ஓர் இன்றியமையா குறிப்பு: முதல்மொழி சார்ந்து, பா.மொ.க எழுத்தறிவு ஆற்றல்களின் (படித்தல் எழுதுதல் ஆற்றல்களை உள்ளடக்கிய எழுத்துமொழி பற்றிய ஆழ்நோக்கு வளர்ச்சியை) முன்னுரிமைப்படுத்துகிறது. இது நடைபெறக்கூடியது, பல மாணவர்கள் வீட்டில் முதல்மொழியினைப் பேச்சுமொழியாக சிலசமயம், குறிப்பிட்டளவு சொற்களஞ்சியத்துடன் பயன்படுத்துகின்றனர். எப்படியிருப்பினும், இந்த இயலில் மொழி பற்றிய கருத்திட்டங்கள், முற்றிலும் பேச்சுமொழிகளை உள்ளடக்குகின்றன. இதனால், (முதல் மொழியிலும், குடிபுகு நாட்டு மொழியிலும்), மொழி வழக்கின் குழூஉக்குறிகள் அல்லது வடிவங்கள் உள்ளிணைக்கப்படுகின்றன.

# 3.1 மொழி வெளிக்கோடுகள்


**இலக்கு**

*இச்சிறிய திட்டம் எல்லா அகவை மட்டங்களுக்கும் பொருத்தமானதும், ஓர் ஆக்கநிலையிலே மாணவருக்கு தம் மொழிச் சூழலைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும், அதேவேளையில் மாறுபாடான மொழிகளுக்கும் தம்முடைய உறவுமுறையில் உருக்காட்டல் கொள்ளவும் (உருக்காட்டும் ஆற்றல்) துணை செய்கின்றது. அதேவேளையில், ஆசிரியருக்குக் கற்பித்தல் செய்யக்கூடிய பயன்தரு கலந்துரையாடல்களுக்கும் வழிசெய்யும்.*

வகுப்பு 1 - 9

30 மணித்துளிகள்

**கருவிகள்:**
ஒரு A4 தாளின் ஒரு ஆண் பிள்ளை அல்லது பெண் பிள்ளையின் வெளிக்கோட்டுப் படம் (அசல் படிகள், பார்க்க ப. 16, 17). நிறப்பென்சில்கள்.



**குறிப்புகள்:**

3.5 இல் விளக்கியபடி இத் திட்டம் மொழி வரலாற்றுத் தலைப்புகளுக்கு பெரிதும் ஒரு முன்னுரையாகப் பொருந்தும்.

**நடைமுறை:**

- ஆசிரியர் நடைமுறையை மிகக் கவனமாக வழிநடத்துவார்: ஆனால் அதிகநேரத்துக்கு அல்ல. நாம் எல்லோரும் பல மொழிகளுக்குள்ளும், பல மொழிகளுக்கிடையிலும் வளர்கிறோம். எங்களுடைய தாய்மொழி, பள்ளியில் பேசும் மொழி, அயலவரால் பேசப்படும் மொழி, விளம்பரங்களில் இருந்து கேட்கும் ஆங்கில மொழி போன்றவை. தாய்நாட்டிலும், வாழிடத்திலும் பயன்படுத்தப்படும் பேச்சுமொழி (உள்ளூர் மொழி) எழுத்துமொழி போன்றவையும் மொழியாக கருதப்படவேண்டும். இம் மொழிகளிற் பலவற்றை நாம் பெரிதும் விரும்பக்கூடும். சிலவற்றை அந்தளவு விரும்பாமல் விடலாம். இந்த மாறுபாடான உறவு முறைகளை தனியான மொழிகளை உடலிற் சில பகுதிகளுடன் ஒப்பிட்டு நோக்குவதனூடாகச் சுட்டிக்காட்டலாம்.
- ஓர் ஆண் அல்லது பெண் பிள்ளையின் வெளிக்கோட்டுப் படமுடைய ஒரு தாளை ஒவ்வொரு பிள்ளையும் பெற்றுக்கொள்கிறது. ஒப்படை: நிறப் பென்சில்களால் நிறங்களின் கதையை உருவாக்குங்கள் (எ.கா. : சிவப்பு = பேச்சுமொழியில் தாய்மொழி நீலம் = எழுத்து வழக்கில் தாய்மொழி பச்சை = குடிபெயர் நாட்டின் மொழி(பேச்சுமொழி) வழக்கு, ..., நாவல்நிறம் = ஓர் அயலவர் குடும்பமொழியாக தமிழ், முதலியன.)
- மொழி வெளிக்கோட்டில், ஒரு குறிப்பிட்ட மொழிக்குப் பொருந்தும் விதமாக ஒருபகுதியை தொடர்புடைய நிறத்தினால் தீட்டுக (எ.கா. தாய்மொழி / பேச்சுமொழி இதயத்துக்கு அருகேக் பாடசாலை மொழியான பிரெஞ்சு கைகளுக்கு அருகே, ஏனெனில் அது எனது வேலைக்குப் பின்னர் உதவியாக இருக்கும் என்பதால்) சூழலில் உள்ள பலமொழிகள் உள்ளே பதிவு செய்யப்பட மாட்டா. ஆனால் வெளிக்கோட்டைச் சுற்றி (எ.கா. அயலவரால் பேசப்படும் மொழி, நான் அடிக்கடி அதைக் கேட்கிறேன், ஆனால் அதனால் எனக்கு பயன் ஏதும் இல்லை). பிள்ளைகளுக்கு மிகத் திட்டவட்டமான பரிந்துரைகளையோ முன்மொழிவுகளையோ வழங்கவேண்டாம். வெளிக்கோடுகளை நிரப்புதல் தனித்தனியாக செய்யப்படவேண்டும். அந்நேரத்தில் வகுப்பறையில் முழுமையான அமைதி நிலவ வேண்டும்.
- 10 – 15 மணித்துளிகளுக்குப் பின், மாணவர்கள் ஆளுக்காள் தங்கள் படங்களை விளக்குவர். (முழு வகுப்பிலும் அல்லது குழுக்களாக). ஒரு குறிப்பிட்ட இடத்தில் எந்த மொழியை நான் பதிவுசெய்தேன், எந்த மொழி பதிலை மேற்கொள்வது எந்த மொழி எனக்கு எத்தகைய இன்றியமையாமைகளைக் கொண்டன? ஏன் அது அப்படி?

**மாற்றுகள்:**

மொழிகளை முதன்மையாக மையப்படுத்தி தன்னுருவப் படங்கள்,
சுய விளக்கம் (எனது முதல் மொழி, நான் பேசக்கூடிய மற்றைய மொழிகள்,
என் சூழலிற் பேசப்படும் மற்றைய மொழிகள் முதலியவை) உருவாக்குதல்.

**உசாத்துணைகள்**

மொழியுருவப் படங்களைக் கண்டுபிடித்த பேராசிரியர் ஹன்ஸ்-ஜூர்கன் க்றும், வீயனிலிருந்து, அவர்களிடமிருந்து ஆழமான செய்திகளை பின்வரும் தொடர்பில் பார்க்க http://www.akdaf.ch/html/rundbrief/rbpdfs/61_Mehrsprachigkeit_Sprachen-portraits.pdf

# 3.2 இருமொழி / பன்மொழி எழுதுதல் திட்டங்கள்

**இலக்கு**

*இருமொழி, பன்மொழி எழுதுதல் திட்டங்களில் பா.மொ.க மாணவர்கள் அவர்களுடன் இருமொழிய பன்மொழிய வளங்களையும் ஆற்றல்களையும் அறிந்து அவற்றை எப்படி ஆக்கநிலையில் பயன்படுத்துகிறது எனபது பற்றி அறிய வாய்ப்பு ஏற்படுத்துதல். முதலாம் மொழியைக் கருத்தில் கொண்டு உண்மையான சூழ்நிலைகள் உருவாகலாம், அவற்றில் எழுத்து ஆற்றல்கள் முன்னேற்றப்படலாம். இதன் கவர்ச்சிகர விளைவுகள் ஊக்கத்துக்கு வழிசமைக்கும்.*

வகுப்ப்பு 3 - 9 | 30 - 60 மணித்துளிகள்

**கருவிகள்:**
கருத்திட்டத்தைப் பொறுத்து

**குறிப்புகள்:**

- பா.மொ.க வின் முக்கிய நோக்கமே முதல் மொழியின் கருத்திட்டத்தை விளங்கிக்கொள்ளுதல் ஆகும் (பெரும்பாலான மாணவர்கள் குடிபுகு நாட்டு மொழி தமக்குச் சுலபம் என உணர்ந்த போதும்). இரண்டாம் மொழியில் அல்லது குடிபுகு நாட்டு மொழியில் பதிப்பு இரண்டாவது படிமுறையிலே தொடரும்.
- இக் கருத்திட்டங்களுக்கு வழக்கமான வகுப்பறைக் கற்கையுடனான கூட்டுறவு ஆக்கமும் பயனும் உடையனவாகும். இருமொழிய எழுத்துருக்கள் ஆக்கப்பட்டு அவை இருமொழிய விரிவாக்கத்துக்கு துணைசெய்கின்றன (தொகுதி "முதல்மொழியில் எழுத ஊக்குவித்தல்" என்பதில் உள்ள #21 மற்றும் #22 எண்ணக்கருக்களைப் பார்க்கவும்).

---

**நடைமுறை:**

- ஒரு இரு மொழிய அல்லது பன்மொழி எழுத்துக் கருத்திட்டம் பற்றி வகுப்புக்கு அறிவிக்கப்பட்டது. ஒழுங்குகள், கருப்பொருள், எழுத்துரு வகை, மற்றும் உருவாக்கப்படக்கூடிய விளைபொருள் என்பன பற்றிய விவாதங்கள் தொடரும். மாணவர்கள் இந்தத் திட்டம் இருமொழிகளிலும் தம்முடைய ஆற்றலைப் பயன்படுத்துவதே குறிக்கோள் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.
- சாத்தியமான கருப்பொருள்களும், உருவங்களும்.
  - கீழ்நிலை: இருமொழி படப்புத்தகம் ஒன்றை உருவாக்குதல் (கீழ்ப்பகுதியில் முதல்மொழியில் எழுத்துரு, மேற்பகுதியில் இரண்டாம் மொழியில் எழுத்துரு) பிள்ளைகள் தாமாகவே வரைந்தனவாக (தாமாக கண்டுபிடித்து உண்டாக்கிய கதைக்கு அல்லது ஆசிரியர் அவர்களுக்கு படித்த கதைக்கு) அல்லது ஆசிரியர் கொடுத்த மாதிரி உருவுகளை அடிப்படையாகக் கொண்டு (எ.கா. ஒரு படப் புத்தகம்) எழுத்துருவில் படங்களை ஒட்டுதல். மாற்று: தொகுதி "முதல்மொழியில் எழுத ஊக்குவித்தல்" என்பதில் உள்ள #21.2 மற்றும் 22.4இல் விவரித்தபடி "சிறிய புத்தகம்" ஒன்றை உருவாக்கல். தொடர்பு: http://www.minibooks.ch/.
  - கீழ் மற்றும் மத்திய நிலை: ஒரு தலைப்பு அல்லது ஓர் இலக்கிய வடிவம் பற்றிய இருமொழியக் கவிதைகள் (எ.கா. "eleven poems" அல்லது தொகுதி "முதல்மொழியில் எழுத ஊக்குவித்தல்" என்பதில் உள்ள #21.1இல் விவரித்த "பதினொரு கவிதைகள்" பற்றி). உருவாக்கப்பட்ட எழுத்துருக்களை கலைப்படைப்பாக வண்ணத்தாள்களில் அமைத்து ஒரு சிறுநூலாக வடிவமைக்கலாம்.
  - இடை நிலை: ஒரு இருமொழிய விறுவிறுப்பான நூலை உருவாக்குதல், "முதல் மொழியில் எழுத ஊக்குவித்தல்", #21.1)
  - இடை மற்றும் உயர்நிலை: ஓர் இரு மொழியத் திரட்டு (சமையல் குறிப்புகள், கைவினைச் செயற்பாடுகளுக்கான அறிவுறுத்தல்கள், நகைச்சுவைத் துணுக்குகள், விடுகதைகள் முதலியன) ஒரு சிறு நூலாகவோ படியெடுத்துக் கட்டிய நூலாகவோ புத்தகமாக அணிசெய்து வெளியிடலாம்.
  - இடை மற்றும் உயர்நிலை - ஒரு நூல் முன்னட்டை மற்றும் நூல் பின்னட்டை எழுத்துருவை உருவாக்குதல் (இரு மொழி வடிவில் அல்லது முதல் மொழியில் அல்லது பள்ளி மொழியில் பார்க்கவும்: http://www.sikjm.ch/literale-foerderung/abge-schlossene-projekte/mein-buchumschlag/ and http://www.sikjm.ch/ medias/sikjm/literale-foerderung/projekte/mein-buchum-schlag-didakti-sche-anregungen.pdf.

3

- இடை மற்றும் உயர்நிலை: இருமொழி அல்லது பன்மொழி "புகைப்பட நகைச்சுவை நூல்" அல்லது தாமாக உருவாக்கிய படங்கள் மற்றும் பேச்சுத்துணுக்குகள் உடைய குறுநாவலை உருவாக்கல். "முதல்மொழியில் எழுத ஊக்குவித்தல்" தொகுதியில் #21.3 இல் விவரித்தபடி, கணினித் துணை பரிந்துரைக்கப்படுகிறது.
- இடை மற்றும் உயர்நிலை: இருமொழி மாணவர் செய்தித்தாள் (சுவரொட்டி, A4 குத்திக்கட்டிய செய்தித்தாள், இணைய செய்தித்தாள்).

---

# 3.3 மொழி – தன்வரலாற்றுக் கருப்பொருள்கள்

**இலக்கு**

*இரு மொழிகளைக் கையாளுதல், அவற்றுக்கிடையில் வாழ்ந்து வளர்தல், ஒருவரது எதிரொளிர்வுத் திறன்களை வலுப்படுத்துவதுடன் ஒருவர் தன் வரலாற்றையும் தன் தனித்துவ ஆற்றல்களையும் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்தத் தலைப்பைக் குறிப்பாகக் கவர்ச்சியுடையதாக அமையவைப்பது யாதெனில் அது ஒருவரது பட்டறிவுகளையும் நினைவுகளையும் நேரடியாக இணைக்கின்றமையேயாகும்.*

வகுப்பு 2 - 9

30 - 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
நடைமுறைப்படுத்தலைப் பொறுத்தது (A4 தாள் சுவரொட்டிக்கு)

**குறிப்புகள்:**

- பெரும்பாலான வழக்குகளில், முதல் மொழியிலும் அதேபோல் குடிபுகு நாட்டு மொழியில் ஒரு எழுத்து வடிவமும் பேச்சுமொழி மாற்றுகளும் உள்ளன. இவை கட்டாயமாக கலந்துரையாடப்பட வேண்டும். (பெரும்பாலான பா.மொ.க மாணவர்கள் தங்கள் முதல்மொழியின் எழுத்து மாற்றுவடிவுடனான பல இடர்கள் தொடர்பாகப் பட்டறிவு பெற்றுள்ளனர்).
- இத் தலைப்பை பலவகை அகவைக்குப் பொருத்தமாக பல்வகை வினாக்களை முன்வைக்கவேண்டும். மாணவர்களும் வேறுபட்ட குழுக்களுடன் இணைந்து பல்வகை வினாக்கள் பற்றி ஆராய்ந்து பார்த்து முடிவுகளை ஆளுக்காள் பகிர்ந்துகொள்ளமுடியும்.
- பொதுவாக, இக்கருத்திட்டம் இரு கிழமைகளில் செய்யவேண்டியது. (முதற்கிழமை அறிமுகம், இரண்டாம் கிழமை அதனை நடைமுறைப்படுத்துவது) மேற்சொல்லப்பட்ட "மொழித்திட்டமிடல்" அக் கருப்பொருளுக்கு ஒரு நல்ல அறிமுகமாக அமையும்.

---

**நடைமுறை:**

- ஆசிரியர் கருத்திட்டத்தையும் வினாவின் சரியான அமைப்பையும் (அகவைக்குப் பொருத்தமான வினாக்களையும் முன்வைக்கவேண்டும், மேலே பார்க்கவும்) அறிமுகப்படுத்துகிறார். ஒரு தொடர் ஒப்படைக்கான தெளிவான வழிகாட்டல்களை மாணவர்கள் பெறுவர் (எ.கா. கட்டளையிடப்பட்ட தகவலை அடுத்த கிழமை வரை திரட்டி தொடர்புடைய குறிப்புகளுடன் வகுப்புக்குக் கொண்டுவரவும்). சாத்தியமான ஒரு வினாப்பட்டியலுக்குக் கீழே பார்க்கவும்.
- தொடரும் கிழமையில், ஒப்படைகளின் முடிவுகள் தொகுக்கப்பட்டு முடிந்தளவு சுருக்கப்பட்டு வகுப்பில் சுவரொட்டியில் அளிக்கை செய்யப்படும். முடிவாக வகுப்பில் கருத்திட்டம்பற்றி எழுத்துரு எழுதுவதோ, அல்லது கலந்துரையாடுவதோ செய்யப்படவேண்டும். அதில் அவர்களின் பட்டறிவை பிரதிபலிக்கவேண்டும்.
- கைகூடக்கூடிய வினாக்கள்:
  - எல்லா மட்டங்கள்: முதல் மொழியிலும் இரண்டாம் மொழியிலும் எனது முதல் சொற்கள் அல்லது வாக்கியங்கள் (பெற்றோரைக் கேளுங்கள்) முதல் மொழியிலும் இரண்டாம் மொழியிலும் சிரிக்க வைக்கும் தவறுகளும் பெருந்தவறுகளும் (தவறாக விளங்கிக்கொண்டமையும் பிழையாக பயன்படுத்தப்பட்ட சொற்கூறுகளும்) முதலாம், இரண்டாம் மொழிகளை நான் கற்றுக்கொள்ள முக்கியமாக இருந்தவர்கள்.
  - இடை மற்றும் மேல் மட்டம்: இரண்டாம் மொழியைக் கற்றபோது எனக்கு ஏற்பட்ட குறிப்பிடக்கூடிய இடர்கள் யாவை? நான் எப்படிக் கற்றேன்? என்ன மதிநுட்பங்களைப் பயன்படுத்தினேன்? இப்பொழுது எவற்றைப் பயன்படுத்துகிறேன்? இப்போதும் என்ன கூறுகள் எனக்குச் சிக்கலாயுள்ளன, அவற்றை நான் எவ்வாறு கடந்து செல்லலாம்? மாற்று: தவறான மொழி விளக்கங்களை ஒரு கேலிச்சித்திரமாகக் கொண்டு குறும்புத்தனமான ஓர் அளிக்கை செய்தல்.

– இடை மற்றும் மேல் மட்டம்: எனது முதல் மொழியில் எதனை என்னால் சிறப்பாக செய்ய முடியும்? இன்னும் என்னென்ன பகுதிகளில் நான் மேலும் இடர்களை எதிர்கொள்கின்றேன்?

– இடை மற்றும் மேல் மட்டம்: முதல் மொழியிலும் இரண்டாம் மொழியிலும் பேச்சுமொழியும் எழுத்து வழக்கும். குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் எந்த வடிவத்தை நான் பயன்படுத்துகிறேன்? இரு மாற்றுகளுடனும் என்னுடைய உணர்வுத் தொடர்பு எப்படிப்பட்டது, எழுத்து மொழியினை அறிந்துகொள்வதற்கான காரணம் என்ன? (அது எதற்கு நல்லது, குறிப்பாக முதல் மொழி அடிப்படையில்)

– இடை மற்றும் மேல் மட்டம்: இரு மொழிகளுடன் மற்றும் இரண்டுக்குமிடையில் வாழ்தல். என்ன நன்மைகள், ஆனாலும் ஒரு மொழியுடன் வாழ்வது தொடர்பான சிக்கல்கள் – நான் என்னுடைய பிள்ளைகளையும் இரு மொழியர்களாக வளர்ப்பேனா, ஏன்?, அப்படி இல்லையாயின் ஏன்?

– இடை மற்றும் மேல் மட்டம்: புதிய மொழிச் சூழலுக்கு மாறுதல் தொடர்பாகப் பெற்றோர் பாட்டன்மாரின் பட்டறிவுகள். எவ்வாறு அவர்கள் அதை எதிர்கொண்டார்கள், எவ்வாறான இடர்பாடுகளை அவர்கள் பட்டறிந்தனர், எவ்வாறு அவற்றை எதிர்கொண்டனர்? ஒரு நேர்காணலுக்காக சில திறப்பு வினாக்களைத் தொகுப்பதும், நேர்காணலின் ஒரு பகுதியைப் பதிவுக் கருவியில் பதிவு செய்தலும் பயனுடையதாகும்.

– மேல் மட்டம்: பலவகைப்பட்ட மொழிகள் எப்போதும் ஓரளவு வேறுபடக் கூடிய தன்மையைக் கொண்டிருக்கும். எமது முதல் மொழி தொடர்பாக இது எப்படிப்பட்டது, இது தொடர்பாக எத்தகைய பட்டறிவுகளை நான் ஏற்கனவே பெற்றுள்ளேன்?

---

# 3.4 பல்வேறு மொழிகளில் இலத்திரனியல் ஊடகத்தைப் பயன்படுத்துதல்.

**இலக்கு**

*ஊடக ஆற்றல்கள் குறிப்பாக இலத்திரனியல் ஊடகங்களைக் கையாளுவது, இன்றைய உலகின் சிறப்புத் தகைமைகளின் திறவுகோலாக உள்ளது. ஒரு பன்மொழியச் சூழலில், இத்தகைமை ஒன்றுக்கு மேற்பட்ட மொழியில் கட்டாயம் மேம்படுத்தப்பட்டு விரிவாக்கப்படவேண்டியதாகும். இது தொடர்பாகவும் பா.மொ.க பல்வேறுபட்ட நன்மைக்காகப் பெருந்தொகையான வாய்ப்புகளை பயன்படுத்தவேண்டும்.*

வகுப்பு 5 - 9 | 10 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
இணையத்தின் உட்புகல் வசதிக்கணினி (வீட்டில் அல்லது பள்ளியில்)
அலைபேசி / ஸ்மார்ட் பேசி.

**குறிப்புகள்:**

- பாடசாலைகளில் பன்மொழிப் பயன்பாட்டுக்கு இலத்திரனியல் ஊடகங்களுள், பின்வருவன முதன்மையானவையாகவும் முன்னணியிலுள்ளனவாகவும் கருதப்படவேண்டும்: கணினி (பாடப் பதிவுகள், ஒழுங்குபடுத்தல் மற்றும் வடிவமைப்பு இணையம் ஒரு தகவல் வளமாக, மின்னஞ்சல், சமூகவலைத்தளங்கள் (முகநூல், உரையாடல் அறைகள் முதலியவை) ஸ்கைப் மற்றும் எழுத்து, வாய்வழித் தொடர்புகள் தகவல்களுக்கான மேடைகள்), குறுந்தகவலுக்கான அலைபேசி, கணினிமயப்பட்ட செயற்பாடுகளுள்ள ஸ்மாட் பேசிகள்.
- பா.மொ.க வில் முதன்மை விடயம், கட்டாயமாக, தாய் மொழியில் இலத்திரனியல் ஊடகத்தைக் கையாளுதலேயாகும். கூடுதலாக, இவ்வூடகங்கள் மற்றைய திட்டங்களுடன் இணைநிலையாகப் பயன்படுத்த முடியும். (பார்க்க: முதல் இயலில் 3.3 – 3.6 மதியுரைகள்).
- இணையத்தளத்தில் தேடற் சொற்கூறுகளைச் சரியான எழுத்துக்கூட்டலுடன் பதிவிடுதல் இன்றியமையாததாகும். உறுதிப்படுத்தமுடியாத வேளைகளில் ஓர் அகரமுதலியை அல்லது ஒரு பொறி உருவாக்க மொழிபெயர்ப்பை நாடவும்.
- பள்ளியில் கணினிகள் இல்லையெனின், வீட்டில் கணினியின் துணையுடன் செய்யக்கூடியதாக ஒப்படைகள் கட்டமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாணவருக்கும் கணினிப் பயன்பாட்டை எளிதாக்குதற்கு அணிகளை உருவாக்கலாம்.

பயன்படக்கூடிய சாத்தியங்களும், எடுத்துக்காட்டுகளும்:

- ஓர் எழுத்துருவின் வடிவமைப்பு (கவிதை, கதை) அல்லது பாரம்பரியமொழியில் ஒரு நூல் கணினியில் (நேர்த்தியான அமைப்பு, சிலவேளை விளக்கப்படங்கள், இணையம் இன்றி செய்யமுடியுமெனின்).
- பிறப்பு மொழியில் மிக இன்றியமையாத தேடற் பொறிகளையும் மற்றும் தகவல் வளங்களையும் (விக்கிபீடியா முதலியன) மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல் சில எடுத்துக்காட்டுகளைப் பார்க்கவும்.
- பிறப்பு மொழியில் வலையமைப்புகளிலிருந்து தகவல்களைக் கையகப்படுத்தல் (எ.கா. ஒரு வரலாற்றுக் கருப்பொருள் பற்றி பயிர்ச்செய்கை பற்றி, கவிதைகள் பற்றி, தேவதைக் கதைகள், முதலியன). தலைப்புகள் பற்றிய திட்டமிடல் மாணவர்களிடையே நடைபெறுவதாகும், இணையத்தள ஆய்வு முடிவுகள் கற்பித்தல் கருவிகளுடன் இணைக்கப்படவேண்டும்.
- பிறப்பு நாட்டிலிருந்து தகவல்கள் பெறுதற்கு மின்னஞ்சல், ஸ்கைப், குறுந்தகவல் ஆகியனவற்றைப் பயன்படுத்தல் (உறவினர்கள், நண்பர்கள்).
- பிறப்பு நாட்டு வகுப்பு ஒன்றுடன் தொடர்பு கொள்ளல் கீழே பார்க்கவும் கூ3.6.
- மொழிபெயர்ப்புப் பொறிகளுடன் ஆய்வுசெய்தல் (எ.கா. கூகுள் "மொழிபெயர்ப்பு") பிறப்பு மொழியிலிருந்து அல்லது பிறப்பு மொழிக்கு மொழிபெயர்ப்பதற்காக ஒரு சிறு எழுத்துருவை உள்ளிடுக. என்ன நடக்கிறது? எப் பிழைகளுக்கு எவை காரணமெனக் கூறலாம்?, முதலியன.

---

# 3.5 எங்கள் மொழியிலும் பிற மொழிகளிலும் பேச்சுமொழிகள்

**இலக்கு**

*பெரும்பாலான மொழிகள், முதன்மையாக வாய்வழிப் பயன்பாட்டுக்கு, ஏற்கனவே உள்ள எழுத்து வடிவத்துக்கு மேலாகப் பெருந் தொகையான பேச்சுமொழிகளைக் கொண்டுள்ளன. இது தொடர்பான மாணவர்களின் அறிவுநோக்கினைக் கூர்மைப்படுத்துவதுடன் அவர்களின் மொழியியல் அறிவும் விழிப்புணர்வும் மேம்படுத்தப்படவேண்டும்.*

வகுப்பு 5 - 9

45 மணித்துளிகள்

**கருவிகள்:**
முடியுமெனின்,
ஒரு வரைபடம்

**நடைமுறை:**

- அறிமுகம்: எடுத்துக்காட்டாக, இவ்வாறாக ஆசிரியர் பாடத்தைத் தொடங்கி ஒரு பரந்த பேச்சுமொழி வழக்கிலே இன்றைய மொழிக்குரிய மணித்தியாலம் ஒரு சிறப்பான தலைப்புப் பற்றி நோக்கவுள்ளது என மாணவர்களுக்குக் கூறுகிறார். அது என்னவாக இருக்கலாம்?
- கலந்துரையாடல்: மாணவரிடையே உள்ள எடுகோள்கள், அவர்களது முதல் மொழியின் பேச்சுமொழி(கள்) பற்றிய பட்டறிவுகள். யார் பேச்சுமொழியை எங்கே, எப்போது பயன்படுத்துகின்றனர்? பேச்சுமொழியின் எந்த மாதிரியான சொற்கள் உங்களுக்குத் தெரியும்? (பலகையில் ஒரு தொகுதி சொற்களைத் தொகுத்தல்), எத்தகைய பேச்சுமொழி வேறுபாடுகள் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையில் காணப்படுகின்றன? (வரைபடத்தில் காட்டுக!) பலவகைப் பேச்சுமொழிகளுக்கிடையே விளங்கிக்கொள்ளல் தொடர்பான சிக்கல்கள் பற்றி ஆராயவேண்டும்.
- அடுத்த கிழமைக்கான ஒப்படை: பேச்சுமொழிகளைப் பதிவு செய்யவும் (எ.கா. பேரன்மார், முதலியோரை முடியுமாயின் தொலைபேசி அல்லது ஸ்கைப் ஊடாக). சிலவேளை ஒலிப்பதிவு மாதிரிகளை இணையத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் (இத்தாலியனுக்கு எடுத்துக்காட்டு: http://www.yougulp.it/diletto/) அதனை வகுப்பறைக்கு எடுத்து வந்து ஒரு படத்தில் அதன் பகுதியை உள்ளூர்மயப்படுத்தவும்.
- எழுத்து மொழியின் பார்வையில்: அது எவ்வாறு பேச்சுமொழியிலிருந்து வேறுபடுகின்றது, எங்கே அது பயன்படுகின்றது (எழுத்து நோக்கங்களுக்காக, ஊடகம், செய்திகள், முதலியன) முடியுமாயின் எழுத்துமொழியிலும் பேச்சுமொழியிலும் ஒருசிறு எழுத்துருவை எழுதி ஒப்பிடுக. எழுத்துமொழி தொடர்பாக என்ன இடர் உண்டு?
- எங்கள் மொழியின் சிறப்புமிகு பேச்சுமொழி எது? பேச்சுமொழிகள் எங்கே கேட்கப்படுகின்றன?, யார் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள் / பயன்படுத்தவில்லை?

- குடிபுகு நாட்டில் பேச்சுமொழிகளும் எழுத்து மொழியும்: அவைபற்றி மாணவர்களுக்கு என்ன தெரியும், எந்த மாற்று எப்பொழுது பயன்படுகிறது, இங்கே சிறப்புமிகு பேச்சுமொழி எது?
- கலந்துரையாடல்: முதலாவது மொழியிலும் இரண்டாவது மொழியிலும் உள்ள பேச்சுமொழி மற்றும் எழுத்து வழக்குகள் ஆகியவற்றினுடனான என் உணர்வுமிகு தொடர்பு பேச்சுமொழியின் மற்றும் எழுத்து மொழியின் நடைமுறைப் பயன்பாடு பற்றிய என் ஊகம்.

---

# 3.6 பல்பண்பாட்டு வினாக்களுக்கான தொடர்பு

**இலக்கு**

*பண்பாடுகளில், அவற்றுடன் மற்றும் அவற்றுக்கிடையிலான வாழ்வு பற்றிய வினாக்கள் குறிப்பாக பா.மொ.க மாணவர்களுக்கு நிகழ்காலத்துக்குரியனவாயுள்ளன. 'தொடர்பு' எனும் கருத்திட்டத்தின் நோக்கு என்பது மாணவர்கள் இவ்வினாக்கள் தொடர்பாக வேறு சூழல்களில் உள்ளவர்களுடன் கருத்துகளைப் பகிர்ந்து தம்முடைய எல்லைகளை விரிவடையச் செய்கின்றனர். அதேவேளை, கருத்திட்டம் மாணவர்களின் எழுத்து மற்றும் ஊடக ஆற்றலுக்குப் பங்களிக்கின்றது.*

வகுப்பு 5 - 9 | 45 மணித்துளிகள்

**நடைமுறை:**

- தலைப்புப் பகுதியிலிருந்து தற்காலச் சிக்கலுக்கு (பல்பண்பாட்டு இணைந்த வாழ்வு) ஆசிரியர் மாணவர்களுக்கு மற்றொரு சூழலில் இருந்து வருபவர்களின் கருத்துக்களைப் பெற்று கலந்துரையாட வேண்டும் என மதியுரை கூறுவர். இது இலத்திரனியல் தொடர்பாடல் வடிவாக (மின்னஞ்சல், முடிந்தளவு குறுஞ்செய்திகள்) அமையவேண்டும். தகுதியான தலைப்புக்களும் கேள்விகளும் பின்வருவனவற்றை உள்ளடக்கும்: இந்த நாட்டில் உள்ள வெளிநாட்டவருடன் வெறுப்புக் கொள்ளும் தனியாள் ஒருவரின் பட்டறிவுகள் – அரசியல் அமைப்பில் வெளிநாட்டவரின் நிலைப்பாடு – கல்வி அமைப்பில் பா.மொ.க வின் நிலைப்பாடு – சிறுபான்மை இனங்களின் நிலைப்பாடும் மதிப்பும், எடுத்துக்காட்டாக, றோம் மக்கள் தற்கால அரசியல் விவாதத்திலிருந்து ஒரு வினா மீதான கலந்துரையாடல்.



- வகுப்பு ஒரு தலைப்பினைத் தேர்ந்தெடுத்து அதனுடன் தொடர்புடைய பங்காளிகளையும் சூழல்களையும் பற்றிக் கலந்துரையாடும். வகுப்பறைத் தொடர்புகளுக்கு எடுத்துக்காட்டுகள்: பிறந்த நாட்டிலிருந்து ஒரு பள்ளி வகுப்பு – குடிபுகுந்த நாட்டுப் பிறிதொரு சமூகத்திலிருந்து ஒரு பா.மொ.க வகுப்பு – இன்னொரு மொழிக் குழுவினரின் பா.மொ.க வகுப்பு. (சிலவேளைகளில் பிறந்த நாட்டு கல்வி அமைச்சு வேண்டப்படும் தொடர்புகளை வழிப்படுத்தித் துணைசெய்ய முடியும்.
- தனியாள் தொடர்புகளுக்கு: உறவுக்காரர், நண்பர்கள், ஒரே மொழி அல்லது வேறு மொழித் தொடர்பாளர்கள். ஒரே சிக்கலைப் பல்வேறு சூழல்களிலிருந்து வருபவர்கள் கலந்துரையாடுவது களிப்பாகவிருக்கும். அரசியல்வாதிகளுடன் அல்லது பொருத்தமான நிர்வாகப் பொறுப்பாளர்களுடன் தொடர்புகொண்டு கருத்துக் கேட்டல் செய்யக்கூடியதாகும்.

- முடிவுகள் (எ.கா. தொடரான பொது வினாக்கள்) ஒப்பிடப்பட முடியும் என்பதை உறுதிப்படுத்த தொடர்புகளுக்கான வழிகாட்டல், அறிவுறுத்தல்கள் முதலிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டவையாக இருக்கும்.
- போதுமான எண்ணிக்கையான பதில்கள் பெற்றுக்கொண்ட பின்னர் அவை ஆராயப்பட்டு குழுநிலைப்படுத்தி (எ.கா. ஒரு சுவரொட்டியில்) அளிக்கை செய்யப்பட்டு கலந்துரையாடப்படும்.

---

# 3.7 மொழிப் பயன்பாடு: வேறுபட்டது, சூழ்நிலை சார்ந்தது.

**இலக்கு**

*செயற்பாட்டுக்கான ஆற்றலுக்கும் தொடர்பாடலுக்கான ஆற்றலுக்கும் மொழி சார்ந்து தன்னை நடத்துவது மட்டுமல்ல சைகைகள், முகபாவம், பேசும் தன்மை முதலியவை பொருத்தமான சூழ்நிலை அல்லது சமூகக் கூட்டுறவுக்கு ஏற்ற வகையில் அமைதல் வேண்டும். பொருத்தமான சட்டங்கள் பெரும்பாலும் எழுதப்படாதன, ஆனால் பண்பாட்டுத் தன்மையுடையன. அதைப்பற்றிக் கூறுவதும் அதனைத் தேர்வுசெய்து பார்ப்பதும் சமூக, தொடர்பாடல் ஆற்றலை வலுப்படுத்தும்.*

வகுப்பு 3 - 9 | 25 - 45 மணித்துளிகள்

**நடைமுறை:**

- தலைப்புக்கு அமையக்கூடிய அறிமுகம்:
  - தூண்டக்கூடிய கற்றல் சூழல் (எ.கா. எப்படி 'நீங்கள்' (மரியாதையாகக் கூப்பிடுதல்) மற்றும் 'நீ' (முறைசாரா அழைப்பு) என்பது உண்மையில் எங்கள் மொழியிலும் நாம் தற்போது வாழும் (ஜேர்மன் மொழிபேசும்) நாட்டு மொழியிலும் எப்படி பயன்படுத்தப்படுகிறது?)
  - தொடர்பாடல் தொடர்பான தவறான விளக்கம் பற்றிய ஒரு கதை (எ.கா. 'நீங்கள்'/'நீ' தவறு) பேசுகின்றவரோடு மிக நெருக்கமாக நின்று (அண்மையில்), உரத்த குரலில், மிகுந்த அளவிலே முறைசாரா வாழ்த்துக் கூறல்).
  - ஆசிரியர் வேண்டுமென்றே தொடர்பாடலிலுள்ள ஒரு மாதிரி எழுதாத சட்ட மீறுதலை செய்தல் தலைப்புக்கு ஒரு நல்ல அறிமுகமாக அமையலாம் (ஒரு மாணவனுடன்/மாணவியுடன் மிகுந்த முறைசார்புடன் அல்லது கீழ்த்தரமான மொழிப் பயன்பாடு பேசப்படுபவரிடமிருந்து அண்மையில் அல்லது மிகு சேய்மையில் நிற்றல், மிக மெதுவாக அல்லது மிக உரத்துப் பேசுதல்...).
- தலைப்பு பற்றிய கலந்துரையாடல், இலக்கணத் தெளிவுக்கு மேலாக, தொடர்பாடல் பயன்பாட்டுக்கு எழுதா விதிமுறைகளையும் பின்பற்றவேண்டும் என்னும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- குழுசார் மொழி மற்றும் மொழிசாராக் கூறுகளின் பயன்பாடு தொடர்பான காட்சிப் பரிசோதனைகள் (உடல் தொடர்பு, உரத்தகுரல், சைகைகள், முகபாவம், அண்மை, முதலியவை) நண்பர்களுடன், பொறுப்பாளர்கை செய்பவருடன், பேரன் பேர்த்திமாருடன், உடன்பிறப்புகளுடன், முதலியோருடன் தொடர்பாடும்போது எது "பொருத்தமானது" ஆகும்? எது இடத்துக்கு உகந்ததல்லாதது அல்லது பொருத்தமற்றது? ஏன்? இச் சூழலில் பேச்சுமொழி மற்றும் எழுத்துமொழிப் பயன்பாடு பற்றியும் எண்ணிப்பார்க்கவும்.
- பிறந்த மற்றும் குடிபுகு நாட்டுப் பண்பாட்டில் முறைசார் ∴ முறைசாரா பேச்சுத் தொடர்பான விதிமுறைகளை ஒப்பிடுக, உரத்தகுரல், பேசுபவர்களுக்கிடையிலான இடைவெளி, உடல் தொடர்பு, கைகுலுக்கல், வணக்கம் சொல்லும் போது முத்தம் கொடுத்தல் முதலியவை. இன்றியமையாத வேறுபாடுகள் யாவை? புதிதாகக் குடியேறுவோருக்கு எவற்றைக் குறிப்பாகப் பரிந்துரைப்பீர்கள்? (எழுத்திலான கண்காணிப்புக்குரிய ஒரு பட்டியலைத் திரட்டவும்).
- சைகைகள்: தற்போது நாம் வசிக்கும் நாட்டில் எவ்வகைச் சைகைகள், வழக்கமானவை (அல்லது விலக்கப்பட்டவை) எவை "பன்னாட்டுத்" தன்மையானவை?

# அலகு 4:
# பல்பண்பாட்டுத் தொடர்பாடல் – ஒவ்வொருவருடனும் இணங்கிப்போதல்

## அறிமுகம்

தொடர்பு கொள்ளும் போது தகவலை மட்டும் பரிமாறிக் கொள்வதில்லை. மறு பக்கத்தில் உள்ளவருடன் நாம் தொடர்புகொள்ளும் போதெல்லாம் நம் உறவு நிலையினைத் தொடர்ச்சியாகக் கடத்திவருகிறோம். மேலும், எமது தொடர்பாடற் பாங்கு – உள்ளடக்கத்திலும் சரி உறவு மட்டத்திலும் சரி – எப்பொழுதுமே பண்பாட்டு அடிப்படையிலேயே உருவமைக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, இது தொனி, சைகைகள், இருவருக்கிடையிலான தூரம், எதிரிலுள்ளவருடனான உடல் தொடர்பு, தொடர்பாடலின்போது தொடக்கம் மற்றும் முடிவிலும் கேட்கும் (நலன் விசாரித்தல், விடைபெறுதல்), வழக்கமான செயற்பாடுகளின் நேரடித் தொடர்பு ஆகியவற்றுடன் அக்கறை என்பவற்றுடன் தொடர்புறுகிறது. இவையெல்லாம் பண்பாட்டு அடிப்படையிலான கூறுகளாகும். ஒருவர் தன் பண்பாட்டில் இவற்றை அவதானிக்க முடியாது. ஆனால் பல்பண்பாட்டு தொடர்பாடல் சூழலில், அதாவது இன்னொரு பண்பாட்டு உறுப்பினர்களுடன் தொடர்புகொள்ளும்போதே தவறாக விளங்கிக்கொள்ளுதல், தடுமாற்றத்துக்கு உள்ளாகுதல் ஆகியவற்றுக்கு இட்டுச்செல்லலாம். ஒரு குடிபெயர்வுச் சூழலிலுள்ள புதியவர்களின் அணுகுமுறைகளினாலும், செயற்பாடுகளாலும் தொடர்பாடல் பாதிக்கப்படமுடியும். இதனால் பல்பண்பாட்டு தொடர்பாடலில் சுயநினைவுள்ள, வேறுபட்ட – உணர்திறன் கொண்ட அணுகுமுறை மிகவும் இன்றியமையாதது, இது பல் பண்பாட்டு பன்மொழிச் சூழலில் இறைமைத் தன்மையுடன் கூடிய செயற்பாட்டுக்கு இட்டுச் செல்கின்றது.

பாடசாலைகள் பல்பண்பாட்டு ஆற்றல்களை வளர்த்தெடுப்பதற்குப் பங்களிப்பை வழங்க முடியும் / வழங்க வேண்டும். இது பண்பாட்டு அடிப்படையில் பல்வகைத் தன்மையான வகுப்புக்களுடனான பெருங் கல்வி முறைமைக்கும் அத்துடன் மொழியியல் அடிப்படையிலும் பண்பாட்டு அடிப்படையிலும் ஒரே தன்மையான குழுவினருடனான பாரம்பரியமொழிக் கல்விக்கும் பொருந்துகிறது. இந்த அலகு பா.மொ.க வில் பல்பண்பாட்டு தொடர்பாடல் சார்ந்த ஆற்றலை வளர்ப்பதற்கான மதியுரைகளையும் எடுத்துக்காட்டுக்களையும் வழங்குகின்றது. வெவ்வேறு பயிற்சிகள் ஊடாக, நாடக நடிப்புக்கள், மாணவர்கள் தங்களது தொடர்பாடல் நடைமுறைகளை அடையாளம் கண்டு தங்கள் நடத்தைகளில் உருக்காட்டுவர். இயல்பாக, மாணவர்களுடைய வளங்களும் பட்டறிவுகளும் இன்றியமையாத இடத்தினை வகிக்கின்றன, ஏனெனில் அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களைத் தொடர்பாடல் செய்யவும் இரு பண்பாடுகளுள்ளும் இடையேயும் செல்லவேண்டியுள்ளது.

# 4.1 ஏதோ ஒன்று இங்கு சரியாய் இல்லை.

**இலக்கு**

*தொடர்பாடல் நடத்தையில் பண்பாடுசார் வேறுபாடுகளில் உருக்காட்டுதல் என்பது பல்பண்பாட்டு ஆற்றலில் ஓர் இன்றியமையாத பகுதியாகும். மாறுபாடான பண்பாட்டுச் சூழலில் இருந்து வரும் மக்கள் மாறுபாடான பண்பாட்டுப் பகைப்புலத்தில் இருந்து வேறுபட்ட உடல்மொழி முகபாவம், சைகை காட்டல் முதலியன ஊடாக தொடர்பாடல் கொள்ளும்போது என்ன வகையான எதிர்வினைகள், உணர்வுகள் மற்றும் மதிப்பீடுகள் உண்டாகும் என்பதை இந்தப்பயிற்சி காட்டுகின்றது.*

வகுப்பு 3 - 9 | 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
விளையாட்டு அறிவுறுத்தல்கள் (அடுத்த பக்கத்தில் முதன்மை நகல்)

**குறிப்புகள்:**

மூலவளம்: Interkulturelles Training. Materialien und Übungen für den Einsatz in der Jugendarbeit im Sport. Link: http://old.dsj.de/uploads/media/interkulturelles_training_2015.pdf

---

**நடைமுறை:**

- மாணவர்கள் இணைகளை உண்டாக்கல் (எ.கா. குழு 1 மற்றும் குழு 2). எல்லா குழு 1 மாணவர்களும் வகுப்பறையில் இருக்க குழு 2 அடுத்த அறைக்கு அல்லது மண்டபத்துக்குச் செல்வர்.
- சில மணித்துளி நேர பேச்சுக்கு அடிப்படையாக வகுப்பறையில் உள்ள (குழு 1) மாணவர்கள் ஒரு தலைப்புடன் வரவேண்டும் (ஓர் அனுபவம், ஒரு புத்தகம், ஒரு திரைப்படம், ஒரு விடுமுறை, முதலியன). பின்னர், ஒவ்வொரு குழு 1 மாணவரும் குழு 2 மாணவரும் ஐந்து நிமிடங்களுக்கு இணையராக அது பற்றி உரையாடுவர்.
- குழு 2 க்கு ஆசிரியர் விளையாட்டு அறிவுறுத்தல்களை பகிர்வார். ஒவ்வொருவரும் தெளிவடையும் வரை விளங்கப்படுத்துவார். பின்னர் குழு 2 மாணவர்கள் வகுப்பறைக்குத் திரும்புவர்.
- குழு 1 மாணவர்கள் உரையாடலைத் தொடங்குவர். அடுத்த ஐந்து மணித்துளிகளில் ஆசிரியர் அதனை நிறுத்துவார்.
- முந்திய பயிற்சியைப் பற்றி வகுப்பு முழுவதுமாக பிரதிபலித்தலும் சொல்லாடலும். என்ன நடந்தது? சொல்லாடலின் தரம் எப்படி இருந்தது? நீர் என்ன உணர்ந்தீர்? உமது பங்காளியைப் பற்றி என்ன நினைத்தீர்?
- தொடர்ந்து பொதுமைப்படுத்தல்: இதே மாதிரியான பட்டறிவுகளை உமது சூழலில் வேறுபட்ட தொடர்பாடல் முறைகளுடன் பெற்றீரா, அல்லது கண்காணித்துள்ளீரா? உமது பிறந்த நாட்டு பண்பாட்டுக்கும் நீர் இப்பொழுது வாழும் உமது புகுந்த நாட்டுப் பண்பாட்டுக்கும் இடையில் தொடர்பாடலில் என்ன வேறுபாடுகள் இருக்கின்றன (வாழ்த்தும் முறைகளில், உரையாடலின் தொனி, பங்குபற்றுபவர்களுக்கிடையிலான தூரம், மொழித் தொடர்கள் முதலியவை) # 3.7 ஐப் பார்க்கவும்.

# ப.தா. விளையாட்டு வழிமுறைகள்

மாணவர்களுக்கான பணித்தாள்

## விளையாட்டு விதிகள்

நீர் பின்னர் இன்னொரு மாணவருடன் பேசுவதாயின், விதிகள் 1, 4, மற்றும் 5 ஐப் பின்பற்றவும்.

விதி 2 உடன் 2அ அல்லது 2ஆ வைத் தெரிவு செய்ய நீர் தீர்மானிக்க வேண்டும். இதே போல விதி 3 உடன் தொடரவும்.


**1**

உரையாடலைத் தொடங்குதற்கு மூன்று தரம் கையைத் தட்டி உமது பங்காளியை வாழ்த்தவும்.




**2**

அ)
உரையாடலின்போது குறைந்தது இரண்டு மீற்றர் தூரம் இடைவெளியை பேணவும்.




ஆ)
உரையாடலின்போது உமது கூட்டாளியுடன் நெருக்கமாக நின்றுகொண்டு இடைக்கிடையே அவர் தோளை அல்லது கைகளைத் தொட்டுக் கொள்ளவும்.



**3**

அ)
உரையாடலின் போது எப்போதும் தரையைப் பார்க்கவும்.



ஆ)
உரையாடலின் போது கூட்டாளியின் முகத்தைத் தவிர்த்து அப்பால் பார்க்கவும்.



**4**

மற்றவர் பேசும்போது கண்களை மூடவும்.



**5**

நீர் எப்போதும் பேசும் முன் அல்லது பதில் அளிக்கும் முன் பத்து வினாடிகள் பொறுத்திருக்கவும். வாக்கியங்களிற்கு இடையில் ஐந்து வினாடிகள் இடைவெளி விடவும்



# 4.2 மொழியினால் வழியைக் காட்டுக

**இலக்கு**

*ஒரு பல்பண்பாட்டுச் சூழலில் வாழ்வதற்கும் சேர்ந்து வேலை செய்வதற்கும் தெளிவான செயலூக்கமுடைய தொடர்பாடல் நடுவணாக அமையும். பயிற்சி 4.3 தெளிவாகவும் செயலூக்கமுடையதாகவும் தொடர்பாடல் செய்யும் மாணவரின் ஆற்றலை மேலும் வலுப்படுத்துகிறது. அதே வேளையில் தெளிவற்ற தொடர்பாடலில் இருந்து எழுகின்ற சிக்கல்களை விவரித்துக் கூற மாணவர் கற்றுக்கொள்வர், அத்துடன் தீர்வு உத்திகளைக் கருத்தில் கொள்ளவும் மேம்படுத்தவும் கற்றுக்கொள்வர்.*

வகுப்பு 1 - 9

40 மணித்துளிகள்

**கருவிகள்:**
வகுப்பறையிலுள்ள பொருட்கள்

**குறிப்புகள்:**

4.2, 4.3 மற்றும் 4.7 என்பவற்றுக்கான மூலவளம்: Schilling, Dianne (1993): Miteinander klarkommen. Toleranz, Respekt und Kooperation trainieren. Mülheim an der Ruhr: Verlag an der Ruhr.

---

**நடைமுறை:**

- மேலதிக விளக்கங்கள் இல்லாது ஆசிரியர் ஒரு விமான இறங்குதுறையைக் கட்டுவதற்கு மாணவர்களின் துணையை வேண்டுகிறார். கதிரைகள், வாங்குகள் முதலியவற்றைப் பயன்படுத்தி 6 – 9 மீற்றர் நீளத்திலும் 1.5 – 2 மீற்றர் அகலத்திலும் ஒரு விமான ஓடு பாதை அமைக்கப்பட்டது. தொடர்ந்து 6 முதல் 10 வரையான பொருள்கள் (புத்தகங்கள், பத்திரிகை, பென்சில்கள் முதலியவை) விமான ஓடுபாதையில் பரப்பப்பட்டுள்ளன.

- பின்னர் ஆசிரியர் ஒரு விமான ஓட்டியாக நடிக்க ஆர்வமுள்ளவரை முன்வர அழைப்பார். அவர் தன் விமானத்தை ஓடு பாதையில் இறக்கவேண்டும், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் தன்னுடைய கற்பனை விமான நிலைய போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கோபுரத்திலிருந்து கட்டளைகளைப் பிறப்பிக்கவேண்டும்.

- விமான ஓட்டியும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளரும் ஓடு பாதையில் எதிர்முனைகளில் நிறுத்தப்படுவார். ஆசிரியர் விமான ஓட்டியின் கண்களைக் கட்டி, கடும் இடிமுழக்கம் உண்டு என அறிவிப்பார். மின்னல் வெட்டுக்கள் விமானத்திற்கும் கோபுரத்துக்குமான இரு வழி வானொலித் தொடர்பைத் துண்டிக்கிறது. விமான ஓட்டி இப்பவும் கட்டுப்பாட்டாளரின் குரலைக் கேட்க முடிகின்றது. ஆனால் அவர் வானொலி சைகைகளை வழங்க முடியாதுள்ளார். மேலும் சூறாவளி ஓடுபாதையை நாசமாக்கி உள்ளது, எல்லா இடமும் குப்பைகள் குவிந்துள்ளன. விமான ஓட்டி ஊடுபார்வை மிகக் குறைந்த சூழலில் கோபுரத்தில் இருந்து வரும் அறிவுறுத்தல்களை மட்டும் நம்பிக்கொண்டு. விமானத்தைப் பாதுகாப்பாக இறக்க வேண்டும். ஏதாவது பொருள் ஓடுபாதையில் விமானத்தால் மோதப்பட்டால், இறங்கும் போது விமானம் இழக்கப்பட்டதாகக் கருதப்படும்.

- பல விமானக் கட்டுப்பாளர் குழுக்களும் விமானிகளும் விமானத்தை பாதுகாப்பாக இறக்க முற்படுவர். ஒவ்வொரு முயற்சியின் பின்பும் மேற்சொன்ன இடர்பாடுகள் சுருக்கமாகக் கலந்துரையாடப்படும்.

- நிறைவு வகுப்பு கலந்துரையாடற்கான உள்ளீடுகள்: விமானிகள் என்ன உணர்வு பெற்றார்கள்? தங்கள் "குருட்டுத்தன்மையை" எவ்வாறு ஈடுசெய்ய முயன்றார்கள்? கட்டுப்பாட்டாளர்கள் என்ன உணர்வு பெற்றார்கள்? அவர்கள் விமானிகளை மிகத் துல்லியமாக வழிநடத்த என்ன செய்தனர்?
பரிமாற்றம்: உயர் நிலையில் சரியான உருவாக்கங்களிலும் அறிவுறுத்தல்களிலும் தங்கியிருந்த சூழ்நிலையை நீர் எப்போதாவது எதிர்கொண்டீரா?
பொதுமைப்பாடு: எவ்வாறு தெளிவான சரியான செய்திகளை நாம் வழங்கமுடியும்? தொடர்பாடலில் மொழிக்கூறுகள் எவ்வளவு முக்கியமானவை? வேறு எக்கூறுகள் தொடர்பாடலில் ஒரு பங்கை ஆற்ற முடியும், மற்றும் அதனை மேம்படுத்தமுடியும்?

# 4.3 கூர்மையாகச் செவிமடுத்தல்

**இலக்கு**

*இந்தப்பயிற்சி மாணவர்களின் செயற்றிறனான கேட்டலை மேலும் வலுப்படுத்துகின்றது. இது தொடர்பாடல் மற்றும் பல்பண்பாட்டு ஆற்றலைச் செயற்படுத்தும் ஓர் இன்றியமையாத பகுதியாகும். பாவனை செய்துகாட்டும் ஒரு பயிற்சி முறையினூடாக மாணவர்களின் பல்பாட்டுத் தொடர்பாடலில் கேட்பவர் என்னும் ஆர்வத்தையும், தங்கள் பங்கையும் அறியத்தூண்டுகிறது.*

வகுப்பு 4 - 9 | 40 மணித்துளிகள்

**கருவிகள்:**
"என்னால் நன்றாக செவிமடுக்க முடியுமா..." பணித்தாள் பிரதிகள் (அடுத்த பக்கத்தில் முதன்மை நகல்)

**நடைமுறை:**

- "தொடர்பாடல் என்றால் என்ன?" என மாணவர்களிடம் கேட்கப்படும், மற்றும் தொடர்பாடல் சூழ்நிலைக்கான எடுத்துக்காட்டுக்கள் ஒருங்கு சேர்க்கப்படும். ஆசிரியர் பலகையில் இயல்பான படம் ஒன்றை வரைந்து விளங்கப்படுத்துவார். (அனுப்புபவர் ⇆ பெறுபவர்): "தொடர்பாடல் என்பது இருவருக்கிடையே நடைபெறும் பந்து (ping-pong) விளையாட்டு போன்றது. இருவர் ஒருவரையொருவர் நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டுமானால், முடிந்தளவு இடையூறுகள் இல்லாமல் உரையாடவேண்டும். மேலும் அனுப்புபவர் தமது தகவலை தெட்டத்தெளிவாக கூறவேண்டும். அதிகமாகத் தகவலை அனுப்பும்பொழுது சொற்களால் மட்டுமல்லாமல் சொல்லல்லாத குறியீடுகளாலும் சேர்த்து அனுப்பப்படும். எடுத்துக்காட்டாக புன்னகை, முகச்சுழிப்பு அல்லது சைகைகள். ஒரு வெற்றிகரமான தொடர்பாடல் என்பது செய்தி பெறுபவர்கள் செய்தியைப் பிழையாக விளங்காமலிருக்க கூர்மையாக செவிமடுக்க வேண்டும் எனக்குறித்துரைக்கின்றது."
- தொடர்ந்து கலந்துரையாடலில் மாணவர் செவிமடுப்பவர் செயற்றிறனுடன் கேட்கும் செய்திகளில் எவ்வளவு திறமாக ஆர்வம் காட்டுகிறார் எனும் கருத்துக்களை ஒன்றிணைத்துக் கொள்வர். பணித்தாள்கள் வகுப்பில் பகிரப்படும். மதியுரைகளும் கலந்துரையாடப்பட்டு முடியுமாயின் பதிலீடு செய்யப்படும்.
- மாணவர்கள் செயற்றிறன் கேட்டலுக்குப் பயிற்சி செய்ய மூன்று பேர் கொண்ட குழுக்களாக அமைவர். முதலாவது சுற்றில், குழு 1 இன் மாணவர் அனுப்புபவர் ஆகவும் குழு 2 இன் மாணவர் பெறுபவராகவும் செயற்றிறனுடைக் கேட்பவராகவும் அமைவர். குழு 3 இன் மாணவர் பணி என்பது 2ஆவது மாணவன் ∴ மாணவியின் செயற்றிறனுடைக் கேட்டலைக் கண்காணித்துத் தான் அறிந்தவற்றைத் தன் குழுவுக்கு வழங்குவதாகும். மூன்று சுற்றுக்கள் இடம்பெறும். அதனால் ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் ஒவ்வொரு தடவை பெற்றுக்கொள்ளமுடியும். ஆசிரியர் அனுப்புபவருக்குக் கருப்பொருள்களைப் பரிந்துரைப்பார். அவையாவன, "எனக்கு உதவி தேவைப்பட்டபோது", "எதை நான் திறம்படச் செய்யலாம்", "நான் திறம்படத் தீர்வு காண விரும்பும் ஒரு சிக்கல்". அனுப்புபவர்கள் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து பேசும்போது இடைவெளிவிட்டு பேசவேண்டும் என்பதை மனதில் கொள்ளவேண்டும். அது பெறுபவர் பதிலளிக்க துணைசெய்யும் என்பதற்காக. ஆசிரியர் தொடக்கத்திற்கான சைகையைக் காட்டுவர். 3 மணித்துளிகளின் பின் சுற்றை நிறைவுக்குக் கொண்டு வருவர். கண்காணிப்போர் தமது அறிக்கையை முடிப்பதற்கு 1 மணித்துளி பெறுவர். பின்னர் அவர்கள் கதாபத்திரம் மாற்றப்படும். ஈற்றில் மாணவர் தமது பணித்தாள்களை தனித்தனியாக நிறைவு செய்வர்.
- வகுப்பு முழுவதுமான கலந்துரையாடலும் தம் கருத்துப் பதிவு செய்தலும். ஒரு கேட்டல் திறனாளராக என்ன உணர்வு பெற்றீர்? பார்வையாளருக்கு இது ஒரு கேட்டல் திறனாளராக ஒருவர் உம்மைக் கூர்ந்து செவிமடுத்தபோது எப்படி இருந்திருக்கும்? நீரே ஒரு அனுப்புவராக இருந்தபோது ஒருவர் உமக்கு கண்காணிப்புடன் கேட்டபோது என்ன உணர்வு பெற்றீர்? நீர் ஒரு செயற்பாட்டினைக் கூர்ந்து செவிமடுத்தபோது எது மிகவும் எளிதாக இருந்தது, எது மிகுந்த கடினமாக இருந்தது? கண்காணிப்பாளரிடமிருந்து நீர் எதனைக் கற்றுக்கொண்டீர்? மிகக் கவனத்துடன் கேட்பது ஏன் இன்றியமையாததாகின்றது? நீர் நன்றாகக் கேட்ட ஒரு சூழலை நினைவில் கொள்ளவும்! உமது செயற்பாட்டுக் கேட்டலை அடிப்படையாகக் கொண்டு ஒரு நல்ல பின்னூட்டலைப் பெற்றதால் உம்மைப் பற்றிப் பெருமைகொண்ட ஒரு எடுத்துக்காட்டைப் பகிரவும்!


4

ப.தா.

# என்னால் நன்றாக செவிமடுக்க முடியுமா?

மாணவர்களுக்கான பணித்தாள்

**நல்ல கேட்டல் திறனாளராக ...**



- ... நீர் பேசுபவரைப் பார்க்கிறீரா?
- ... நீர் அவருடைய கண்களைப் பார்க்கிறீரா?
- ... நீர் தளர்வாக / அமைதியாக ஆனால் கவனத்துடன் இருக்கிறீரா?
- ... நீர் கவனத்துடன் கேட்டு பேசுவோர் சொல்லவரும் விடயத்தை சிந்திக்கிறீரா?
- ... நீர் குறுக்கிட்டு கதைக்காமலும் வேறு இடையூறான விடயங்களைச் செய்யாமலும் இருக்கிறீரா?
- ... இடைவெளிகளின்போது மட்டும் நீர் பதிலளிக்கிறீரா?
- ... பேசுபவர் என்ன உணர்கிறாரோ அப்படியே நீரும் உணர முயற்சிக்கிறீரா?
- ... பேசுபவருக்கு நீர் செவிமடுக்கிறீர் என்பதை தெரியப்படுத்த தலையை ஆட்டுகிறீரா? "ம்ம்" என்று பதில் சொல்கிறீரா? அல்லது உரையாடலை சுருக்கிச்சொல்கிறீரா?

**கேட்கும்போது எதை நீர் நன்றாகச் செய்கிறீர்?**

**கேட்கும்போது எது உம்முடைய வலிமை இல்லாதது?**

**நன்றாகக் கேட்பதற்கு நீர் என்ன செய்ய வேண்டும்?**

# 4.4 பார்க்கச் செல்லல்

**இலக்கு**

*மாணவர்கள் மாறுபாடான எதிர்பார்ப்புகளுடன் புதியவர்களுக்கிடையில் ஏற்படும் பழகுவதுபோல வாய்மொழியற்ற ஒரு போலி நடிப்பு ஒன்றில் ஈடுபடுவர். தொடர்ந்து பகுப்பாய்வின் ஊடாக அவர்களது உருக்காட்டுத் திறன் தொடரப்பட வேண்டும், இதன்மூலம் பல்பண்பாட்டுத் தொடர்பாடலுடன் ஆழமான பட்டறிவுகளை அவர்கள் பெற்றுக்கொள்வர்.*

வகுப்பு 4 - 9 | 30 - 45 மணித்துளிகள்



**கருவிகள்:**
பணித்தாள் பிரதிகள்

**குறிப்புகள்:**

- வாய்மொழியற்ற தொடர்பாடல் பற்றிய நுட்பங்களை அறிந்து ஆழப்படுத்த உரையாடல்களின்போது தங்களையோ அல்லது மற்றவர்களையோ அடுத்துவரும் 2 – 3 கிழமைகளில் கூர்ந்து அவதானித்து எடுத்துக்காட்டுகளை வகுப்புக்குக் கொண்டுவரவேண்டும் என்று பணிப்பதனூடாகச் செய்யமுடியும்.
- வளம்: பல்பண்பாட்டு பயிற்சி (மேலே 4.1 ஐப் பார்க்கவும்.)

---

**நடைமுறை:**


- மாணவர்கள் இணைகளாகப் பிரிக்கப்படுவர். ஒருவர் விருந்து கொடுப்பவராக, மற்றவர் விருந்தினராக கதாபாத்திரம் எடுப்பர். எல்லோரும் தமது குழுக்களுக்காக கதாபாத்திர அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்வர் (அடுத்த பக்கத்தைப் பார்க்கவும்). ஏற்பாடுசெய்யும் வேளைகளில் விருந்து வழங்குவோர் வகுப்பறையில் இருப்பர். விருந்தினர் அடுத்த அறைக்குச் செல்வர். அல்லது மண்டப வழியில் இருப்பர். அத்தகைய ஏற்பாட்டு வேளைகளில், மாணவர்கள் தங்களுடைய ஒப்படைத் தாளில் பட்டியலிடப்பட்ட குறிப்புகளை, வாயாலே பேசாமல், எப்படி வாய்மொழியற்ற முறையில் விளக்குவார் என்பதை உருக்காட்டலால் கருத்திற்கொள்ளவேண்டும்.
- 10 மணித்துளிகளுக்குப் பின் அந்த சந்திப்பு தொடங்கும். சொற்கள் பயன்படுத்தப்படமாட்டா. 10 மணித்துளிகள் நாடகம் நீடிக்கும். தங்களது பட்டறிவுகளைப் பற்றிச் சுருக்கமாக அறிக்கையிடும்படி சில இணைகளிடம் ஆசிரியர் கேட்பார்.
- வகுப்பு முழுமையாக உருக்காட்டுதலுடன் கலந்துரையாடல். தூண்டிகள்:
  - எது நன்றாக வேலை செய்தது? ஏன்? எந்த வகையான உணர்ச்சிகளை அது தூண்டியது?
  - எது முழுமையாக வேலை செய்யவில்லை? ஏன்? எந்த வகையான உணர்ச்சிகள் தூண்டப்பட்டன?
  - விருந்தினர்கள் விருந்து வழங்கியவரின் நடத்தையை விளங்கிக் கொண்டனரா?
  - சில எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாத போது அவை எதனைத் தூண்டின?
  - எதிர்பார்ப்புகள் எல்லாம் எதைப்பற்றியன?
  - பொதுமைப்பாடு: எங்கே இதே மாதிரியான சூழல்கள் உண்மையில் இடம்பெற்றன? இது தொடர்பாக நீர் ஏற்கனவே பட்டறிவு பெற்றுக்கொண்டீரா? உமது மனக்குறிப்பு என்ன?
  - குறிப்பாக வேறுபட்ட பண்பாடுகளுக்கிடையில் எழும் வேறுபட்ட எதிர்பார்ப்புகளை சந்திக்கும் எடுத்துக்காட்டுகள் உமக்குத் தெரியுமா?

ப.தா.

# கதாபாத்திரத்திற்கான நடைமுறைகள்

மாணவர்களுக்கான பணித்தாள்

## விருந்து வழங்குவோருக்கான கதாபாத்திர நடைமுறை




**விருந்து வழங்குவோரின் நடத்தை:**

- கண்களை உருட்டுவதன் மூலம் ஆம் எனக் குறி காட்டுவர்.
- நாக்கை வெளிக்காட்டுவதனால் இல்லை எனக் குறி காட்டுவர்.
- ஏதாவது காட்ட விரும்பின் கைகளைப் பயன்படுத்தாது, அதனை உற்றுநோக்குவர்.

**விருந்தாளிகள் பற்றி விருந்து வழங்குவோரின் எதிர்பார்ப்புகள்: அவர்கள் கட்டாயம் ...**

- ... அவர்களுடைய காலணிகளை அகற்ற வேண்டும்.
- ... முதலில் அவர்கள் கைகளைக் கழுவ வேண்டும்.
- ... விருந்து வழங்குவோருக்கு ஒரு சில்லறைக் காசினை அன்பளிப்பாக வழங்க வேண்டும்.
- ... விருந்து வழங்குவோருக்கு கொடுக்க ஒரு கதிரையை எடுக்கவேண்டும்.
- ... கதிரைக்குப் பக்கத்தில் சப்பாணி கட்டிக்கொண்டு இருக்க வேண்டும்.

## விருந்தாளிகளுக்கான கதாபாத்திர நடைமுறை



**விருந்து வழங்குவோர் பற்றி விருந்தாளிகளின் எதிர்பார்ப்புகள் அவர்கள் கட்டாயம் ...**

- ... விருந்தினரை தலை தாழ்த்தி வணங்கவேண்டும்.
- ... தம்முடைய பற்களைக் காட்ட வேண்டும்.
- ... தம்முடைய தொலைபேசி இலக்கங்களை வழங்கவேண்டும்.
- ... விருந்தினருக்கு தம் கலைப்பொருள் ஒன்றை வழங்கவேண்டும்.
- ... அவர்கள் பெயரை ஒரு தாளில் எழுத வேண்டும்.
- ... விருந்தாளிகளுக்கு ஒரு கதிரை வழங்க வேண்டும்.

# 4.5 இக்கட்டான சூழ்நிலைகளை நான் எப்படி கையாளுகிறேன்.

**இலக்கு**

*பல்பண்பாட்டுச் சூழல்களையும் உள்ளடக்கிய தாம் வாழும் இடத்தில் மாணவர்கள் எப்போதும் இக்கட்டான தொடர்பாடலை எதிர்கொள்கின்றனர். தற்போதைய பயிற்சி தம்முடைய மேம்பாட்டுக்கும் மற்றவர் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளவும் மிகவும் வேண்டிய செயற்பாட்டுக்கான மாணவர்களின் திறன்களுக்குத் துணைசெய்கிறது. இப் பயிற்சியின் இன்னொரு இலக்கு ஒரு பாலாரின் அடிப்படையான மதிநுட்பங்களைக் காட்டுவதாகும்.*

வகுப்ப்பு 4 - 9 | 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
வினாக்கொத்து (அடுத்த பக்கத்தில் முதன்மை நகல்) திருப்பு விளக்கப் படத்துக்கான பெரிய தாள்கள்

**நடைமுறை:**

- தலைப்புக்கான அறிமுகம்: இக்கட்டான சூழ்நிலைகளை நாம் எப்படிக் கையாள்வோம் என்பது பற்றிச் எண்ணிப்பார்க்கவுள்ளோம். "இக்கட்டான சூழல்" என்னும் தொடர் பற்றிய விளக்கம் (எ.கா. உணர்ச்சிவயப்பட்ட மனவழுத்தச் சூழல், குடும்பத்துள் அல்லது அதற்கு அப்பால் ஏற்படும் முரண்பாடுகள், பகைமை) மாணவர்கள் வகுப்பில் திட்டவட்டமான எடுத்துக்காட்டுக்களைத் திரட்டுவர்.
- ஆசிரியர் வினாக்கொத்தைப் பகிர்வார் (கீழே பார்க்க) தனித்தனியாக மாணவர்கள் ஒவ்வொரு கூற்றினையும் அவதானமாகப் படித்து இக்கட்டான நிலைமைகளில் தாம் எப்படி குறிப்பிட்ட நடத்தைகளைக் காட்டுகின்றனர் என்பதை எண்ணிப்பார்ப்பர். அதற்காக 1 முதல் 4 என்னும் அளவுத்திட்டத்தைப் பயன்டுத்துவர் (1 = நான் இந்த முறையில் ஒருபோதும் நடக்கவில்லை அல்லது மிக அருமையாகவே நடந்துள்ளேன், 2 = நான் இப்படிச் சிலவேளைகளில் நடப்பதுண்டு, 3 = அடிக்கடி, 4 = பல தடவை).
- பத்து மணித்துளிகளுக்குப் பின், விடைகள் முழு வகுப்பிலும் கலந்துரையாடப்படும். ஆண்கள் பெண்களுக்கிடையில் அமையக்கூடிய வேறுபாடுகள் பற்றிச் சிறப்பான கண்காணிப்புச் செலுத்தப்படும்.
- இறுதியாக, வகுப்பு மதிநுட்பங்களை பெரும் பிரிவுகளாக ஒழுங்குபடுத்த முயற்சிக்கும். (எ.கா. சிக்கலைத் தவிர்த்தல், பக்கத்துணை தேடல், சிக்கலை நேரடியாகத் தலையிட்டு தீர்க்க முற்படல், எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்தல்) மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட மதிநுட்பத்தின் மீள்திறனையும், ஆண்கள் பெண்களுக்கிடையே அதன் பகிர்வையும் ஆவணப்படுத்துவதற்காகப் பரிந்துரைகளைக் கோவைப்படுத்துவர்.

4

ப.தா.

# வினாக்கொத்து: இக்கட்டான சூழ்நிலைகளை நான் எப்படிக் கையாளுகிறேன்.

மாணவர்களுக்கான பணித்தாள்


**1 =** நான் இந்த முறையில் ஒருபோதும் நடக்கவில்லை அல்லது மிக அருமையாகவே நடந்துள்ளேன்

**2 =** நான் இப்படிச் சிலவேளைகளில் நடப்பதுண்டு

**3 =** நான் இப்படி அடிக்கடி நடப்பதுண்டு.

**4 =** நான் பல தடவை இப்படி நடப்பதுண்டு.

பொருத்தமானதுக்கு X போட்டுக் காட்டவும்



| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| நான் விடுபட்டு ஒதுங்கித் தனிமையில் இருக்கப் போகின்றேன். | | | | |
| நான் வேறொன்று பற்றிச் சிந்திப்பேன். | | | | |
| நான் உரத்த இசை, உணவு, விளையாட்டு ஊடாக அழுத்தத்தைக் குறைக்க முயல்வேன். | | | | |
| நான் சினத்தைத் தணிக்க முயல்வேன். | | | | |
| நான் வேறு பணிகள் செய்வதூடாகச் சிக்கலை மறக்க முயல்வேன். | | | | |
| நான் இன்னொருவரைத் துணைக்கு வேண்டுவேன். | | | | |
| என்னால் சிக்கலைத் தவிர வேறு ஒன்றையும் சிந்திக்க முடியவில்லை. | | | | |
| நான் மிக ஆறுதலான முறையிலே எதிர்வினை ஆற்றியிருக்கலாம் என நான் என்னையே சினந்துகொள்கிறேன். | | | | |
| நான் முதலில் பொறுமையாக இருப்பேன். | | | | |
| நான் உடனடியாகவே சிக்கலைக் கையாள முயல்வேன். | | | | |
| நான் எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிடுகிறேன். | | | | |
| நான் ஒரு தீர்வை அடையப் பல வழிகளை எண்ணுவேன். | | | | |
| நான் சிக்கலின் ஒவ்வொரு தனிப்பட்ட பண்பு பற்றியும் எண்ணுகிறேன். | | | | |
| நான் மற்றவர்களிடமிருந்து ஒற்றுமையினையும் துணையினையும் வேண்டுகிறேன். | | | | |
| நான் சிக்கலை உடனடியாகத் தீர்ப்பேன். | | | | |
| நான் சிக்கலை முடியும்வரை அடக்கி வைக்க முயல்வேன். | | | | |

# 4.6 பண்புக்கூறுகள்

**இலக்கு**

*எங்கள் தொடர்பாடலில் உள்ள பண்பாட்டு சிந்தனை முறைமைகள் மற்றும் பொருள்விளக்க முறைமைகளின் செல்வாக்குத் தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் வலுப்படுத்திக்கொள்வர். பண்பாட்டு உருவாக்கப் பண்புக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டு பிழைக்கும் ஒரு தொடர்பாடல் என்னும் எடுத்துக்காட்டு தொடக்கநிலையாக அமையலாம்.*

வகுப்பு 7 - 9

45 மணித்துளிகள்

**கருவிகள்:**

உரையாடலின் பிரதிகள் (அடுத்த பக்கத்தில் முதன்மை நகல்)

**குறிப்புகள்:**

- உரையாடல் ஒன்றிற்கான எடுத்துக்காட்டுக்கு ஒருவரின் தன்வாழ்விடச் சூழலிலிருந்து, இன்னொன்றினை எவ்வித சிக்கலுமின்றிப் பதிலீடு செய்யலாம் எப்படி இருப்பினும் எமது எடுத்துக்காட்டுக்கு ஒத்ததாகக் கணிக்கப்படும்.
- வளம்: according to Triandis (1972) in Thomas Alexander et al. (publisher) (2003): Handbook for intercultural communication and cooperation, vol. 1. Göttingen: Vandenhoeck & Ruprecht.

---

**நடைமுறை:**

- ஆசிரியர் முதலில் பொறுப்பேற்றல் ∴ பண்புக்கூற்று என்னும் பதம் பற்றி விளக்குகிறார் (வரைவிலக்கணம்: குணநலன்கள் தொடர்பாக மக்கள் தம்மீது அல்லது பிறர்மீது ஏற்படுத்தும் பண்புக்கூற்று, எ.கா. இனம் அல்லது ஒரே வகைமாதிரிகள் அல்லது பொருள்விளக்கம்). இது தொடர்பாக மாணவர்கள் பெற்றிருக்கக்கூடிய பட்டறிவுகள் பற்றிய கலந்துரையாடல்.
- ஓர் உரையாடல் இரண்டு நிலைகளில் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்று மாணவருக்கு அறிவுறுத்தல் தரப்படும். 1. ஒரு நிலையில் என்ன உண்மையில் சொல்லப்பட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டு, மற்றும் 2. பேசாத பொருள் விளக்கங்கள் அல்லது பண்புக்கூற்றுகள் நிலையில். கருப்பொருள் ஓர் அமெரிக்கன் மேற்பார்வையாளருக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனத்து ஒரு கிரேக்கப் பணியாளருக்குமிடையே நடைபெறும் ஓர் உரையாடலே இப்பயிற்சியின் சூழிடமாகும். செயற்பாடு கிறீசில் நடைபெறுகிறது. கிரேக்க வேலையாள் நீண்ட கால வெற்றிகரமான பணியாளர். அமெரிக்கனோ அண்மையில் கிரேக்க துணைநிறுவனத்தில் பதவிநிலை உயர்த்தப்பட்ட ஒரு முகாமையாளராவார்.
- அந்த உரையாடலின் பிரதியை மாணவர் பெற்றுக் கொள்வர். ஆசிரியரால் முன்னரே மடிக்கப்பட்ட பண்புக்கூற்றுப் பகுதி, (வலப்பக்கம்) மாணவரால் பார்க்கக்கூடாத பகுதி. மாணவர்கள் வேறுவேறான கதாபாத்திரங்களைப் பெற்று உரையாடலை உரத்துப் படிப்பதில் ஈடுபடுவர், பின்னர் சிறு குழுக்களில் தொடர்பாடற் செயலிழப்புகளுக்கான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடுவர்.
- பின்னர் அவர்கள் தாளைப் பிரித்து வலது பகுதி நிரலில் உள்ள பண்புக்கூற்றுகளை வாசிப்பர். எப்படி இப் பண்புக்கூறுகள் ஏற்பட்டன என்பதை இணையராகக் கலந்துரையாடுவர்.
- முழு வகுப்பினரும் உருக்காட்டுதலும் கலந்துரையாடலும்:
  - தொடர்பாடல் தடைபடுவதற்கான முதன்மைக் காரணங்கள் எவை?
  - எந்த வகையான விழுமியங்கள், நடத்தைக் கோலங்கள் மற்றும் பண்பாட்டுச் சிறப்பு மனப்பான்மைகள் அந்த இரு மனிதரின் நடத்தைக்குப் பொறுப்பாக இருந்திருக்கலாம்?
  - இச் சூழலை உருப்படியாகக் கையாளுவதற்கான அடுத்த கட்டம் என்னவாக இருக்க முடியும்? (பல்பண்பாட்டுத் தொடர்பாடலின் நுட்பங்களைக் கோவைப்படுத்துவது பயன்மிக்கதாக அமையும்)
  - இது தொடர்பாக மாணவர் எவ்வகையான பட்டறிவுகளை பெற்றுக் கொண்டுள்ளனர்?

ப.தா.

# புதிய அமெரிக்கன் மேற்பார்வையாளர் மற்றும் அவருடைய கிரேக்கப் பணியாளர்

மாணவர்களுக்கான "உரையாடல்" பணித்தாள்

| நடத்தை / என்ன சொல்லப்பட்டது | பண்புக்கூறு:<br>பொறுப்பேற்றல் / பொருள்விளக்கம் / எண்ணங்கள் |
|---|---|
| **அமெரிக்கன்:** இந்த அறிக்கையை முடிக்க எவ்வளவு காலம் வேண்டும்? | ***அமெரிக்கன்:*** *நான் அவரை பங்குபற்றலுக்கு அழைக்கிறேன். தீர்வெடுப்பதில் அவரையும் சேர்த்துக்கொள்ள விரும்புகிறேன்.* |
| **கிரேக்கன்:** எனக்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்பது தெரியவில்லை. | ***கிரேக்கன்:*** *இதன் போக்கு என்ன? அவர்தான் தலைவர்: அவர் ஏன் எனக்குத் தெளிவான அறிவுறுத்தல்களைத் தரவில்லை.*<br>***அமெரிக்கன்:*** *அவர் பொறுப்பேற்க மறுக்கிறார்.* |
| **அமெரிக்கன்:** எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதை நீரே நன்றாகத் தீர்மானிக்கலாம். | ***அமெரிக்கன்:*** *தன் செயற்பாடுகளுக்கு அவரே பொறுப்பேற்கவேண்டும்.*<br>***கிரேக்கன்:*** *என்ன பேய்க்கதை! அவருக்கு நான் ஒரு மறுமொழி சொல்கிறேன்.* |
| **கிரேக்கன்:** சரி, பத்து நாள்கள். | ***அமெரிக்கன்:*** *அவருக்கு சரியாகக் காலத்தை மதிப்பிட முடியவில்லை. இந்த மதிப்பீடு முற்றாக சாத்தியமற்றது.* |
| **அமெரிக்கன்:** 15 நன்றாயிருக்கும். 15 நாள்களில் வேலையை நிறைவுசெய்ய உடன்படுகிறீரா? | ***அமெரிக்கன்:*** நான் அவருக்கு ஓர் உடன்படிக்கையை வழங்குகிறேன்.<br>***கிரேக்கன்:*** சரி, அவர் 15 நாள்களை வேண்டுகிறார், அவர்தான் தலைவர். |
| உண்மையில், அறிக்கையை நிறைவுசெய்ய 30 நாள்கள் வேண்டும். இதனால், கிரேக்கன் இரவு பகலாக வேலை செய்தும் 15ஆவது நாளில் மேலதிகமாக இன்னொரு நாள் தேவைப்பட்டது. | |
| **அமெரிக்கன்:** அறிக்கை எங்கே? | ***அமெரிக்கன்:*** அவர் உடன்படிக்கைக்கு இசைவாக அமைகிறாரா என்பதை நான் உறுதிசெய்யவேண்டும்.<br>***கிரேக்கன்:*** அவர் அறிக்கையை கேட்கிறார். |
| **கிரேக்கன்:** அது நாளைக்கு நிறைவடையும். | ***இருவரும்:*** அறிக்கை இன்னும் நிறைவடையவில்லை. |
| **அமெரிக்கன்:** அது இன்று முடிக்கலாம் என்று இருவரும் முடிவுசெய்தோம்! | ***அமெரிக்கன்:*** உடன்படிக்கைகளுக்கு இசைவாக வேண்டும் என்பதை நான் அவருக்குப் படிப்பிக்க வேண்டும்.<br>***கிரேக்கன்:*** இந்த தகுதியற்ற முட்டாள் தலைவர்! அவர் பிழையான அறிவுறுத்தல்களைத் தந்தது மட்டுமன்றி, 30 நாள் வேலையை 16 நாளில் நான் முடித்துள்ளதைப் பாராட்டவும் இல்லை. |
| கிரேக்கன் தன் பணியிலிருந்து நீங்குவதாக அறிவிக்கிறார். அமெரிக்கன் வியப்படைகிறார். | |
| | ***கிரேக்கன்:*** இத்தகைய ஒருவருடன் என்னால் பணி செய்ய முடியாது |

# 4.7 தொடர்பாடலை எது தடுக்கின்றது

**இலக்கு**

*தொடர்பாடல் எவ்வாறு வலிமையிழக்கச் செய்யப்படுகிறது, மற்றும் கடினமான தொடர்பாடல் சூழல்களை எவ்வாறு கையாளவேண்டும் என்பதனை மாணவர்கள் பட்டறிந்து விளக்குவர். அவர்கள் மதிநுட்பங்களை மேம்படுத்தி தம்முடைய தொடர்பாடல் செயற்பாட்டுத் திறனை விரிவடையச்செய்வர்.*

வகுப்பு 7 - 9 | 45 - 60 மணித்துளிகள்



**கருவிகள்:**
முன் செய்யப்பட்ட "தொடர்பாடல் தடுப்பான்கள்" பணித்தாளுடைய பிரதிகள் (மூலப்பிரதி அடுத்த பக்கம் பார்க்கவும்)

**நடைமுறை:**

- பாடத்துக்கு முன்னர், ஆசிரியர் பலகையில் உரையாடல் தடுப்பான்கள் பட்டியல் ஒன்றினை தொகுத்திருப்பார் (பின்வரவுள்ள பணித்தாளில் தடித்த எழுத்திலுள்ள பதங்களைப் பார்க்கவும்).
- வகுப்பில் பட்டியல், மதிப்பாய்வு செய்யப்பட்டுக் கலந்துரையாடப்படும். மாணவர்கள் அதற்கு ஒரு தலைப்புக் கண்டுபிடிக்கவேண்டும், இல்லாவிடில், ஆசிரியர் "தொடர்பாடல் தடுப்பான்கள்" என்னும் தொடரை முன்மொழிவார்.
- ஒரு வகிபாக நாடகத்தில், குறிப்பிடப்பட்ட நடத்தைகளின் விளைவுகளை மாணவர்கள் பட்டறிவதுடன் அடையாளம் காணவும் வேண்டும். அது இரண்டு கதாபாத்திரங்களை வேண்டிநிற்கிறது: (கதாபாத்திரம் அ), இயல்பான உரையாடலை மேற்கொள்ள விரும்பும் ஓராள் (பள்ளி பற்றி அல்லது பொழுதுபோக்குகள் பற்றி), மற்றும் குறுக்கீடுகள், பொருத்தமற்ற வினாக்கள் முதலிய தொடர்பாடல் தடுப்பான்களுடன் தொடர்ந்து தலையீடுசெய்யும் ஓராள். மாணவர்கள் இச் செயற்பாட்டை முழுமையாக விளங்கிக்கொள்வதை உறுதிப்படுத்த இந்த கதாபாத்திரங்களை ஆசிரியர் முதற் சுற்றிலேயே மாதிரியாக்கலாம்.
- நாடகம் 5 மணித்துளிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கதாபாத்திரம் ஆ உரையாடலிலேயே ஆதிக்கம் செலுத்தும், உரையாடலை நகரச்செய்யும், அதே வேளை கதாபாத்திரம் அ ஒரு கூட்டு முறையில் உரையாடலை தொடரச்செய்ய மீண்டும் மீண்டும் முயற்சி செய்யும்.
- சிறு கலந்துரையாடல், உருக்காட்டுதல் மற்றும் பகுப்பாய்வு பின்னர் மற்ற மாணவர்களுடன் 2 – 3 மேலதிக சுற்றுகள் செய்யலாம்.
- நிறைவு உருக்காட்டுதல்: கதாபாத்திரம் ஆ வில் என்ன உணர்வைப் பெற்றனர்? இவை போன்று அ வில்? உம்முடைய கருத்தில், ஒரு பண்பாடு, ஒரு பால் அல்லது அகவைக் குழு என்பதற்கெனக் குறிப்பிடத்தக்க தொடர்பாடற் கோலங்கள் அல்லது தடுப்பான்கள் உளவா? ஓராள் தொடர்பாடலைத் தகர்க்கமுயலும் சூழலில் எவ்வகையான மதிநுட்பங்களை தனிப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்துவீர்?
- மிக ஆழமான பகுப்பாய்வுக்கு, மீள்பார்வைக்கு, படிப்புக்கு, "தொடர்பாடல் தடுப்பான்கள்" என்னும் பணித்தாளைப் பகிர்க.

4

ப.தா.

# தொடர்பாடல் தடுப்பான்கள்

மாணவர்களுக்கான பணித்தாள்

| தொடர்பாடல் தடுப்பான்கள் | இப்படித்தான் இது செய்யப்பட்டது (செய்யப்படாவிடில் நல்லது) |
|---|---|
| **குறுக்கிடுதல்:**<br><br>ஓர் உரையாடலைக் குலைப்பதற்குப் பெருங் காரணி குறுக்கீடுகளே எனலாம். அவை எதிர்ப்பகுதி கேட்பதாகவே இல்லை, மற்றும் அவரை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்னும் எரிச்சலூட்டும் உணர்வைப் பேசுபவருக்கு ஏற்படுத்துகின்றன. | உமது எதிர்ப்பகுதி பேசும்போதெல்லாம் குறுக்கீடு செய்க – எ.கா. உம்மைப் பற்றிய விளக்கவுரைகள் மற்றும் நீர் பட்டறிந்தவைகள். |
| **வேண்டப்படாத அறிவுரை வழங்கல்:**<br><br>"உம்மைப்போல் நானிருப்பின்…" அல்லது "என்னைக் கேட்டால்…" என்னும் வேண்டப்படாத அறிவுரையை யாரும் வரவேற்பதில்லை, அது எப்போதும் இடரானதே. வேண்டப்படாத அறிவுரை எதிர்ப்பகுதியினரை துணையற்ற மற்றும் மடைமை உணர்வுக்கு இட்டுச் செல்லும் | வேண்டப்படாத பெருமளவு அறிவுரைகளை வழங்குக. "உம்மைப்போல் நானிருப்பின்…", "நீர் இப்படி…என நான் எண்ணுகிறேன்.", "நீர் இதனை இவ்வாறு செய்வது நல்லது…", "நீர் என்னைக் கேட்டால்…" முதலியன. |
| **மதிப்பிடுதல்:**<br><br>உமது எதிர்ப்பகுதிக்கு அவர் எண்ணங்களும் உணர்வுகளும் பிழையானவை என விளக்க முற்படின், உமக்கு கூடத் தெரியும் என்னும் உணர்வை வெளிப்படுத்தும். இது பெரும்பாலும் தற்பாதுகாப்புக்கு இட்டுச்செல்வதுடன் உணர்வுகளைக் காயப்படுத்தும். உமது மதிப்பீடு உமது தனிப்பட்டபார்வை என முறைப்படுத்தின் அது சரியானதாகும். | உமது எதிர்ப்பகுதியினை மதிப்பிடுக, அவர் சொல்லும் எல்லாவற்றுக்கும் பின்வரும் கூற்றுகளைக் கூறுக: "இப்படியெனில்…இது நன்றாயிருக்கும்", புறநிலையில் பேசுவதெனின், இது பொருளற்றது…", "இது இம்முறையில் செயற்படாது…" முதலியன. |
| **உட்பொருள் கொள்ளல்:**<br><br>தம் எதிரப்பகுதியினரின் கூற்றுகளை அடிக்கடி உட்பொருள் கொள்வதால் அல்லது பகுப்பாய்வு செய்வதால் தமக்குக் கூடத் தெரியும் அவர்களைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்னும் உணர்வினை அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறது. | உமது எதிர்ப்பகுதி கூறும் எல்லாவற்றையும் பகுப்பாய்வு செய்க (எ.கா. "அப்படி என்று நீர் எண்ணலாம், ஆனால் நீர் கூறுவது தவறானது…", "ஏனென்றால் அதை எப்படிக் கையாளுவது என்பது உமக்குத் தெரியாது" முதலியன. |
| **ஆதிக்கம் செலுத்தல்:**<br><br>எப்போதும் ஏதாவது பற்றி மேலாக அல்லது கூடிய கவர்ச்சியுடையதாக கூறுபவர் ஒருவருடன் உரையாடல் மேற்கொள்வது ஊக்கக்கலைப்பாக அமையும். எதிர்ப்பகுதி விரைவில் கோவத்துடன் பின்வாங்குவார் அல்லது ஆக்ரோசமாக நடந்துகொள்வார். | உரையாடலைப் பொறுப்பெடுத்துக்கொண்டு உமக்கு எல்லாம் மிக நன்றாகத் தெரியும் என்பதை தெளிவுபடுத்துக. "இல்லை, இது இப்படித்தான்…", "நல்லது, இதைவிட இன்னும் உற்சாகமானதாக நான் பட்டறிந்துள்ளேன்…" |
| **பொருத்தமில்லாத வினாக்களைக் கேட்டல்:**<br><br>முதலில் கூர்ந்து செவிமடுக்காமல், தொடர்ந்து கேள்வி கேட்பவர்கள் தம் எதிர்ப்பகுதி தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும் என்ற சூழ்நிலைக்கு தள்ளிவிடுவர். நீர் பெருந்தொகை வினாக்களைக் கேட்டால், உமது எதிர்ப்பகுதியை திசைதிருப்புவதுடன் நம்பிக்கையின்மை மற்றும் ஆதிக்க உணர்வினை ஏற்படுத்துவீர். | கடினமான முறையில் கேள்விக்குப் பின் கேள்வியாகக் கேட்கவும்: "நீர் ஏன் அங்கே போனீர்? ", "யாரை எதிர்கொண்டீர்? ", "என்ன நிகழினும், அது என்ன பொருளைத் தருகிறது?" முதலியன. |
| **வினாவுதல், குற்றஞ்சாட்டல், முரண்படல்:**<br><br>தம் எதிர்ப்பகுதியினர் சொல்வதையெல்லாம் வினாவுகின்றவர்களும் அவர்களுடைய கருத்துகளைச் சிறுமைப்படுத்துகின்றவர்களும் பங்காளி முறைப்பட்ட இணையான உரையாடலை இயலாததாக ஆக்குவர். | தொடர்ந்து முரண்படுவதுடன் உமது எதிர்ப்பகுதி எவ்வாறு முரண்பட்டுள்ளார் என்று கூறுக: "நீர் பிழை", "இது இவ்வாறாக முடியாது", முதலியன. |
| **குற்றங்காணல், அவமதித்தல், பணியவைத்தல்:**<br><br>எதிர்மறையான, வஞ்சகப்புகழ்ச்சியான, குறைகாணும், கிண்டலான கருத்துகள் தானே அறிவாளி என்பதையும், பிறரின் ஊக்கத்தைக் கெடுக்கும் விதமாகவும் அமையும். தங்களை அவமதிக்கும் மற்றும் சிறுமைப்படுத்தும் உரையாடலை மிகச் சிலரே மேற்கொள்ள விரும்புவர். | பின்வரும் குறைகாணும், எதிர்மறையான கருத்துகளை கூறுக: "நீர் ஒரு மேதை என்று எண்ணுகிறீர் போலும்", "ஆட்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது பற்றி நீர் எப்போதுமே நல்ல எண்ணம் கொண்டிருக்கவில்லை" முதலியன. |

# அலகு **5**:
# மோதல்கள் – தீர்வுகளை ஒன்றாக நாடுதல்

## அறிமுகம்

கற்பித்தலின் நோக்கு பொதுவாகவும், பாரம்பரியமொழி கற்பித்தல் குறிப்பாகவும், எல்லாப் பிள்ளைகளையும் கட்டிளமைப் பராயத்தினரையும் அவர்களது கதைகள், கதாபாத்திரங்கள், தேவைப்பாடுகள் மற்றும் தரங்கள் என்பவற்றைப் பள்ளி மற்றும் வகுப்பறைக்குள் ஒரு பொது உண்மை நிலைக்குள் ஒருங்கிணைப்பதுதான். மற்றவர்களுடனான பயன்மிக்க இணக்கப்பாட்டுக்கு இட்டுச் செல்லும் சட்டங்களும் சமூகப் பழக்க வழக்கங்களும் மேம்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செய்யும்போது வகுப்பறைக் கற்பித்தலும் ஆசிரியர்களும் மேற்கிளம்பும் முரண்பாடுகளைப் பார்த்து ஆராய்ந்து முகம்கொடுக்கவும், காத்திரமான சிக்கல்களைக் கையாள்வதற்கு வாய்ப்புண்டா என்பதையும் நோக்கவேண்டும்.

முரண்பாடுகள் நாளாந்த வாழ்விலும் பள்ளிகளிலும் தவிர்க்க முடியாதபடி நடைபெறுகின்றன. இது தனிநபர் அல்லது குழுக்களின் ஆர்வங்களுடன் வேறொரு தனிநபர் அல்லது குழுக்களின் ஆர்வங்கள் முரண்படும் போது எப்போதும் நடைபெறும். இணைந்து வேலை செய்வதில் உள்ள ஒற்றுமையின்மை மற்றும் மோதல் தன்மையுடன் கூடிய முற்கற்பிதங்கள் மற்றும் கருத்துக்கள் காரணங்கள் ஆகும்.

பல்பண்பாட்டு மாணவருள்ள வழக்கமான வகுப்புக்களுக்கு மாறாக பா.மொ.க வகுப்புகள் மொழியியல் அதேபோல் பண்பாடு மற்றும் தோற்றம் அடிப்படையிலும் ஒத்ததன்மை உடையதான தனித்துவத்தைக் கொண்டுள்ளன. எப்படியெனினும், பா.மொ.கவும் புலம்பெயர் நாட்டுப் பல்பண்பாட்டு சமூகம் மற்றும் சமுதாயம் ஆகியன ஓர் உண்மையும் தவிர்க்கமுடியாத நிலையும் உடையன எனக் காட்டுவதில் நோக்காகக் கொண்டுள்ளது. இதே வழியில்தான் மேற்கிளம்பும் சிக்கல்கள் உருக்காட்டல் மற்றும் பகுத்தறிவு அணுகுமுறைச் சூழலில் தீர்க்கப்பட முடியும். ஒவ்வொரு மாணவரும் ஒரு குறிப்பிட்ட இனக்குழுவைச் சார்ந்திருப்பினும், அவர் இன்னொரு பெரிய குழுவின் ஒரு பகுதியாகப் பெரும்பாலும் உள்ளார். அதன்படி முரண்பாடுகளின் தீர்வுகள் ஒரு இனக்குழுவுக்கு ஏற்றதாக வழிப்படுத்தப்படக் கூடாது. ஆனால் பல்பண்பாட்டுச் சமூகத்துக்கும், சமுதாயத்துக்கும் இணக்கமானதாக இருக்கவேண்டும். பல்பண்பாட்டு ஆற்றலை விருத்தி செய்ய இங்கே விவரித்தபடி, பா.மொ.க ஓர் இன்றியமையாத பங்களிப்பை வழங்க முடியும்.

ஆசிரியர்களின் பொறுப்புக்களில் முரண்பாடுகளைக் கேட்கவைத்தல் அத்துடன் மாணவர்களின் உள்வாங்கும் ஆற்றல், உருக்காட்டுதல் திறன் மற்றும் செயற்படுவதற்கான ஆற்றல் என்பவற்றை ஊக்குவித்தல் அடங்கும். தொடர்புபட்ட எல்லாக் குழுக்களின் ஒத்துழைப்பு மற்றும் உணர்வு நலம் என்பவற்றுக்கு பயன்படும் தீர்வுகளைக் கண்டுபிடிக்கவும் மதிப்பிடவும் முரண்பாடுகளுடன் வேலை செய்வதற்காக மதிநுட்பங்களைக் கண்டுபிடிப்பதுமே இலக்கு ஆகும். அப்படியான முரண்பாட்டுத் தீர்வுகள் புதிய களங்கத்தை உருவாக்காமல் தப்பெண்ணங்களை இல்லாமலாக்குதல் போரிடும் குழுக்களின் முன்னணிகளை இறுக்கமாக்குதல் என்பன சொல்லாமலே விளங்கும். இது வெறுமனே வகுப்பில் ஒரு கண நேர அமைதி என்பதல்ல, இந்தக் கல்வித் தொடர்ச்சி என்பது சமூக வாழ்க்கைக்கான ஏற்பாடு எனக் கருத வேண்டும். இந்தத் தலைப்பின் இன்றியமையாமையைக் கருதி, பா.மொ.க மற்றும் வழக்கமான வகுப்பறை ஆசிரியர்கள் இடையே ஓர் இணைவு சிறப்பாக வரவேற்கப்படும்.

பின்வரும் கற்பித்தல் மதியுரைகள் பல்வேறு நிலைகளிலே, மாணவர்கள், புலனால் கொள்ளப்படும் எண்ணங்களின் பகுதிப் பரப்புகள், உருக்காட்டுதல், மற்றும் செயற்பாட்டுக்கான தகைமை அத்தோடு சமூக மற்றும் முரண்பாட்டு ஆற்றல்கள் என்பவற்றில் எவ்வாறு செயற்படலாம் என்பதைக் காட்டுகின்றன. இந்தத் தொகுதியின் இறுதியிலுள்ள கண்ணோட்டம் பொருத்தமான பகுதி ஆற்றல்களில் குவிமையம் கொள்கின்றது. மதியுரைகள், வயது, தேர்ச்சிமட்டம் என்பன சார்ந்து விரிவாக வரையறுக்கப்படுகின்றன, அவை மாற்றி அமைக்கக் கூடிய பரிந்துரைகள் என்பதை விளங்கிக்கொள்ளவேண்டும். ஒரு சிந்தனையாளராக, கண்காணிப்புடைய இணைப்பாளராக, பயிற்சி அளிப்பவராக, கற்கைப் படிமுறைகள் மற்றும் நடத்தைப் படிமுறைகள் என்பவற்றின் வழிகாட்டியாக, ஆசிரியரின் பங்கு என்பது முன்பு சொல்லப்பட்ட மாணவரின் ஆற்றல்கள் மனக்குறிப்புக்கள் மற்றும் நடத்தைகளை உருவமைத்து மேம்படுத்துவதில், உருவமைப்பதில் விமர்சன அடிப்படையில் இன்றியமையாததாகும்.

# 5.1 எல்லாம் சரிதானே! உண்மையாகவா?

**இலக்கு**

*மாணவர்கள் தங்கள் பள்ளியிலும் வகுப்பிலும் சேர்ந்திருக்கும்போது முரண்பாடுகள் பற்றிய விளக்கத்தை அதிகப்படுத்துவர். பின்னர் அம்முரண்பாடுகளை பிரதிபலித்து கண்ணோட்டம் ஒன்றை உருவாக்கி முரண்பாடுகளை பல்வேறு முரண்பாட்டு வகைகளுக்குள் சேர்த்துக் கொள்வர்.*


வகுப்பு 1 - 9

30 - 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
ஒரு பிளிப்சார்ட்
2 பெரிய தாள்கள்,
(A2) துண்டுகள்.

**நடைமுறை:**

- ஆசிரியர் "எல்லாம் சரிதானே! உண்மையாகவா?" என்ற தலைப்பைப் பலகையில் அல்லது தாளில் எழுதுவார். மாணவர் தங்கள் குழுக்களில் அல்லது வகுப்பில் தங்களுக்குச் சரிவராதவை பற்றி எண்ணுவர். ஆசிரியர் இடர்களின் பல வடிவங்கள் பற்றிக் கூறுவது இன்றியமையாததாகும்.
  - மற்றைய மாணவருடன் சேர்ந்து செயற்படுவதில் சிக்கல்கள்.
  - ஆண் பெண் பிள்ளைகளுக்கிடையில் சிக்கல்கள்.
  - பகிர்வதிலுள்ள சிக்கல்கள் (பணி, இடம் அல்லது கருவிகள்).
  - மற்றவர்களுடனான நட்பில் சிக்கல்கள்.
- மாணவர் தமது சிக்கல்களையும் முரண்பாடுகளையும் சிறிய தாள் துண்டுகளில் எழுதி அவற்றை பலகையில் அல்லது flip chart இல் (விரல் நகர்த்து அட்டவணைத்தாள்) ஒட்டுவர். எல்லாத் துண்டுகளும் ஒட்டியபின் மாணவர் வட்டவடிவில் இருப்பர்.
- ஆசிரியர் இரண்டு வகையான முரண்பாடுகளும் பிரச்சினைகளும் உள்ளன என்று விளக்குவார். இது தனிப்பட்ட மற்றும் பொதுவான எடுத்துக்காட்டுகளுடன் விளங்கப்படுத்தப்படவேண்டும். (வகுப்பறையில் பெரிய அளவிலான ஒலி = பொதுச் சிக்கல் ஒருவரின் மேசையில் மிகச் சிறிய இடம் = தனியாள் சிக்கல்). துண்டுத் தாள்கள் மீள ஆராயப்பட்டு பொருத்தமான வகைகளுடன் சேர்க்கப்படும். ஆசிரியர் முன்னரே "பொதுச்சிக்கல்", "தனியாள் சிக்கல்" என்னும் தலைப்புக்கள் எழுதிய இரண்டு பெரிய தாள்களை ஏற்படுத்தி வைத்துள்ளார். எல்லாச் சிக்கல்களும் பிரித்து அறியப்பட்டபோது எந்தச் சிக்கல் எளிதாகத் தீர்க்கப்படலாம் என வகுப்பு கலந்துரையாடும், அதுவே இன்றியமையாததாக அமையும். இந்தத் தொடர் எளிதில் தீர்க்கப்படக் கூடிய சிக்கல்கள் பற்றிய திரட்டுடன் நிறைவடையும்.



# 5.2 இதற்கு என் மறுப்பு ...

**இலக்கு**

*எங்கள் தொடர்பாடலில் உள்ள பண்பாட்டு எண்ணம் மற்றும் பொருள்கொள்ளும் முறைகளில் உள்ள செல்வாக்குப் பற்றி மாணவர் தம் விழிப்புணர்வை கூட்டிக்கொள்வர். பண்பாட்டு ரீதியில் உருவமைக்கப்பட்ட தடுப்பான்களால் வெற்றிகரமற்ற தொடர்பாடல் என்னும் எடுத்துக்காட்டு தொடக்கப் புள்ளியாக அமையும்*

வகுப்பு 1 - 3 | 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
விளையாட்டுச் சூழலுக்கு ஏற்றபடி

**நடைமுறை:**

- ஆசிரியர் ஒரு வகை முரண்பாட்டுச் சூழலை விவரிப்பர். அந்தச் சூழல் இரண்டு அல்லது மூன்று முறை ஒரு நாடகமாக நடிக்கப்படும். எடுத்துக்காட்டு: ஒரு பிள்ளை கட்டட அடுக்குகளால் ஒரு கோபுரத்தைக் கட்டமைக்கிறது. இன்னொரு பிள்ளை அதற்கு தொல்லை கொடுப்பதுடன் தள்ளியும் விடுகிறது. உடனே முதலாம் பிள்ளை எதிர்வினை ஆற்றி மற்றப் பிள்ளைக்கு "நிறுத்துக, நானே விளையாடப் போகிறேன்" அல்லது "நீர் எனக்கு எரிச்சலூட்ட வேண்டாம்" என்று தெளிவாக தன் எதிர்ப்பகுதிக்கு கூறுகின்றது. இப்படியான சூழ்நிலைகளில் தமது தேவைகளை பெற்றுக்கொள்ள உள்ளார்ந்த வலுவுடன் உறுதியாகக் குரல் எழுப்பவேண்டும்

- இந்த விளையாட்டுச் சூழல் வழியாக தங்கள் தேவைகளை வெளிப்படுத்துவதற்கு இத் தெளிவான வடிவமைப்புக்கள் மாணவர் மனதில் வலுவாக பதிந்து விடும். பின்னர் பிள்ளைகள் தங்கள் உண்மைச் சூழலில் உள்ள நினைவிலிருந்து இந்த வடிவமைப்புக்களை மீள எடுக்க முடியும், மற்றும் தங்கள் தேவைகளை ஐயத்துக்கிடமற்று வெளிப்படுத்த முடியும்.




- மற்றைய நாடகம் அல்லது கற்கும் சூழல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம். எடுத்துக்காட்டாக, ஜிக்ஸோ புதிர்ப் போட்டியை ஒருவர் சேர்ந்து செய்யும்போது ஏற்படும் இடையீடு, உடைமாற்றும் அறையில் ஏற்படும் பிரச்சினை (ஒருவரின் பொருளை ஒருவர் எடுத்தல் அல்லது ஒரு பிள்ளைக்கு இடமின்மை) கைவினைப் பகுதியில் கலைப் பொருட்கள் செய்யும் போது ஏற்படும் முரண்பாடுகள் முதலியவை.

- தொடக்க நிலைத் தயக்கத்திற்குப் பிற்பாடு, மாணவர்கள் பொதுவாக மிகவும் உயிர்ப்புடையவர்களாக ஆகிவிடுவர். விளையாட்டு ஒரு பக்கத்தில் அழுத்தமில்லாது இத்தகைய பலவித சூழல்களை செய்து காட்ட வழிசெய்யும். அதேவேளை பலவித சூழல்களில் சரியான நடத்தையைப் பயிற்சி பண்ணவும் வழிசெய்யும். மறுகரையில் இது சம்பந்தப்பட்ட உணர்ச்சிகளை குறைவாக்க உதவி பண்ண முடியும்.

# 5.3 கூடாத செயல்களுக்கான நல்ல காரணங்கள்?

**இலக்கு**

*மாணவர்கள் சிறிய காட்சிகளூடாக முரண்பட்ட நடத்தைக்கான காரணங்களை ஆராய்வர். எதிர்மறை நடத்தைக்கு இட்டுச் செல்லும் உணர்ச்சிகளுக்கும் ஆசைகளுக்கும் வழிகோலும் ஓர் உள்ளுணர்வை அவர்கள் வளர்த்தெடுப்பர். அப்படிச்செய்வதன் மூலம் தங்கள் பார்வையையும் பிரதிபலிப்பு ஆற்றல்களையும் பயிற்சிபண்ணுவர்.*

வகுப்பு 4 - 9 | 30 - 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
பிறந்த இடத்து பண்பாட்டிலிருந்து கலைப் பொருள்கள் (படங்கள் அல்லது பொருள்கள்)

**நடைமுறை:**

- மூன்று அல்லது நான்கு பேர் கொண்ட குழுவாக மாணவர் இருப்பர். ஒவ்வொரு குழுவும் ஒன்று அல்லது இரண்டு சிறிய சூழல்கள் பற்றிய விபரிப்புக்களைப் பெறுவர். அதில் ஒருவர் எதிர்மறையான காரியத்தைச் செய்வர். (எ.கா. : ஒரு பிள்ளை தன் கைச்செலவுப் பணத்தை வழங்க மறுத்தால் மற்றப்பிள்ளை அவரை அடிக்க அச்சுறுத்தும்). இடத்து நிலைகள் வயதுக்குப் பொருத்தமாகவும் பிள்ளைகளின் வாழ்விடச் சூழலுக்கு ஏற்றனவாகவும் அமையவேண்டும். இச்சிறு குழுக்கள் இந்த எதிர்மறை நடத்தைக்கான நோக்கங்கள், பின்னணி சூழல்கள் யாவை என்பது பற்றிக் கலந்துரையாடும். இச்சிறு குழுவில் பெறப்படும் முடிவுகள் எழுத்தில் பதிவு செய்யப்படும்.
- தொடர்ச்சியாக ஒவ்வொரு குழுவும் முழு வகுப்புக்கும் தமது கருத்தை அளிக்கை செய்யும், அதனுடன் இந்த எதிர்மறை நடத்தைக்குப் பின்னாலுள்ள காரணங்களை தங்களது மதிப்பீட்டில் உள்ளடக்கி விளக்கமளிப்பர்.
- குழுவில் அல்லது முழு வகுப்பில் நிறைவுக் கலந்துரையாடற்கான மேலதிக கேள்விகளும் சாத்தியங்களும்:
  - நீர் அப்படிப்பட்ட உணர்ச்சிகளை ஆசைகளை முறையே பட்டறிந்துள்ளீரா?
  - அத்தகைய உணர்வுகள் ஏற்படும்போது நீர் என்ன செய்வீர்?
  - இத்தகைய உணர்ச்சிகள் வரும்போது என்ன செய்வீர்? இந்த மாதிரி நடந்து கொள்ளும் ஆட்களை உமக்குத் தெரியுமா?

---

# 5.4 அப்படித்தான் நாங்கள் அதைச்செய்கிறோம்.

**இலக்கு**

*முரண்பாட்டுத் தீர்வுக்கான (உருக்காட்டல் திறன்) தமது நுட்பங்கள் பற்றி மாணவர் எண்ணுவர். அவர்கள் வெவ்வேறு கருத்துக்கள், ஆளுமைகள் மற்றும் நடத்தைக் கோலங்கள் பற்றி விளங்கிக்கொள்ளுதலை வளர்த்துக்கொள்வர். அவர்கள் தங்களுக்குப் பிடித்தமான மற்றும் பொதுவாக பயிற்சி பண்ணப்படும் முரண்பாட்டுத் தீர்வு நுட்பங்கள் பற்றி உருக்காட்டுவர்.*

வகுப்பு 1 - 9 | 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
பல்வேறு முரண்பாடுகள் கொண்ட பட்டியல் அல்லது சிறிய அட்டைகள் (ஆசிரியர் தயார் செய்த), பலகை அல்லது flip chart.

**நடைமுறை:**

- வகுப்பு, மூன்று அல்லது நான்கு மாணவர்கள் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்படும். ஆசிரியர் ஒரு தொடரான சிக்கல்கள் மற்றும் முரண்பாடுகள் (பார்க்கவும் தொடர் 5.1) கொண்ட சிறிய அட்டைகளை (அல்லது ஒரு பட்டியலை) வழங்குவார். இவை தனிப்பட்ட சிக்கல்கள் மற்றும் முரண்பாடுகளாக அல்லது பொதுச் சிக்கல்கள் மற்றும் முரண்பாடுகளாக இருக்க முடியும். ஒவ்வொரு குழுவும் இரு முரண்பாடுகளை (நேரச்சிக்கல் இருப்பின் ஒரு முரண்பாட்டை மட்டும்) ஒன்றாகத் தீர்க்கத் தெரிவுசெய்யும்.
- தாங்கள் தெரிவு செய்த சிக்கல்களுக்கு ஏற்படுத்தக்கூடிய தீர்வுகள் பற்றிய தங்களது கருத்துக்களைக் குழுக்கள் கலந்துரையாடும். அக் கருத்துக்கள் எழுத்திலோ அல்லது ஒரு சுவரொட்டியில் ஏற்படுத்தக்கூடிய தீர்வுகளை விளங்கப்படுத்தும் படமாகவோ பதிவு செய்யப்படும். அவர்கள் அந்தக் குழுக்கள் விரும்பும் முரண்பாட்டுக்கான தீர்வை, நிறத்தால் குறிப்பர் அல்லது கீழே கோடிட்டுக் காட்டுவர்.
- முழு வகுப்பினதும் முரண்பாட்டு தீர்வு பற்றிய எல்லா முன்மொழிவுகளின் அளிக்கை மற்றும் கலந்துரையாடலுடன் இத் தொடர் நிறைவு பெறும்.

# 5.5 பொறுமையாக இருத்தல் – அல்லது புத்திசாலி விட்டு நீங்குகிறார்.

**இலக்கு**

*"என்னைத் தூண்ட நான் அனுமதிக்க மாட்டேன்" என்னும் மகுட வாக்கியத்திற்கு இணங்க மாணவர் முரண்பாட்டில் ஈடுபடுவதில்லை, என சிறிய நடிப்பின் மூலம் கற்றுக்கொள்வர். இரண்டாவது படிமுறையில், "ஒரு குழப்பத்தை என்மீது திணிக்க யாரையும் நான் அனுமதிக்கமாட்டேன்." (தொடர்பாடல் ஆற்றல்) என்னும் மகுட வாசகத்துக்கு இணங்க ஒரு தூண்டப்பட்ட முரண்பாட்டையும் தவிர்க்கப் பழகிக்கொள்வர்.*

வகுப்பு 4 - 6 | 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
சுவர்ப் பலகை அல்லது சுவரொட்டி

**நடைமுறை:**

- ஆசிரியர் குழப்பமான சூழ்நிலைகளைப் பற்றிக் கூறும்படி மாணவரைக் கேட்பார். பின்னர் வகுப்பு தூண்டல்களுக்கு எதிர்வினை ஆற்றும் பல்வேறு வழிகள் பற்றியும், "குழப்பத்துக்கான அழைப்புக்கள்" பற்றியும், அவற்றைத் தவிர்ப்பதற்கு முடியுமான வேறு மதிநுட்பங்கள் பற்றியும் வகுப்பு ஆராயும். ஆசிரியர் முடியுமானவற்றை அட்டைகளில் அல்லது சுவரொட்டியில் பதிவுசெய்கிறார் (எழுத்தில் அல்லது படங்களில்).
- ஆசிரியர் 'பொறுமையாக இரும்' எனும் மதிநுட்பத்துக்கு மிகப் பொருந்தும் வண்ணமான விடைகளைத் தெரிவு செய்வார். அத்தீர்வுகள் நாடகங்களாக நடிக்கப்படும். அப்படிச் செய்யும் போது பின்வரும் நாலு சைகைகள் நடைமுறைப்படுத்தப்படும்: கைகளை குறுக்கே கட்டவும், இரு தோள்களையும் உயர்த்தவும், 'பூவ்' என்று சொல்லவும், திரும்பிச்செல்லவும். அப்பால் எல்லா மாணவரும் இதனை ஒரு இணையுடன் பயிற்சி பண்ணவும் ஆசிரியர் ஒரு கரும்பலகையில் அல்லது சுவரொட்டியில் "பொறுமையாக இரும் – இறுக்கமான தோளைக் காட்டுக" என எழுதுவார்.




- தொடர்ந்த படிமுறையில், ஆசிரியர் சூழ்நிலைகள் பற்றிக் கூறுவர், அவற்றில், இயல்பான அலட்சியப்படுத்தல், முன்னர் குறிப்பிட்டபடி, போதுமானதல்ல. அவர் முன்னர் தொகுக்கப்பட்ட முரண்பாட்டு தீர்வு மதியுரைகளுள் "புத்திசாலி வெளியேறுவர்" என்ற மதிநுட்பத்துக்கு பொருந்தும் விடைகளைத் தெரிவு செய்வார். இது பின்னர் கலந்துரையாடப்பட்டு சிறிய நாடகமாக நடிக்கப்படும். மேலும் மாணவர்கள் ஒப்படை இவ்விரு முன்னூட்டல் தரவுகளையும் பயன்படுத்திப்பார்ப்பர். பின்னர் தொடரும் கற்பித்தல் அலகில் அவர்களின் தொடர்புபட்ட பட்டறிவுகள் கலந்துரையாடப்படும்.


5

# 5.6 எனது முரண்பாட்டு வெப்பமானி

## இலக்கு

*எவ்வகையான முரண்பாட்டு சூழ்நிலைகளுக்கும் அவர்கள் சுயமாகவும் உணர்திறனுடனும் எதிர்வினையாற்றுகின்றனர் என்பதை மாணவர்கள் அறிந்துகொள்வர். மற்றவைகளுடன் ஒப்பிடும்போது, முரண்பாடுகள் அகவயமாகப் பட்டறிவுபெற்று உள்வாங்கப்படுகின்றன என்பதை அவர்கள் அறிந்து கொள்வர். இது சரியோ பிழையோ என்பதல்ல, ஆனால் எப்படி ஒருவர் ஒன்றைப் பட்டுணர்கிறார் என்பதே வேண்டியதாகும்.*

வகுப்பு 4 - 9 | 30 - 45 மணித்துளிகள்



**கருவிகள்:**
வெப்ப அளவு குறிக்கப்பட்ட அட்டைகள் (0°C, 50°C, 100°C)
வாசித்துக்காட்டக்கூடிய சூழ்நிலைகள்.(கீழே பார்க்கவும்)

**நடைமுறை:**

- ஆசிரியர் சிக்கல்களை விளக்குகிறார் (மேலே பார்க்கவும்), மூன்று வெப்பநிலை அட்டைகளை வெப்பமானி வடிவத்தில் நிலத்தில் வைப்பார். 100°C வெப்பநிலை = ஒரு 'சூடான' முரண்பாடு, 50°C = ஒரு நடைபெறக்கூடிய முரண்பாட்டு சூழலைச் சுட்டும். ஆனால் அது இன்னும் ஒரு குறிப்பிடத்தக்கதாக ஆகவில்லை, 0°C என்பது ஒரு முரண்பாடே இல்லை என்பதை அடையாளப்படுத்துகிறது.
- ஆசிரியர் பின்னர் வகுப்புக்கு மாறுபாடான முரண்பாட்டுச் சூழல்களின் விபரிப்புகளுடன் உள்ள அட்டைகளை வாசிப்பார். மாணவர் பின்னர் வெப்பமானி உள்ள இடத்துக்கு நகர்வர், அந்த வெப்பமானி முரண்பாட்டின் பெருக்கத்தின் அகவயமான அளவினைக் குறித்து நிற்கும். ஏன் நாங்கள் அந்த நிலைகளைத் தெரிவுசெய்தோம் என்று சிறிய கூற்றுகளூடாக நியாயப்படுத்துவர். அக்கூற்றுக்களுக்கு பிறர் தமது கருத்துக்களை கூறக்கூடாது. ஒருவர் முரண்பாட்டினை எவ்வாறு பட்டுணர்கிறார், நோக்குகிறார் என்பதை அறிவதே இதன் நோக்கமாகும்.
- அதன் பிறகு, "முரண்பாடு" என்ற சொற்றொடர் கலந்துரையாடப்பட்டு விளக்கப்படும். முடியுமாயின், ஒரு பொதுவான வரைவிலக்கணம் பற்றி எண்ணப்பட்டு வகுப்பு எழுத்தில் ஆவணப்படுத்தும்.

---

## மேலதிக செயற்பாடு: வாசித்துக்காட்டக்கூடிய சூழல்களும், வெப்பநிலை அட்டைகளும்

| | |
|---|---|
| ஒரு மாணவன் மற்றொருவனை பள்ளி வளாகத்தில் தடக்கி விழ வைக்கிறான். | ஒரு மாணவன் ஒரு சக மாணவியை கூடாத பெண் என இழிவுபடுத்துகிறான் |
| ஒரு மாணவன் இன்னொரு மாணவனை அவனுடைய மேலங்கியைத் தராவிடின் அடிப்பேன் என மிரட்டுகிறான். | ஒரு நண்பன் பெற்ற கடனைத் திரும்பத் தரவில்லை. |
| ஒரு மாணவி நண்பர்களை தனக்கு பிடித்த வரிசையில் வரிசைப்படுத்துகிறாள். | ஒரு மாணவி தன் சக மாணவரைப் பார்த்து "உன்னில் துர்நாற்றம் வீசுகிறது" என்று கூறுகிறாள் |
| ஒரு மாணவி தன் பக்கத்து மாணவரின் அலைபேசியைக் கேளாது எடுத்து இடைவேளை நேரம் விளையாடுதல் | தன்னுடன் கற்கும் இளையவரை அடிப்பதிலிருந்து தடுக்க ஒரு மாணவன் மற்ற மாணவனை நிலத்தில் தள்ளுகிறான் |
| நீர் உமது நண்பரோடு ஒரு விளையாட்டை விளையாட விரும்புவீர். ஆனாலும் அவர் புத்தகம் படிக்க விரும்புகிறார். | இரு மாணவர் ஒரு பெண் ஆசிரியை பற்றிக் கலந்துரையாடுகின்றனர் |



# 5.7 சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள் – ஒவ்வொரு சிக்கலுக்கும்

**இலக்கு**

*பிரச்சினை தீர்வுக்காக ஓர் உத்தியை மாணவர் கற்றுக் கொள்வார். முயன்று பெறக்கூடிய திறன்கள் மற்றும் நாட்டங்கள் ஆகியவற்றுடன் சிக்கல் தீர்த்தல் என்பதும் தொடர்பானது என அவர்கள் விளங்கிக் கொள்கின்றனர்.*

வகுப்பு 6 - 9 | 60 மணித்துளிகள்

**கருவிகள்:**
பணித்தாள் "சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள்" முதன்மை நகல் (அடுத்த பக்கத்தில்)

**நடைமுறை:**

- ஆசிரியர் ஓர் உண்மையான முரண்பாட்டுச் சூழலை விபரிப்பார். (எடுத்துக்காட்டு கீழே) அந்தச் சூழ்நிலை ஒரு நாடகமாக நடிக்கப்படும். எப்படி அப்பிரச்சினை தீர்க்கப்படும் என மாணவர் கலந்துரையாடுவர். "சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள்" என்னும் மாதிரி உருவில் பட்டியல் இடப்பட்ட பகுதிப் படிமுறைகளை ஏற்கனவே அவர்கள் விபரிக்கின்றனர் என்று கொள்ளலாம்.
- "சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள்" எனும் பணித்தாளைப் பெற்று மாணவர் வாசிப்பர். பின்னர் தங்கள் பள்ளித்தோழர் குழுவில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே ஏற்படும் முரண்பாடுகள் பற்றிய எடுத்துக்காட்டுப் பட்டியல் ஒன்றை அவர்கள் தொகுப்பர். எடுத்துக்காட்டுகள்:
  - ஒரு சிறுமி / பையன் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போக விரும்புகிறாள் / ன். பெற்றோர் அதனை எதிர்க்கின்றனர், பிள்ளை படிக்கவேண்டுமெனக் கூறுவர். எல்லாவற்றுக்கும் மேலாக பிள்ளை அந்த நிறுவனத்துக்குப் போகக்கூடாது.
  - ஒரு மாணவன் தன் வகுப்புத் தோழனை / தோழியை அவனது / அவளது உச்சரிப்புக் குறைபாட்டை அல்லது பேச்சுத் தடையை நகையாடுகிறான் / ள்.
  - ஒரு ஆண் / பெண் இன்னொரு ஆண் / பெண் மாணவரை சந்திக்கிறார், ஆனால் பெற்றோர் அவர் பிறப்புக் காரணமாக (எ.கா. அவர் வேறொரு இனத்தைச் சார்ந்தவர் அல்லது வேறு நாட்டிலிருந்து வந்தவர் என்பதால்) எதிர்க்கின்றனர்.
  - இடைவேளையின் போது சில இளையவர் குறிப்பிட்ட இசையைக் கேட்க விரும்புகின்றனர். ஆனால் மற்றவர் அதற்கு எதிராக உள்ளனர். ஏனெனில் அவர்கள் வேறு ஒரு வகையான இசையைக் கேட்க விரும்புகின்றனர்.
  - பலர் ஒரு குறிப்பிட்ட மாணவரின் அருகில் இருக்க மறுக்கின்றனர். ஏனெனில் அவர் பிறப்பு, சமயம், தேசிய இனம் தொடர்பில் பிழையான எண்ணம் காரணமாக.
- ஒரு முரண்பாடு தெரிவு செய்யப்படும். அது மிகவும் விரிவாக ஆராயப்படும். (மாற்று: 2 – 3 குழுக்களுக்காக 2 – 3 முரண்பாடுகள்)
- முதல் படிமுறையில், 6 படிமுறை திட்டத்தை தொடர்ந்து முரண்பாட்டுக்கான பகுதியினர் (எ.கா. எல்லா "பெற்றோர்", ஒரு வகை இசையைக் கேட்க விரும்பும் இளையோர், அந்த இடத்தில் இருக்க விரும்பாத சிறுவர் ∴ சிறுமியர்.) தாம் வேறாக தம் நிலைப்பாட்டைக் கலந்துரையாடக் கூடுகின்றனர். பின்னர் அதே குழுவில் உள்ள எதிர்த் தரப்பினருடன் 6 படிமுறைத் திட்டப்படி பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவர். ஆசிரியர் 15 – 20 மணித்துளிகளின் பின்னர் பேச்சுவார்த்தைகளை நிறுத்துகிறார். மாணவர்கள் தமது வகுப்பறைக்குத் திரும்பி அங்கு தமது பட்டறிவுகளை வகுப்பு முழுவதுமாகப் பரிமாறுவர்.
- குறிப்பு: இக்குழுக்கள் ஓர் இடையீட்டாளரை தெரிவு செய்வது என்பது விரும்பத்தக்கது, இவர் 6 படிமுறை திட்டத்தினூடாக அவர்களை வழிநடத்துவார். இச் செயற்பாடு பயிற்சியினூடாக இரண்டாம் சுற்றிலும் நடைமுறைப்படுத்தலாம்.

---

- "சிக்கலைத் தீர்க்க 6 படிமுறைகள்" பணித்தாளின் முதன்மை நகல் அடுத்த பக்கத்தில்.

5

ப.தா.

# 6 படிமுறைகளில் சிக்கலைத் தீர்த்தல்.

மாணவர்களுக்கான பணித்தாள்

| | | |
|---|---|---|
| **1.** படிமுறை: | **தேவைகளைத் தெளிவாக்குதல்.** | |
| | உமது தேவை என்ன?<br>உமக்கு சரியாக என்ன வேண்டும்? | *இம்முரண்பாட்டுக்கு உரிய ஒவ்வொரு பகுதியும் மற்றவர்களில் குற்றம் சாட்டாமல் அல்லது அவர்களுக்கு எதிராகக் குற்றங்கள் சுமத்தாமல் இவ்வினாவுக்கு மறுமொழி கூறவேண்டும்.* |
| **2.** படிமுறை: | **சிக்கலைச் சரியாக விபரிக்குக.** | |
| | இந்த பிரச்சினையில் என்ன சிக்கல் என்று நீர் நினைக்கிறீர்? | *எல்லா மாணவரும் தங்கள் பார்வையிலிருந்து சிக்கலை விபரிக்க முடியும். எதிராளிகள் மற்றைய குழுவினரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.* |
| **3.** படிமுறை: | **வெவ்வேறு தீர்வுகளைத் தேடல்** | |
| | ஏற்படக்கூடிய ஏனைய தீர்வுகள் எப்படி இருக்கும்? | *எல்லா மாணவர்களும் மறுமொழிப் பங்களிப்புச் செய்யல-ாம். இவை எந்த உரையோ மதிப்பீடோ இல்லாமல் எழுத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.* |
| **4.** படிமுறை: | **தீர்வுகளை மதிப்பிடல்** | |
| | பல்வகைத் தீர்வுகளுடன் நீர் எவ்வாறு மனநிறைவு அடைவீர்? | *முரண்பாடுகளுக்கான ஒவ்வொரு பகுதியும் தீர்வுக்கான பல்வேறு பரிந்துரைகளையும் மதிப்பீடு செய்து எவற்றை ஏற்றுக்கொள்ளலாம், ஏன்? எவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது, ஏன்? என்பதை விளக்குவர்.* |
| **5.** படிமுறை: | **எந்தத் தீர்வு மிகச்சிறந்தது என்பதைத் தீர்மானிக்குக.** | |
| | இத்தீர்வை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா?<br>சிக்கல் தீர்க்கப்பட்டதா? | *இரு பகுதியினரும் தீர்வை ஏற்றுக்கொள்கின்றாரா? என்பதில் தெளிவாயிருக்க வேண்டும். தீர்வுக்கான அவர்களது முயற்சி பாராட்டப்பட வேண்டும்.* |
| **6.** படிமுறை: | **தீர்வு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதைப் பகுப்பாய்வு செய்க.** | |
| | சிக்கல் தீர்ந்துவிட்டதா என உறுதிப்படுத்த தற்போதுள்ள சூழ்நிலை பற்றி இன்னொரு முறை பேசுவோம் | *தீர்வை மதிப்பீடு செய்ய ஒரு திட்டம் வகுக்கப்படும். முரண்பாட்டின் தன்மையைப் பொறுத்து, முரண்பாட்டுக்குள்ளாகிய குழுக்களின் வயதைப் பொறுத்து ஒரு சில நிமிடங்களில் அல்லது மணித்தியாலங்களில் அல்லது அடுத்த பாடம் தொடங்கும் வரை ஒரு மதிப்பீடு நடைமுறைப்படுத்த முடியும்.* |

# அலகு **6**:
# சனநாயகம் மற்றும் குழந்தைகள் உரிமைகள்: நாங்களும் தலையிடுவோம்

## அறிமுகம்

நவீன சமூகத்தில் மேம்பாடு ஓர் இன்றியமையாத வினாவை எழுப்புகின்றது. விடுதலைக்கான உரிமை இயல்பாகவே பன்முக மற்றும் திறந்த, சமயச் சார்பற்ற சமூகங்களின் மேம்பாட்டுக்குத் துணைசெய்கிறது என்னும் உண்மை பற்றியதாகும். இந்த வளர்ச்சி ஒரு தனியாள் மயமாகிய வாழ்வுக் கோலத்தையே வளர்த்தெடுக்கின்றது. கேள்வி: எல்லாக் குடிமக்களையும் இனங்கண்டு அடிப்படை விழுமியங்கள் சார்ந்து ஒரு குறைந்தபட்சமான இணக்கமான முடிவை எப்படி இந்தப் பன்மைத்துவ சமூகங்கள் கண்டுகொள்ளும்? அடிப்படைக் கருத்தொருமைப்பாடு இல்லாவிட்டால் சமூகம் என்பது அழிந்து எந்தவித பிணக்கும் உடன்பாடும் இல்லாத சிதறிப்போன தனியாட்களைக் கொண்டதாகும்.

சனநாயகத்தின் அடிப்படைகள் மற்றும் மனித உரிமைகள், குழந்தைகள் உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவை எல்லா நாடுகளிலும் நடைமுறையில் உள்ளன. குடிமக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்துரையாடலில் ஈடுபட்டு இருப்பதை அவை நிச்சயப்படுத்துகின்றன. மேலும் அவை உலகளாவிய முறையில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு அமைப்புகளை நவீனப்படுத்த அதிகம் பங்களித்துள்ளன. ஆயினும் ஜனநாயகத்தின் அடிப்படைகள் மனித உரிமைகள் குழந்தைகள் உரிமைகள் என்பன சும்மா கிடைத்தவையாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒவ்வொரு தலைமுறையும் அவற்றின் வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டும். மீளவும் அது தொடர்பாகப் பேச்சுவார்த்தை செய்யப்பட்டு, உடன்பாடு எட்டப்பட்டு, அதற்காகப் பேசப்பட்டு, எதிர்காலத்தில் இந்த அடிப்படையுடன் இணைக்கப்பட்ட கொள்கைகளும் சட்டங்களும் பின்பற்றப்படும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

பிள்ளைகளின் உரிமைகளுக்கு அடிப்படையாக உள்ள மனித உரிமைகள் ஒரு நீண்ட பாரம்பரியம் கொண்டது. முன்னோடிகளும், இணையொத்தவர்களும், பெரிய உலகச் சமயங்களிலும் பல தத்துவார்த்த ஓட்டங்களிலும் இதைக் காணமுடியும். நவீன காலத்தில் மனித உரிமைகள் என்பது முதலில் ஒளியூட்டும் காலத்திலேயே வரையறை செய்யப்பட்டது. அது பிரெஞ்சு, அமெரிக்கப் புரட்சிகளுக்கு உணர்வூட்டின. இன்று அவை எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத நவீன சனநாயகத்தின் அரசியலமைப்புச் சட்டங்களில் நங்கூரமிடப்பட்டுள்ளன. குறிப்பாக மனித உரிமைகள் தொடக்க காலத்திலிருந்து முதன்மை பெற்றிருந்தன. ஏனெனில் சமூகத்தினுள் வலுவற்ற உறுப்பினர்களை மிகவும் வலுவுள்ளவர்களிடமிருந்து காப்பதற்கு ஆகும். இது ஏன் சிறுவர் உரிமைகள் மிகவும் இன்றியமையாதன என்பதற்கும் ஆகும்: நிறைவேற்று அதிகாரம் கொண்ட வலுவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறுபான்மையினர் சட்டநிலை மிகவும் வலுவற்ற குழுக்களைச் சேர்ந்தவர்களாக உள்ளார்கள்.

பின்வரும் கற்பித்தல் மாதிரிகள் ஆசிரியர்களுக்கும் கற்போருக்கும் பள்ளிகளில் ஒவ்வொரு நாள் வாழ்விலும் வாழும் சனநாயகத்தின் பாதையை கூட்டாக தொடரும் சாத்தியங்களை வழங்கவும் சிறுவர் உரிமைகளை நேரிடையாகவே கண்டுபிடிக்கவும் வழிகோலுகின்றன.

---

குறிப்புகள்:

பின்வரும் ஜேர்மன் பதிப்பு நூலிலிருந்து கற்பித்தல் மாதிரிகள் பெறப்பட்டன: Gollob, Rolf; Peter Krapf; Wiltrud Weidinger (editors) (2008): Teaching democracy. A collection of models for democratic citizenship and human rights education. Council of Europe Publishing.

# 6.1 ஒரு பூங்கொத்து

## இலக்கு

*இந்தப் பயிற்சி குழுக்களிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதுடன் தனது உறுப்பினர்களின் தன்பெறுமதியையும் வளர்க்கும். மாணவர்கள் பட்டறிவு பெறுவதுடன் மற்றும் தங்கள் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தனித்துவமானவர் என்றும், ஒரே வேளையிலே குழுவின் முழுமையான வலிமைக்குப் பக்கத்துணை வழங்குவார். அத்துடன் அதனைப் பாராட்டவும் கற்றுக் கொள்கிறார்.*

வகுப்பு 1 - 3


30 - 45 மணித்துளிகள்



**கருவிகள்:**
ஒவ்வொரு பிள்ளையின் சிறிய படவுரு (4X4 செ.மீ) (முடியுமாயின் கீறிய உரு) மஞ்சள், ஆரஞ்சு நிறத்தாள் 6 செ.மீ வட்டமாக வெட்டியது, அது பூவின் நடுப்பகுதியை குறிப்பிடும். வேறு வண்ணத்தாளில் வெட்டப்பட்ட இதழ்கள், நிறப்பென்சில், ஒரு பெரியதாள்(A1), ஒட்டுவதற்கு பசை.

**நடைமுறை:**

- மாணவர் ஒரு வட்ட துண்டுத் தாளைப் பெற்றுக் கொள்வர், அதன் மேல் தம் உருவை ஒட்டிக்கொள்வர்.
- ஒவ்வொரு மாணவனும் ∴ மாணவியும் ஆறு இதழ்களை எடுத்து அதன் மேல் நல்ல விடயங்களை சொற்களில் எழுதுவர்.
  - ஆசிரியர் தன்னைப்பற்றி சொல்லக்கூடியதாக தான் கருதும் விடயம் (எ.கா. சுறுசுறுப்பு அல்லது விளையாட்டில் ஆர்வம்)
  - ஓர் ஆண் குடும்ப உறுப்பினர் தன்னைப் பற்றிக் கூறக்கூடிய விடயம்.
  - ஒரு பெண் குடும்ப உறுப்பினர் தன்னைப் பற்றிக் கூறக்கூடிய விடயம்.
  - அவன் / ள் தன்னைப் பற்றிக் கூறக்கூடிய விடயம்.
  - ஒரு நண்பர் தன்னைப் பற்றிக் கூறக்கூடிய விடயம்.
  - வகுப்பில், பள்ளியில் அல்லது சமூகத்தில் உள்ள ஒருவர் தன்னைப் பற்றிக் கூறக்கூடிய விடயம்.
- மாணவர்கள் வட்டத்தின் நடுவில் உள்ள படத்தைச் சுற்றி இதழ்களை ஒழுங்கமைத்து பூக்களை உருவாக்குவர். அவற்றை பெரிய தாளில் ஒட்டுவர்.




- ஒவ்வொரு பூக்களும் பெரியதாளில் (A1) ஒழுங்கமைக்கப்பட்டு ஒட்டப்படும்.
- ஒவ்வொரு பூவின் தலைக்கும் மாணவர் ஒரு காம்பையும் இலையையும் வரைந்து ஓர் அழகான பூங்கொத்தை உருவாக்குவர். ஒரு றிபன் துண்டுடன் பூங்கொத்து மிகச்சிறந்த காட்சி அளிக்கும்.
- வகுப்பு முழுமையாக வட்டவடிவில் அமர்ந்து பூங்கொத்தைப் பற்றிக் குறிப்புச் சொல்வர். இந்த நடைமுறை பல்வகைத் தன்மை குறியீடு பற்றி விளக்கும்: பூங்கொத்திலிருந்து ஒரு பூவேனும் இழக்கப்பட்டால் (சமூகம்) அழகற்றுப்போகும். ஒவ்வொரு பூவும் வேறுபட்டது, பூங்கொத்தின் பல்வகைத்தன்மைக்கு ஒரு தனித்துவமான பாணியில் பங்களிப்புச் செய்யும் (தனியான தன்மை, மனித மாண்பு) ஒவ்வொரு பூவும் / தன்னுருவும் ஒரேமாதிரி முக்கியத்துவம் வாய்ந்தது. (சம உரிமை)

# 6.2 எல்லோரும் வேறுபட்டவர் – எல்லோரும் ஒரேமாதிரி

**இலக்கு**

*மாணவர் ஒரு குழுவில் ஆளையாள் தெரிந்துகொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் நன்கு அறிந்துகொள்கின்றனர். அவர்கள் முன்னர் எப்போதும் அறிந்துகொள்ளாத பொதுமைப் பண்புகளைக் கண்டுபிடிப்பர்.*

வகுப்பு 2 - 6 | 30 - 45 மணித்துளிகள்



**கருவிகள்:**
வெண்கட்டித் துண்டு
அல்லது நூல்

**நடைமுறை:**

- வகுப்பறை (அல்லது ஒரு பகுதி, மேசைகள் கதிரைகள் முதலியன இல்லாது) (வெண்கட்டியால் அல்லது நூலினால்) இரண்டாகப் பிரிக்கப்படும். தொடக்கத்தில், பிரிக்கப்பட்ட கோட்டின் ஒரு பகுதியில் முழு வகுப்பும் நின்று கொண்டிருக்கும்.
- ஆசிரியர் ஒன்றன்பின் ஒன்றாக ஒரு தொடரான பண்புகளை (கீழே பார்க்கவும்) எண்பிக்கிறார். ஏதாவது ஒரு பண்பு ஒரு மாணவர்க்கு ஏற்புடையதாக இருந்தால் உடனே அவன் / ள் மற்றைய பக்கத்துக்கு மாறுவான் ∴ ள்.
- பட்டியல் அகவைப் பொருத்தமுடையதாகவும், வகுப்பு, பொருத்தமானதாகவும் கொண்டமைய வேண்டும்.
- பின்வரும் பண்புகள் எடுத்துக்காட்டுகள்:
- யார், யார்?
  - ஜீன்ஸ் போட்டவர்கள்.
  - தங்கள் தாய் மொழியில் சிறப்பான ஒரு பேச்சுமொழி பேசுபவர்கள்
  - வகுப்பறையில் சராசரி மாணவர்களின் வயதிலிருந்து மூத்தோர் அல்லது இளையோர்
  - பெற்றோர்களின் பிறப்பு நாட்டில் பிறந்தவர்கள்.
  - அந்த நாட்டில் தமது பாடசாலைக் கல்வியின் ஒரு பகுதியை நிறைவேற்றியவர்கள்.
  - ஒரு பத்திரிகையை ஒழுங்காக வாசிப்பவர்
  - ஏற்கனவே பாகுபாட்டுக்கு ஆளாகியவர்கள்.
  - உடல் மற்றும் உளக் குறைபாடு உள்ளவர்களுடன் நட்புறவாக இருப்பவர்கள்.
  - இன்னொரு குழுவினருக்கு எதிரான பாகுபாடுடையவர்கள்.
- மாணவர்கள் பின்வரும் வினாக்களை விவாதிப்பர்.
  - தமது பொதுமைப்பண்புகளைக் கொண்டிராத ஒரு குழுவின் மாணவனை / மாணவியை யாராவது சந்தித்தார்களா?
  - ஒரு பெரிய குழுவைச் சேர்ந்தவர் என்பதால் உள்ள உணர்வு எப்படி?
  - தனிமையாக அல்லது முற்றாகத் தனிமையாக இருப்பதால் என்ன உணர்வு ஏற்படுகிறது?
  - உங்கள் வாழ்வில், இவை போன்ற பட்டுணர்வுகளை ஏற்கனவே எங்கு பெற்றுள்ளீர்?
    அ) பெரும்பான்மையைச் சேர்ந்தவராக.
    ஆ) தனிமையாக இருக்கும் உணர்வு மற்றும் ஒன்றுடனும் சேராத தன்மை

---

**விரிவாக்கம்**

இரண்டாவது மூன்றாவது சுற்றில், மாணவர்கள் முன்னரேயே பண்புகளைத் தொகுத்து வைத்திருக்கலாம். எனினும் ஆசிரியர் உணர்ச்சியுள்ள அல்லது பாகுபாடுள்ளவற்றை நிராகரிப்பதற்கான உரிமையுடையவராக இருக்க வேண்டும்.

# 6.3 நான் ஒரு மந்திரவாதியானால்

**இலக்கு**

*ஆக்க மற்றும் கற்பனை வழிகளில் காட்சிகளைக் காண மாணவர் ஊக்கப்படுத்தப்படுவர். மனக்காட்சிகள் இல்லாதவர்கள் எப்போதும் இயக்கமற்று ஒரே நிலையில் இருப்பர் என்பதை மாணவர் விளங்கிக்கொள்ள வேண்டும்.*


வகுப்பு 2 - 6

30 மணித்துளிகள்

**கருவிகள்:**
பிளிப் சார்ட்டில் வாக்கியதொடக்கங்கள் (அடுத்த பக்கம் பார்க்கவும்), முடியுமாயின் பணித்தாள் நகலாக ஆக்கலாம்

**நடைமுறை:**

- ஒரு மந்திரவாதி போல மாணவர் தம்மை நினைக்கவேண்டும். ஒரு விரிவான மனதை ஈர்க்கும் அறிமுகம், குறிப்பாக இளம் மாணவர்களுக்கு இன்றியமையாததும், தூண்டக்கூடியதுமாகும்.
- மாணவர் எழுதும் பலகை அல்லது பிளிப் சார்ட்டிலிருந்து தொடக்க வசனங்களை வாசிப்பர்: "நான் பெரிய மந்திரவாதியானால், போரினால் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் ஒருபோதும் துன்பப்பட மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவேன்." அப்படி நடப்பதற்கு, ...
  - நான் ... என்று தீர்மானிப்பேன்.
  - நான் ... என்பதைத் தடைசெய்வேன்.
  - நான் ... என்பதை உறுதி செய்வேன்.
  - நான் ... நிறுத்துவேன்
  - நான் தொடர்ந்து ...
  - நான் ... என்பதை மறவேன்
- தனியாகவோ, சோடியாகவோ மாணவர்கள் ஒன்று அல்லது பல வாக்கியங்களை எழுதி முடிப்பர்.
- பாடத்தை எளிதாக்குவதற்கு அறிவுறுத்தல்களும் தொடக்க வசனங்களும் மாணவர்களுக்கு பணித்தாள்களாகக் கொடுக்கமுடியும். (வாக்கியங்களை முடிப்பதற்குப் போதுமான இடம் வைத்துக் கொண்டு) தொடர்ந்து மீதியான வாக்கியங்களை முடிக்கும் விடயங்களை பிறிதொரு தொடரில் கொடுக்கலாம், அல்லது வீட்டு வேலையாக வழங்கலாம்.
- மறுமொழிகள் பின்னர் வட்டமாக இருக்கும் முழு வகுப்பிலும் வாசிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு கலந்துரையாடப்படும். முடியுமாயின், தனியாள் பங்களிப்பான பின்னூட்டல் கேள்விகள் குறிப்புகளுக்குப் பின்னர் நேரம் ஒதுக்கப்படவேண்டும்.
- இறுதிச்சுற்று / சுருக்கம்: பல அல்லது பெருந்தொகை மாணவர்களால் எழுப்பப்பட்ட கருத்துக்கள் உள்ளனவா? பெருந்தொகை வேண்டப்பட்ட விடயங்களில் உண்மையாக நாம் என்ன செய்யலாம்?



**மாற்றுகள்:**

- "நான் ஒரு கட்டடக் கலைஞனானால்..." தங்கள் பள்ளி அல்லது நகரம் எப்படி இருக்கும் அல்லது இருக்கவேண்டும் என மாணவர்கள் கற்பனை பண்ணுவர்.
- "நான் ஒரு சனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதியானால் (வேறு அரச தலைவர், சனாதிபதி, நீதியமைச்சர் முதலியன) நான்..."

# 6.4 பலூன் பறப்பு

இலக்கு

*மாணவர் மனித உரிமைகளின் இன்றியமையாமையினையும் மற்றும் அவற்றின் உலகத்தன்மை பற்றியும் அறிந்திடுவர். சில மனித உரிமைகள் மறைமுகமாக மற்றவற்றுள் உள்ளிளுக்கப்பட்டுள்ளன, ஆனால் அவை தவிர்க்கமுடியாதபடி சரிநிகரானவை என்பதை அவர்கள் விளங்கிக்கொள்வர். மனித உரிமைகள் மீறப்பட முடியாதவை என்பது தெளிவாகின்றது, அவற்றை தன்னிச்சையாக நிறுத்தி வைக்க இசைவு வழங்கப்பட முடியாது.*

வகுப்பு 4 - 6 | 45 மணித்துளிகள்


**கருவிகள்:**
பென்சில், தாள்கள், பெரிய தாள்கள், மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் பற்றிய பட்டியல். (தெரிவுக்கு அடுத்தபக்கம் பார்க்கவும்)

**குறிப்புகள்:**

- இப்போதைய பயிற்சி மனித உரிமைகள் பற்றிய ஒரு அறிவுறுத்தல் தொடரின் அறிமுகமாக அல்லது நடைமுறைப் பயன்பாட்டுக்கும் ஆழமான விளக்கத்துக்கும் அத்தொடரின் முடிவில் நடைமுறைப்படுத்தப்படும்.
- ஒரு பறக்கும் பரசூட் பலூனின் நிறை அல்லது சுற்றளவை முறையே கீழே குறிப்பிடப்பட்ட, மனித உரிமைகளைக் கொண்டிருக்கிறது. இன்னொரு வகை மனித உரிமைகளைத் தேர்ந்தெடுப்பதும் முடியுமானதாகும் (இணையத்தின் பல்வேறு வலைத்தளத்தில் முழுமையான பட்டியலைப் பார்க்க)

**நடைமுறை:**

- வகுப்பு ஐந்து அல்லது ஆறு மாணவர்கள் கொண்ட குழுக்களாக அமைகின்றது. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்கு மேலே (எ.கா: பாடசாலைக்கு மேலே அல்லது பிறந்தநாட்டின் தலைநகருக்கு மேலே) ஒரு பறக்கும் பரசூட் பலூன் ஒன்றை கீறுதற்கான அறிவுறுத்தலுடன் ஒவ்வொரு குழுவும் ஒரு சுவரொட்டியையும், ஊறல் பேனாக்களையும் பெற்றுக் கொள்ளும். பலூனின் கீழே தொங்கும் மணற்பைகள் 10 மனித உரிமைகளைக் குறியீடுசெய்யும். அவை சுவரொட்டியில் ஒட்டப்படும். (அடுத்த பக்கத்தில் சுவரொட்டியைப் பார்க்க)



- இப்போது விளையாட்டைத் தொடங்கலாம். மனித உரிமைகள் பலூனில் தாம் பறப்பதாக மாணவர்கள் கற்பனை பண்ணவேண்டும். பலூன் கீழே இறங்கத் தொடங்கும்போது மோதலைத் தவிப்பதற்காக பயணிகள் இரண்டு அல்லது மூன்று பைகளைக் கழற்றிவிடவேண்டும்.
- மாணவர்கள் பைகளால் குறிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளை முன்னுரிமைப் படுத்தவேண்டும் முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்கு பின்வரும் அடிப்படைகள் கட்டாயமாகும்: ஓர் உரிமை குறிப்பிட்ட இன்னொரு உரிமையில் மறைமுகமாக உள்ளடக்கப்பட்டுள்ளதா? ஒரு குறிப்பிட்ட உரிமை சனநாயகத்திற்கு அல்லது எமது தனியான தேவைகளுக்கு வேண்டியதா?
- எப்படி எனினும் பலூன் தொடர்ந்து இறங்குகிறது. மேலதிகமாக இரண்டு அல்லது மூன்று பைகள், அல்லது மனித உரிமைகள் கழற்றிவிடப்படும். நான்கு அல்லது ஐந்து பைகளை இறக்கிய பிற்பாடு பலூன் பாதுகாப்புடன் தரையில் இறங்கும்.

- முழு வகுப்பிற்குள் பிரதிபலித்தல், ஒவ்வொரு குழுவும் தமது முன்னுரிமைகள் பற்றிய பட்டியலையும், அவற்றுட் சில பற்றிய குறிப்புகளையும் வழங்கும். தொடர்ந்து பட்டியல்கள் ஒப்பிடப்படலாம். என்ன வகையான வித்தியாசங்கள் உண்டு? குழுநிலை வேலை பற்றி தொடர்ந்து ஒரு பின்னூட்டல் கலந்துரையாடல் நடக்கவேண்டும். ஒரு முடிவெடுப்பது குறிப்பாக எங்கு கடினமாயுள்ளது, ஏன்? மற்றவற்றிலிருந்து சில மனித உரிமைகளை முன்னுரிமைப்படுத்துவதில் எங்கே இடர் உண்டு?
- ஒரு நடைமுறை அரசியல் அமைப்பில் இந்த உரிமைகளின் மீறல் என்பது சனநாயகத்தைப் பெரிதும் பாதிக்கும். மனித உரிமைகள் இயல்பான உரிமைகள். ஆகவே மீறப்பட முடியாதவை. இந்த வகையில் பலூன் பறப்பு ஒரு சூழலின் நாடகப்படுத்தல் என நம்பப்படுகின்றது, அது ஒருபோதும் நடைபெறாது என எதிர்பார்க்கப்படுகிறது. முடிவாக, இதை இன்னொருமுறை தெளிவாக்க வேண்டும்.
- இவற்றில் எந்த உரிமைகள் பிறந்த நாட்டு மற்றும் வாழும் நாட்டு அரசியலமைப்புச் சட்டத்தில் காணப்படுகின்றன, அவை எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன என்பதை பகுப்பாய்வு செய்வதனூடாக இத்தொடர் மேல்மட்டத்தில் தொடரப்பட முடியும்.

---

## மனித உரிமைகள்

| |
|---|
| → வாக்குரிமை |
| → சொத்துரிமை |
| → ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை |
| → தூய சுற்றுச் சூழலுக்கான உரிமை |
| → ஆரோக்கிய உணவும், தூய்மையான நீரும் பெறுவதற்கான உரிமை |
| → கல்வி உரிமை |
| → சிந்தனை, மனச்சாட்சி, சமயம் என்பவற்றுக்கான உரிமை |
| → எல்லாக் குடிமக்களுக்குமான உடை, மற்றும் வீட்டு உரிமை |
| → தனிமனித உரிமை |
| → தன்னிலையாக இயங்கும் உரிமை |

# 6.5 வகுப்பறையில் உரிமைகள், பொறுப்புக்கள், சட்டங்கள்

**இலக்கு**

*மாணவர் சனநாயக மற்றும் கருத்தொருமித்த முறையில் சட்டங்களை நிறுவுதல் மற்றும் உடன்பட்டு வேலை செய்தல் என்னும் முறையைக் கற்றுக் கொள்வர். அவர்கள் தங்களது பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கன மற்றும் தங்களது கட்டளையில் இணைஉறுதி உள்ளாகும் வாய்ப்புண்டு என்னும் பட்டறிவைப் பெறுகின்றனர். அவர்களின் தன்னுயர்வெண்ண மற்றும் தன்னாட்சி உணர்வு வலுப்படுத்தப்படுகின்றது மற்றும் வகுப்பறைச் சமூகத்தில் செயற்பாட்டுப் பங்களிப்பினை பட்டுணர்கின்றனர்.*

வகுப்ப் 4 - 6

45 மணித்துளிகள்

**கருவிகள்:**
பெரிய பணித்தாள்கள்
சம அளவில் பிரிக்கப்பட்டது
(குறைந்தது A3 அளவு.)

**நடைமுறை:**

- வகுப்பு 4 – 5 மாணவர்கள் கொண்ட குழுக்களாக பிரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு குழுவும் ஒரு பேச்சாளரைத் தெரிவு செய்யும்.
- ஒவ்வொரு குழுவும் ஒரு தாள் துண்டை (A2 அல்லது A3) பெற்றுக்கொள்ளும். அதை அவர்கள் மூன்று ஒரேயளவான பிரிவுகளாகப் பிரிப்பர். மேற்பகுதியில், மாணவர்கள் கணிப்பில் ஆசிரியர் உள்ளிட்ட எல்லா மாணவருக்கும் பொருந்தக்கூடிய மாணவர் உரிமைகள் பட்டியலிடப்படும். ஒவ்வொரு முன்மொழிவுக்கும் ஓர் இலக்கம் வழங்கப்படும்.

| உரிமைகள்: | பொறுப்பு: | சட்டங்கள்: |
|---|---|---|
| | | |

- மாணவர் பின்னர் தங்கள் வேலைகளை அடுத்த குழுவுக்கு வழங்குவர்.
- ஒவ்வொரு குழுவும் முதற்குழுவின் பட்டியலைக் கலந்துரையாடி பின்வரும் வினாக்களுக்கு விடைகள் பற்றி சிந்திப்பர்: முதல் நிரலில் குறிக்கப்பட்ட உரிமைகள் உண்மையில் மதிக்கப்பட எப்பொறுப்புக்கள் அல்லது கடமைகளை நாம் வைத்திருக்கின்றோம்? நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் எப்படி எம்மை நடத்த வேண்டும்? எடுத்துக்காட்டு: "ஒவ்வொரு ஆளும் தான் கேட்கப்பட வேண்டும் என்னும் உரிமை உடையவர்".... "ஆகவே மற்றவரின் கருத்தைக் கேட்பதற்கு எமக்கு ஒரு பொறுப்பு அல்லது கடமை உண்டு."
- நடுப்பகுதி நிரலில் அல்லது பரப்பில் தொடர்புள்ள பொறுப்புக்களை அல்லது கடமைகளை எழுதுவர். ஒவ்வொன்றிலும் அவர்கள் மேலிருந்து கீழ் பதிவுக்குரிய எண்ணினை பட்டியலிடுவர்.
- ஆசிரியரின் உள்ளீடு: பொறுப்புகள் சட்டங்களை வேண்டிநிற்பன. இது ஏற்கனவே அறிந்த வகுப்பறைச் சட்டங்கள் பள்ளி ஒழுங்குகள் என்பவற்றால் விளங்கப்படுத்தலாம். இவை நேர்க்கணிய முறையில் உருவமைக்கப்பட வேண்டும் ("இதைச் செய்யாதே" என்று சொல்வதைவிட "இதைச் செய்" என்று சொல்லலாம்.) அவை குறித்த ஒன்றாக மற்றும் விரும்பப்பட்ட நடத்தையை விவரிப்பதாக இருக்கவேண்டும். கேட்பதற்கான உரிமை பற்றிய எடுத்துக்காட்டு: எமக்குக் கேட்கும் பொறுப்பு உண்டு ஒரு சட்டமாக இது வாசிக்கப்படும். மற்றவர் பேசும் போது நீ பேசாதிரு.
- மாணவர் தமது தாளை மற்றைய குழுவுக்குக் கொடுப்பர். குழு முந்திய இரு குழுக்களின் எல்லாப் பதிவுகளையும் படித்து ஆகக் கூடிய ஐந்து சட்டங்களை ஏற்றுக்கொள்ளும். இவை மூன்றாவது நிரலில் எழுதப்படும்.
- இறுதியாக குழுவின் பேச்சாளர்கள் முழு வகுப்புக்கும் தாம் ஏற்றுக் கொண்ட சட்டங்கள் பற்றி விளக்குவர். ஒப்பிட்டுப் பார்த்து ஏதாவது மீளச்சொல்லல் அல்லது சட்டங்களின் மிதமிஞ்சும் தன்மைகள் உண்டா என மாணவர் கலந்துரையாடுவர். பின்னர் அவர்கள் சனநாயக முறையில் எவை நீக்கப்பட வேண்டும், எவை சுருக்கப்படவேண்டும் என ஏற்றுக்கொள்வர்.

- சட்டங்கள் மீதான வாக்கெடுப்பு: ஒவ்வொரு மாணவரும் நான்கு அடையாளத் துண்டுகள் அல்லது ஒட்டக்கூடிய புள்ளித் துண்டுகள் பெறுவர். அவர் எண்ணப்படி வகுப்புக்கு எவை பொருத்தமோ அவற்றைச் சட்டங்களுடன் சேர்த்துக்கொள்ள முடியும். மாணவர் தாம் விரும்பியபடி தமது புள்ளிகளைப் போட்டுக்கொள்ள முடியும். (எல்லாப் புள்ளிகளையும் ஒரு சட்டத்திற்கு அல்லது தனித்தனியாக 2, 3 அல்லது 4 சட்டங்களுக்குப் போட்டுக்கொள்ளலாம்). வகுப்பு பெரும்பாலான வாக்குகளைப் பெற்ற அந்த நான்கு சட்டங்களையும் ஏற்றுக்கொள்ளும். அவை எல்லா மாணவர்களாலும் ஒப்பமிடப்பட்ட ஒரு சுவரொட்டியில் எழுதப்படும் வகுப்பறையில் எல்லேருக்கும் தெரியக்கூடிய முறையில் அது வைக்கப்படும்.

---

# 6.6 மனித உரிமைப் பதாகை

**இலக்கு**

*மாணவர் தனிமனித உரிமைகள் பற்றி ஆழமாகக் கலந்துரையாடி ஆராய்வர், அப்படிச் செய்வதனூடாக ஆக்கத் திறன்களையும் வளர்த்துக் கொள்வர்.*

வகுப்பு 4 - 9

45 மணித்துளிகள்

**கருவிகள்:**
பெரிய பணித்தாள்கள். ஊறல் பேனாக்கள், கத்தரிக்கோல், ஒட்டும் பசை, பழைய புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், படங்கள், ஐரோப்பிய மனித உரிமைகள் மாநாட்டு பிரதிகள் அல்லது மனித உரிமைகள் பொதுப் பிரகடனம், (இணையத்தளத்தில் இருந்து பெற முடியும்.)

**நடைமுறை:**


- மாணவர் நான்கு பேர் கொண்ட குழுக்களாக அமர்வர்.
- ஆசிரியர் ஒவ்வொரு குழுவுக்கும் மனித உரிமைகளிலிருந்து ஒவ்வொரு சட்டப் பகுதியை வழங்குவார். மாற்றாக, மாணவர் தாங்களே எந்தச் சட்டப் பகுதியை எடுப்பது என்று தீர்மானிப்பர்.
- ஒவ்வொரு குழுவும் தங்களது மனித உரிமை பற்றிய பதாகையை உருவாக்குவர். பதாகை பின்வரும் பண்புகளை உள்ளடக்கும்:
  - குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனித உரிமைச் சட்டப் பகுதியின் தலைப்பு
  - ஐரோப்பிய மனித உரிமை வழக்கம் அல்லது மனித உரிமைகளின் பன்னாட்டு அறிவிப்பிலிருந்து தொடர்புற்ற எழுத்துருப்பகுதி.
  - அக் குறிப்பிட்ட மனித உரிமையைக் குறியீடாக்கும் ஒரு படம் (குறியீடு, படக்குறியீடு) (எ.கா. தன்னிலையாக இயங்கும் சக்கரம், கட்டற்ற புலப்பாடு மற்றும் பேச்சுக்காக வாய் அல்லது உதடுகள்).
- உயர் வகுப்புக்களுக்கு: தெரிவு செய்யப்பட்ட மனித உரிமை பற்றிய ஒரு பகுப்பாய்வு பின்வருவன தொடர்பாக:
  - இந்த உரிமைக்கு உரித்துடைய மக்கள் மற்றும் இந்த உரிமை யாருக்குக் குறிப்பாக இன்றியமையாதது;
  - அதன் உள்ளடக்கம் (உரிமை எதனை பாதுகாக்கின்றது மற்றும் உறுதிப்படுத்துகின்றது);
  - அதனை முறையே செயற்படுத்தலுக்கும் நடைமுறைப்படுத்தலுக்குமான வழிகள்.
  - இந்த உரிமை மீறல்கள் பற்றி பெறக்கூடிய எடுத்துக்காட்டுகள்.
- மாணவர் தமது பதாகைகளை அளிக்கை செய்து, வகுப்புடன் ஒரு கலந்துரையாடலை நடத்துவர்.

# 6.7 சிறுபான்மையினர்

**இலக்கு**

*ஒதுக்குப்படுதல் எனும் உணர்வு ஒரு சமூக அங்கத்தவர்களால் எப்படி "வெளியாட்கள்" பார்க்கப்படுகிறார்கள் என்பதுடன் தொடர்புடையது மட்டுமல்லாது ஒரு குழுவில், எப்படி ஒருவர் ஏற்றுக் கொள்ளப்படுகின்றார் என்பதுடன் பெரிதும் தொடர்புற்றது என்பது பற்றி மாணவர் அறிந்து கொள்வர்.*

வகுப்பு 7 - 9 | 45 மணித்துளிகள்



**கருவிகள்:**
ஒவ்வொரு குழுவுக்கும் எதிர்நிலை தன்னிலை கூற்றுக்களுடன் (அடுத்தபக்கம் பார்க்கவும்) உள்ள ஒரு தொகுதி அட்டைகள் (முன்னரே சிறுதுண்டுகளாக வெட்டப்பட்டன) ஒவ்வொரு குழுவுக்கும் இரு பெரிய தாள்கள் (A3 / A2) ஒன்று "உணர்ச்சிகள்" என்னும் தலைப்புடன் மற்றையது "எதிர்வினைகள்" என்னும் தலைப்புடன்.

**குறிப்புகள்:**

தொடரின் உள்ளடக்கம் ஒரு வகை நாடகமாக அமைகிறது, இதனால் மாணவருக்கு தொடக்கத்தில் தாம் யாரை, எந்தக் குழுவைக் காட்சிப்படுத்தப் போகின்றார்கள் என்று தெரியாது இல்லாவிட்டால் ஒரே கிசுகிசுப்பு வந்து சேர்ந்துவிடலாம். நாடக நிகழ்வு நேரத்துக்கேற்ற அமைப்பு நிலைப்பாடுகள் மற்றும் அறிவுறுத்தல்கள் தெளிவாகவும், உள்வாங்கக்கூடியவையாகவும் விளங்கப்படுத்தப்படல் வேண்டும். இந்த அமைப்புக்குள் மாணவருக்கு போதுமான அளவு கட்டற்றநிலை உண்டு.

---

**நடைமுறை:**

- வகுப்பு, நான்கு மாணவர்கள் கொண்ட குழுவாக பிரிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு குழுவும் தன்னிலையான அட்டைகளையும் (கீழே பார்க்க), ஒரு பென்சிலையும் "உணர்ச்சிகள்" என்ற தலைப்புடைய ஒரு தாள் துண்டையும் பெற்றுக்கொள்ளும். ஒவ்வொரு குழுவும் தாளில் குழுவின் எதிர்வினைகளைப் பதிவுசெய்ய ஒருவரைத் தெரிவு செய்யும். (இன்னொரு வகையில், ஒவ்வொரு மாணவரும் தன் கூற்றுக்களைப் பதிவு செய்கின்றார்).
- இந்தப் பயிற்சியில் அவர்கள் "தங்களை பிரதிபலிக்காமல் போவதில்லை, ஆனால் ஒரு சிறுபான்மைக் குழுவின் உறுப்பினர்களையே" என்று ஆசிரியர் பின்னர் மாணவருக்குச் சொல்லுவார். முதற்படியாக தன்னிலையான துண்டுகளின் அடிப்படையில் தங்கள் குழுவின் வலிமைகள் மற்றும் தரங்கள் பற்றியும் குழுவின் உறுப்பினர்களாக தாம் எப்படி உணர்கிறார்கள் என்பது பற்றியும் மனங்கொள்ளவேண்டும். தொடர்புள்ள விடைகளை குழுவினுள் கலந்துரையாடுவர், அவை "உணர்ச்சிகள்" என்ற தலைப்புடைய தாளில் பதியப்படும்.
- ஒவ்வொரு குழுவும் 6 எதிர்மறை அட்டைகளும் "எதிர்வினைகள்" எனும் தலைப்புள்ள பணித்தாளையும் பெறும். திறப்புவினா இந்தமுறை பின்வருமாறு அமையும்: எதிர்நிலை அட்டைகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள எதிர்நிலைப் பட்டறிவின் ஒளியில் உங்கள் குழுவின் உறுப்பினர்களாக எப்படி நடந்துகொள்வீர்? விடைகள் "எதிர்வினைகள்" என்னும் தலைப்புடைய தாளில் பதியப்படும்.
- முழுமையான வகுப்பில்:
  - 'உணர்ச்சிகள்' என எழுதப்பட்ட தாளில் தாம் ஆவணப்படுத்திய உணர்ச்சிகள் பற்றி ஒவ்வொரு குழுவும் அறிக்கையிடும். தொடர்புள்ள வினாக்கள் தெளிவு படுத்தப்பட்டு கருத்துரைகள் சுருக்கமாக கலந்துரையாடப்படும்.
  - 'எதிர்வினைகள்' என எழுதப்பட்ட தாள்கள் தொடர்பாகவும் அதே மாதிரியான நிலைப்பாடே. வகுப்பு, உருப்படியான செயற்பாடுகளையும் குழுக்களுக்கிடையேயும் குழுக்களுக்குள்ளுமான வன்முறைச் செயற்பாடுகளையும் இனங்காணவேண்டும்.
  - குழுக்களாகப் பணி செய்வது பற்றிய வினாக்கள்: சிக்கல்கள் எங்கு இடம்பெற்றன, ஏன்? உங்களையும் மற்றவர்களையும் பற்றி என்ன கற்றுக் கொண்டீர்கள்?
  - வினாக்களும் தூண்டிகளும்: நீர் சார்ந்துள்ள சிறுபான்மைக் குழுக்களுக்கும் நீர் அறிந்திருக்கக்கூடிய மற்றக் குழுக்களுக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்த முடியுமா?
- இறுதிச்சுற்று: அட்டைகளில் விவரிக்கப்பட்ட மக்களுடன் எந்த இனக்குழுவைச் சுட்டலாம்? (தீர்வு: இங்கு சுட்டப்படும் மக்கள் முறையே பயணிக்கும் நாடோடிகள் அல்லது உரோம மக்கள் ஆவர்).

## தன்னிலை (இடப்பக்கம்) எதிர்மறை (வலப்பக்கம்) கருத்துகள் கொண்ட அட்டைகள்

| | |
|---|---|
| எங்கள் வீடுகள் மற்றைய மக்களின் வீடுகள்போல அல்ல. அவை எங்களுக்குச் சிறப்பானவை, நாம் அவற்றை விரும்புகிறோம். நாம் பாரம்பரியங்களைப் பேண விரும்புகிறோம். | தொலைக்காட்சியும் அச்சு ஊடகங்களும் எங்களைப் பற்றிய உண்மைகளைக் கூறுவது இல்லை. நாங்கள் ஒரு சிக்கல் என்றே அவை கூறும். பல விடயங்கள் பற்றிய எங்கள் நோக்கினை அளிக்கை செய்ய அவை எங்களுக்கு ஒரு வாய்ப்பினையே தருவதில்லை. |
| நாங்கள் திறன் உள்ளவர்கள், பலதிறமைகள் எங்களிடம் உண்டு. நாங்கள் பல்வகைத் தன்மையான உழைப்பு மற்றும் கைவினை வேலைகளைச் செய்கிறோம். நாங்கள் வாழும் நாட்டுக்கு எமது உழைப்பால் ஒரு பெறுமதியான பங்களிப்பை வழங்குகிறோம். | சில மனிதர் எம்மைக் கேடான முறையில் நடத்துவதுடன் எங்களைத் தூற்றுவார்கள். சில வேளைகளில் எவ்வித காரணமுமின்றி நாம் தாக்கப்படுகிறோம். அண்மைக்காலத்தில் ஆயிரக்கணக்கான எங்கள் மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். |
| கடந்த காலத்தில் பல வீரச் செயல்களை நம் மக்கள் நிறைவேற்றி உள்ளனர். எமது வரலாற்றை நினைவு கொள்ள விரும்புகின்றோம். | நல்ல தண்ணீர் எமக்கு அருமையாகவே கிடைக்கும். எங்கள் குப்பைகள் அகற்றப்படுவதில்லை. |
| நாங்கள் யாரையும் சார்ந்தவர்கள் அல்ல. எங்கள் நலன்களை நாமே கண்காணிக்க விரும்புகிறோம். நாங்கள் யாருக்கும் கடனாளிகள் இல்லை. | நாங்கள் சுகவீனமுற்றபோது பல மருத்துவர்கள் எமக்கு மருத்துவம் செய்ய விரும்புவதில்லை. சமூக நலன்களை நாம் பெறுவது கடினமாயுள்ளது. |
| நாங்கள் கூடிக் கதைபேசிப் பாட விரும்புகிறோம். சமூகத்தை முன்னேற்றி வளர்ப்பது இன்றியமையாதது என்று நாங்கள் நினைக்கிறோம். (விரிந்த) குடும்பம் என்பது எமக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய நிறுவனம். | மக்கள் தங்களுக்கு அருகில் எம்மை நெருங்க விடுவதில்லை. நாம் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் பலர் எங்களுக்கு வேலை தருவதில்லை. |
| நாம் குடும்பத்துடனும் நண்பருடனும் அருகில் வாழ விரும்புகின்றோம். எமது சமூகத்தில் உள்ள மூத்தவர்களை நாம் நன்கு கவனித்து பாதுகாப்பளிக்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக நாம் நம்முடைய குழந்தைகளை விரும்புகிறோம். | நாம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ்வதால் சிலவேளைகளில் காவல்துறையினருடனும் உள்ளூர் பணித்தலைவர்களுடனும் சிக்கல் ஏற்படுகிறது. |

# திறன்பகுதிகளுக்கான கற்பித்தல் மதியுரைகள் பற்றிய கண்ணோட்டம்

## முழுக்கவனத்துடன் கற்பித்தலுக்கான மதியுரைகள்

### காட்சித் திறன்:

| | | |
|---|---|---|
| **1.1** அது நான் * | **1.3** நானும் மற்றவர்களும் | |
| **2.1** காற்றோடு போனது * | **2.4** எனது தாயக நிலங்கள் தன்வரலாற்று உரைகள் * | **2.7அ** என் குடும்பத்தின் குடிபெயர்வுக்கதை** |
| **3.2** இருமொழி அல்லது பன்மொழி எழுத்துக் கருத்திட்டங்கள் ** | **3.5** எங்கள் மொழியிலும் பிறமொழிகளிலும் பேச்சுமொழிகள் * | |
| **4.3** செயற்றிறனான கேட்டல் ** | | |
| **5.1** எல்லாம் சரிதானே! உண்மையாகவா? ** | **5.3** கூடாத செயல்களுக்கு நல்ல காரணங்கள்? * | **5.6** எனது மோதல் வெப்பமானி * |
| **6.1** ஒரு மலர்க் கொத்து** | **6.4** பலூன் பறப்பு | **6.6** மனித உரிமைப் பதாகை * |

## முழுக்கவனத்துடன் கற்பித்தலுக்கான மதியுரைகள்

### பிரதிபலிப்புத் திறன்:

| | | |
|---|---|---|
| **1.2** உட்பக்கப் பார்வை – வெளிப்பக்கப் பார்வை * | **1.4** என்னைப் பறக்க விடுங்கள் ** | **1.6** தன் அடையாள மூலக்கூறு * |
| **2.2** எனது வகுப்பறைக்குள் புலம்பெயர் கதைகள் ** | **2.5** நேற்று – இன்று – நாளை | **2.7ஆ** எமது மாவட்டத்தில் பண்பாட்டுப் பல்வகைத் தன்மை ** |
| **3.1** மொழி வெளிக்கோடுகள் | **3.3** மொழி – தன்வரலாற்றுக் கருப்பொருள்கள் | **3.6** பல்பண்பாட்டுக் கேள்விகளுக்கான தொடர்பு |
| **4.1** இங்கு ஏதோ சரியில்லை ** | **4.4** பார்க்கச் செல்லல் * | **4.6** பண்புக்கூறுகள் ** |
| **5.4** அப்படித்தான் நாங்கள் அதைச் செய்கிறோம்! ** | | |
| **6.2** எல்லாம் வேறுபட்டவை – எல்லாம் ஒரே மாதிரி * | **6.7** சிறுபான்மையினர் | |

## முழுக்கவனத்துடன் கற்பித்தலுக்கான மதியுரைகள்

### தொடர்பாடலைக் கையாளும் திறன்:

| | | |
|---|---|---|
| | **1.5** உள்ளடக்கப்பட்டதும் வெளியேற்றப்பட்டதும். | **1.7** ஒற்றுமையே பலம் |
| **2.3** புலம்பெயர் தன்வரலாறு எனது வலுவின் ஊற்று * | **2.6** நான் வரலாறு எழுதுகிறேன். | **2.7இ** குடிபெயர்வு எங்கள் எல்லோரையும் ஆவலுடையோராக ஆக்குகின்றது! ** |
| **3.4** பல்வேறு மொழிகளில் இலத்திரனியல் ஊடகத்தினைப் பயன்படுத்துதல் * | **3.7** மொழிப்பயன்பாடு: வேறுபட்டது, சூழ்நிலை சார்ந்தது * | |
| **4.2** மொழியினால் வழியைச் சுட்டுக ** | **4.4** பார்க்கச் செல்லல்* | **4.6** பண்புக்கூறுகள்** |
| **5.4** அப்படித்தான் நாங்கள் அதைச் செய்கிறோம்! ** | **5.5** அமைதியாக இருத்தல் – அல்லது புத்திசாலி விட்டு நீங்குகிறார் * | **5.7** சிக்கலைத் தீர்க்க 6 படிகள் – வகுப்புத்தோழர் மோதல்கள் ** |
| **6.2** எல்லோரும் வேறுபட்டவர் – எல்லோரும் ஒரே மாதிரி * | **6.7** சிறுபான்மையினர் | |

விளக்கம் : வழக்கமான வகுப்பறைக் கற்பித்தலுடனான கூட்டுறவுக்கு * = பொருத்தமானது / ** = மிகப்பொருத்தமானது

# நூற்பட்டியல்


Alle anders, alle gleich (1998): Education pack. Ideen, Quellen, Methoden und Aktivitäten für die informelle interkulturelle pädagogische Arbeit. Strasbourg: Council of Europe Publishing.

Auernheimer, Georg (2013): Interkulturelle Kompetenz und pädagogische Professionalität. Wiesbaden: Springer.

Brander, Patricia et al. (2012): Compass. Manual for human rights education with young people. Strasbourg: Council of Europe Publishing.

Broschüre Kinderrechte: https://www.stadt-zuerich.ch/ssd/de/index/volksschule/publikationen_broschueren/kinderrechte.html

Datenbank Mehrsprachigkeit der PH Zürich: http://www.phzh.ch/de/ipe/Projekte-und-Mandate/Europaweite-Projekte/Datenbank_Mehrsprachigkeit-EU-Projekt_Amuse/Datenbank-Mehrsprachigkeit

Gudjons, Herbert; Birgit Wagener-Gudjons; Marianne Pieper (2008): Auf meinen Spuren. Übungen zur Biografiearbeit. Bad Heilbrunn: Klinkhardt.

Gollob, Rolf; Peter Krapf; Wiltrud Weidinger (ed.) (2010): Growing up in democracy. Lesson plans for primary level on democratic citizenship and human rights. Strasbourg: Council of Europe.

Gollob, Rolf; Peter Krapf; Wiltrud Weidinger (ed.) (2008): Teaching democracy. A collection of models for democratic citizenship and human rights education. Strasbourg: Council of Europe.

Gollob, Rolf; Peter Krapf (ed.) (2007): Exploring Children's Rights. Nine short projects for primary level. Strasbourg: Council of Europe.

Gollob, Rolf et al. (2007): Politik und Demokratie – leben und lernen. Politische Bildung in der Schule. Grundlagen für die Aus- und Weiterbildung. Bern: Schulverlag.

Heringer, Hans Jürgen (2012): Interkulturelle Kompetenz. Ein Arbeitsbuch mit interaktiver CD und Lösungsvorschlägen. Tübingen und Basel: A. Francke Verlag.

Holzbrecher, Alfred (1999): Subjektorientierte Didaktik. Lernen als Suchprozess und Arbeit an Widerständen. Die Deutsche Schule. Zeitschrift für Erziehungswissenschaft, Bildungspolitik und pädagogische Praxis, 5. Beiheft, p. 141–168.

Jennewein, Engelbert et al. (2011): Gefühle zeigen – Gewalt vermeiden. Soziales Lernen und konstruktive Konfliktbearbeitung. Donauwörth: Auer.

Landesinstitut für Lehrerbildung und Schulentwicklung (LI): Trainingshandbuch Lernförderliche Gruppenentwicklung. Link: http://li.hamburg.de/contentblob/3567428/data/download-pdf-trainingshandbuchlernfoerderliche-gruppenentwicklung.pdf

Losche, Helga (2005): Interkulturelle Kommunikation. Sammlung praktischer Spiele und Übungen. Augsburg: ZIEL.

Menschenrechte und Menschenrechtsbildung, Link: http://www.humanrights.ch oder: http://www.phlu.ch/dienstleistung/zentrum-menschenrechtsbildung

Schader, Basil (2013): Sprachenvielfalt als Chance. Das Handbuch. Hintergründe und 101 praktische Vorschläge für den Unterricht in mehrsprachigen Klassen. Zürich: Orell Füssli Verlag.

UNICEF, Praxisbuch Kinderrechte (2010): Eine Werkstatt für Kinder von 8 bis 12 Jahren. Link: http://www.unicef.be/kids/IMG/pdf/praxis-buch_kinderrechte_komplett.pdf

Website "Schule mehrsprachig" des österreichischen Bundesministeriums für Bildung und Frauen: http://www.schule-mehrsprachig.at

Website des Projekts Marille: Mehrheitssprachenunterricht als Basis für plurilinguale Erziehung: http://marille.ecml.at/Practiceexamples/Examples-frommajoritylanguageclassrooms/tabid/1847/language/de-DE/Default.aspx

கருத்துகள், பட்டறிவுகள், ஆலோசனைகள்:

"பாரம்பரிய மொழிக் கல்விக் கருவிகள்" தொடர் ஆறு தொகுதிகளைக் கொண்டது, பாரம்பரிய மொழிக் கல்வியின் (பா.மொ.க, சுவிற்சர்லாந்தில்: HSK) தரத்தினைக் கூட்டுதற்காகவும் வழமையான வகுப்பறைக் கல்வியுடன் இதன் இணைப்புத் தொடுப்பினை மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்டது.

இவ்வெளியீடுகள் எதிர்கால மற்றும் தற்போதைய பாரம்பரியமொழி ஆசிரியர்களின் திட்டவட்டமான வேண்டுகைகளையும் அவர்களின் பிறந்த நாடுகளில் அல்லது குடியேற்ற நாடுகளில் துணைசெய்யும் நிறுவனங்களையும் பற்றிக் கூறுகின்றன. அடித்தளம் நூல் (கைநூலும் பணிநூலும்: அடித்தளங்களும் பின்னணிகளும்) மேலை மற்றும் வடக்கு ஐரோப்பிய நாடுகளில் தற்போதைய ஆசிரியக்கலை, கற்பித்தல் மற்றும் நெறிமுறை பற்றிய திறவுப் பண்புகளை உள்ளடக்குகின்றன.

பணிநூல்கள் கற்பித்தல் பரிந்துரைகளையும் பல்வேறு அறிவுறுத்தல் பரப்புகளுக்கான (பாரம்பரிய மொழியில் எழுத்து ஊக்குவிப்பு, முதலியன) தூண்டிகளையும் திட்ட மாதிரிகளையும் வழங்குகின்றன. இவ்வெளியீடுகள் தொடக்கத்திலிருந்தே கற்பித்தல் மதியுரைகளின் நடைமுறை இணக்கப்பாட்டினையும் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்காக பா.மொ.க ஆசிரியர்களின் நெருக்கமான உடனுழைப்புடன் உருவாக்கப்பட்டன.

தொடர் பின்வரும் வெளியீடுகளை உள்ளடக்குகின்றது:




"பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்" வெளியீடுகள் ஜெர்மன், ஆங்கிலம், அல்பானியன், பொஸ்னியன் / குரோசியன் / சேர்பியன் / போர்த்துகீஸ், துருக்கீஸ் மற்றும் தமிழ் ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளன. இவை சூரிச் ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டுக் கல்விக் கருத்திட்டங்களின் நடுவகத்தினால் (ப.க.க IPE) வெளியிடப்பட்டன.